# வள்ளுவர் சொல்லமுதம் - 3

# வள்ளுவர் சொல்லமுதம்

[மூன்றும் புத்தகம்]

★

ஆசிரியர் :

வித்துவான், திருக்குறள்மணி, செஞ்சொற்புலவர்,

திரு அ க நவநீதகிருட்டிணன்

ம தி தா இந்துக்கலாசாலை,

திருநெல்வேலி

★

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்,

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

1976

அங்கப்ப பிள்ளை நவநீதகிருட்டிணன் (1921)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம் திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ௮௬௰

முதற்பதிப்பு : ஜூலை 1956
மறுபதிப்பு : ஏப்ரல் 1976

# VALLUVAR SOLLAMUTHAM—III

அப்பர் அச்சகம், சென்னை-600 001. (1/1)

# பதிப்புரை

வள்ளுவர், ஓர் அறிவூற்று. அவ்வூற்றில் ஊறிச் சுரந்த தெளிநீர் ஊற்றுக் கால்களை ஏனைய நூல்கள். வள்ளுவர் காட்டிய வழியே வழி; மற்றோர் வகுத்தன, காலத்தாற் படாது செல்வனவாம். எனவே, வள்ளுவர் ஒருவரே புலவர். இதனாலே, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது' நம் தமிழ்நாடு; தாய்நாடு. நம் தாய்நாடு, ஏனைய சேய் நாட்டிற்கும் இவரை உரிமையாக்கிற்று.

அமிழ்து, நரை திரை மூப்பு பிணி நீக்கி உடற்குச் செம்மை தரும் அரிய மருந்து. வள்ளுவர் அருளிய திருக்குறட் சொல்லமிழ்து, உடற்கன்றி உயிரினது அறியாமைப் பிணிப்பு நீக்கி, அறிவொளி கான்றெழுதரும் காளாமணி விளக்கு. இதன் பெருமையை அக்காலத்து ஆன்றோரும், 'சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த இருவினைக்கு மாமருந்து' எனப் போற்றுவாராயினர்.

இத்தகைய வள்ளுவர் வாய்மொழிக் கடலின் சொல்லமுதத்தை மொண்டு கொண்டெழுந்து அறிவு வானிலே நிற்கும் வித்துவான், திரு. அ. க. நவநீதகிருட்டிணன் என்னும் மாமேகம், உலகெலாம் பருகப் புத்தமிழ்தமாகப் பொழிந்துளது.

இதற்கு 'வள்ளுவர் சொல்லமுதம்' எனப் பெயரமைத்து நூலுருவாக்கி அவ் வான் அமிழ்தத் தலைப்பெயலாக முதலிரண்டு நூல்கள் முன்னரே வெளிவந்துள்ளன. அதுபோல் வழிப்பெயலாக இம் மூன்றாம் புத்தகமும் வெளிவருகின்றது. இதனையும் அன்பர்கள் வாங்கிக் கற்றுப் பயன் பெறுவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# அணிந்துரை

தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் அருளிய திருக்குறள் தெள்ளமுதைப் பருகும் ஆர்வம் பெருகிவரும் இந்நாளில், அதன் சுவையை நன்றாக உண்டு கண்ட தண்டமிழ்வாணர் பலர், தாம் துய்த்த இன்பத்தைப் பிறரும் பெற்று மகிழுமாறு அரிய நூல்களாக ஆக்கித் தருகின்றனர். சில்லாண்டுகளாக வள்ளுவர் சொல்லமுதைப் பருகி மகிழும் பேறு பெற்ற எளியேற்கும் அத்தகைய பணியைப் புரிய வேண்டுமென்ற பெருவிழைவு எழலாயிற்று. அவ்விழைவைப் பெரிதும் தூண்டி அரிதின் வளர்த்துவரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளரும் சைவத் தமிழ்ப் பெருங்காவலருமாகிய திருவாளர் வ. சுப்பையாப் பிள்ளையவர்களின் பெருமுயற்சியால் 'வள்ளுவர் சொல்லமுதம்' இரு நூல்களாக இதற்கு முன்னர் வெளிவரலாயிற்று. இது மூன்றாவது நூலாக வெளிவந்துள்ளது. முன்னைய இரண்டையும் ஏற்றுப் போற்றிய தமிழுலகம் இதனையும் ஏற்றுப் போற்றுமென்னும் உறுதியுடையேன். எளியேற்கு இப் பணியில் ஊக்கமூட்டிவரும் உயர்ந்த நோக்கமுடையார் அனைவர்க்கும் நன்றி கலந்த வணக்கம்.

தமிழ் வெல்க !

அ. க. நவநீதகிருட்டிணன்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | நாடும் அரசும் | 1 |
| உ. | உழவும் உயர்வும் | 15 |
| ங. | அவையும் ஆற்றலும் | 24 |
| ச. | இன்பமும் துன்பமும் | 38 |
| ரு. | செல்வமும் நல்குரவும் | 49 |
| சா. | குடிமையும் கயமையும் | 63 |
| எ. | கள்ளும் கவறும் | 76 |
| அ. | குற்றமும் சுற்றமும் | 86 |
| கூ. | வினையும் துணையும் | 99 |

# வள்ளுவர் சொல்லமுதம்

[மூன்றாம் புத்தகம்]

---

## க. நாடும் அரசும்

நிலத்தை நால்வகையாகப் பகுப்பர் நல்லறிஞர். அவை நாடு, காடு, மேடு, பள்ளம் என்று சொல்லப்படும். இயற்கை யமைப்பிற்கேற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றும் பகுப்பதுண்டு. இவற்றுள் மக்கள் மகிழ்ந்து வாழ்தற்குரிய நிலப்பகுதி நாடேயாகும். நாடு என்ற சொல்லே அழகுற அமைந்துள்ளது. 'விரும்பு' என்பது அச் சொல்லின் பொருளாகும். எல்லோரும் விரும்புதற்குரிய பெருவளம் படைத்த நிலமே நாடு என்று நவிலும் தகுதியுடையது. மக்கள் விரும்பி உறையும் நிலப்பகுதிக்குத், தக்க வகையில் ஆராய்ந்து பெயரமைத்த ஆன்றோர் திறத்தை என்னென்பது! இக் கருத்தை வள்ளுவர் சொல்லமுதமாகிய குறட்பா இனிது விளக்கும்.

> 'நாடென்ப நாடா வளத்தன, நாடல்ல
> நாட வளந்தரும் நாடு'

நாட்டில் வாழும் மக்கள் நாடி வருந்தாமல் அவர்பால் தானே அடையும் செல்வம் ஒரு நாட்டில் தழைத்தோங்கி இருக்க வேண்டும். அத்தகைய நாட்டையே நல்லறிவாளர் சிறந்த நாடென வியந்து போற்றுவர். பெரிதும் தேடி வருந்த அரிதாகச் செல்வம் அடைவிக்கும் நாடுகள்

நாடாகா என்றே நவின்றருளினர் திருவள்ளுவர். நாட்டிற்கு அமைய வேண்டிய நல்லியல்புகள் எல்லா வற்றையும் வள்ளுவர் தமது நூலில் நாடு என்ற அதிகாரத்தில் விரித்துரைத்துள்ளார். நாட்டில் என்றும் குன்றாத விளைச்சல் இருத்தல்வேண்டும். செந்தண்மை பூண்ட அந்தணாளரும் முற்றுந் துறந்த முனிவரும் வாழ்தற்கு இடமாக நாடு திகழவேண்டும். கொடுக்கக் குறையாத செல்வப் பெருக்கமும் இருக்கவேண்டும். கலத்தினும் காலினும் சென்று அரும்பொருள் ஈட்டிவரும் பெருவணிகர்க்கு உறைவிடமாக ஒளிரவேண்டும். பிற நாட்டவரும் அடைய விரும்பும் அளவிறந்த பெரும் பொருளைப் பெற்றிருக்கவேண்டும். பெருமழையாலோ மழையின்மையாலோ கேடுறாத நாடாகத் திகழவேண்டும். அண்டை நாட்டு அரசர்தம் வெறுப்பிற்கு உள்ளாகாத நாடாக விளங்கவேண்டும்.

அயலே அமைந்த நாடுகளில் வாழ்வார் ஒருகால வறுமையால் வாடித் தன்கண் நாடி வந்தால் அவ் அயலவரைத் தாங்கும் பாங்கும் அமையவேண்டும். இறைப் பொருள் முழுதையும் முழுமனத்துடன் மன்னர்க்குக் கொடுத்து அரசினைப் பேணும் குடிமக்கள் அந் நாட்டில் வாழவேண்டும். மிக்க பசியும், மெலிவிக்கும் நோய்களும், புறத்தே இருந்து புன்கண் செய்யும் பகையும் நாட்டில் இருத்தல் கூடாது. கொள்கையால் மாறுபட்ட பல்வேறு குழுவினர், உடனிருந்தே அரசினை அலைத்து உலைக்கும் உட்பகையாளர், வேந்தனை அழித்தற்கு வேளையை எதிர் நோக்கும் கொல்வினைக் கொடியராய குறுநில மன்னர் ஆகியோர் நாட்டில் இருத்தல் தகாது.

இத்தகைய நல்லியல்புகள் எல்லாம் ஒருங்கமைந்து பகைவரால் கெடுக்க முடியாத பெருக்கமான வளமும்

பெற்றதே பெருமை மிக்க நாடு. அரிதாகக் கெட நேர்ந்தாலும் அப்பொழுதும் தனது இயற்கை வளங் குன்றாத நாடே தலையாயது என்பார் திருவள்ளுவர்.

'கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை'

என்பது அவர் சொல்லமுதமன்றோ! கோசல நாட்டின் குன்றாத இயற்கை வளத்தைக் கூறவந்த கம்பர் பெருமான்,

'கதிர்படு வயலினுள்ள கடிகமழ் பொழிலினுள்ள
முதிர்பல மரத்தினுள்ள முதிரைகள் புறவினுள்ள
பதிபடு கொடியினுள்ள படிவளர் குழியினுள்ள
மதுவன மலரிற்கொள்ளும் வண்டென மள்ளர்கொள்வார்'

என்று கட்டுரைத்த கவிநலம் கற்று இன்புறத் தக்கதாகும். கோசல நாட்டில் உழவர்கள் என்றும் திரளாகச் சென்று நிலத்தில் விளைந்த நெற்கதிர்களை அறுத்து வருவர். நறுமணப் பொழில்களில் புகுந்து தருக்களில் காய்த்து முதிர்ந்த கனிகளைப் பறித்து வருவர். புன்செய்க் காடுகளில் நன்குவிளைந்த தானிய மணிகளைத் திரட்டிக் கொணர்வர். கொடியில் தோன்றிய காய்கனிகளையும், நிலத்தின் அடியில் விளைந்த கிழங்கு வகைகளையும் ஒருங்குசேர்த்து வருவர். உணவிற்குரிய இப் பொருள் வகைகளெல்லாம் மிக்க உழைப்பின்றித் தக்காங்கு வளமுடன் கிடைத்தலால் அந் நாட்டு உழவர், மலரில் ஊறும் தேனை மகிழ்வுடன் கவரும் வண்டுகளைப் போல ஆர்வமுடன் சென்று கொள்வாராயினர்.

தலையாய நாட்டைத் தாங்கி நிற்கும் உறுப்புகள் மூன்றாகும். புனலும் மலையும் அரணும் நாட்டின் நல் லுறுப்புகள் என்றார் வள்ளுவர். ஒரு நாட்டிற்கு மூவகை

யான புனல் வளம் வேண்டும் என்று புகன்றார். கிணற்றில் ஊறும் நீராகிய கீழ்நீர், ஏரி குளங்களில் மழை வளத்தால் பெருகும் மேல்நீர், மலையினின்றும் வான் பொய்ப்பினும் தான் பொய்யாது பெருகிவரும் ஆற்று நீர் ஆகிய மூவகையான நீர்வளம் நாட்டிற்குரிய நல்லுறுப்புகளுள் ஒன்றாகும். நாட்டில் வாய்ப்பாக அமைந்த வளமான மலை மற்றோர் உறுப்பாகும். அதனை 'வாய்ந்த மலை' என்று குறிப்பிட்டார் வள்ளுவர் பெருமான். நாட்டின் நடுவிடத்தே மலை அமைதல் கூடாது; ஒரு புறத்தே விலகியிருத்தல்வேண்டும். அது பற்றியே மலைக்கு விலங்கல் என்றொரு பெயரும் வழங்குவ துண்டு. அங்ஙனம் ஒருபால் விலகி அமைந்த மலை அளவிட முடியாத வளமுடையதாய் ஒளிருதல்வேண்டும். நாட்டில் நீர் வறந்து போனாலும் தான் நீர்வளத்தைச் சுரந்து கொண்டிருக்கும் வண்மையுடைய மலையாக விளங்க வேண்டும். மலை, மாரிக்காலத்தில் உண்ட நீரைக் கோடைக்காலத்தில் உமிழும் இயல்புடைய தன்றோ! இத்தகைய வாய்ப்புடைத்தாய் அமைந்த வளந் தரும் நன்மலை, நாட்டின் ஓர் உறுப்பாவதில் என்ன வியப்பு! பகைவரால் அழிக்க முடியாத உறுதியான அரண், மற்றோர் உறுப்பாக மதிக்கப்படும். இத்துணைக் கருத்துகள் பொதுளப் பொய்யில் புலவர் புகன்றருளிய குறட்பா எத்துணைச் சிறப்பு வாய்ந்ததாகும்!

'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்(கு) உறுப்பு'

என்பது அவர் சொல்லமுதமன்றோ!

இனி, நாட்டிற்கு அழகு செய்யும் அணிகளென ஐந்து இயல்புகளைக் குறிக்கிறார் திருவள்ளுவர்.

நோயில்லாமை, செல்வம், விளைச்சல், இன்பம், காவல் என்ற ஐந்தும் நாட்டிற்கு நல்லணிகள் என்று சொல்லு வார். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று நம் முன்னோர் கொண்டாடுவர். மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத செல்வம் பல்வகையாலும் வந்து குவிதல்வேண்டும். ஒன்று, நூறாக விளைக்கும் உயர்ந்த நிலவளம் அமையவேண்டும். ஆன்றோர் வாழ்வும், அருள் பெருக்கும் விழவும் இடையறாது நிகழ்ந்து மக்கட்கு இன்ப மூட்டுதல், நாட்டிற்கு மிக்க அழகே நல்குவதாகும். ஆற்றல் சான்ற அரசனாலும் அவன்பால் பேரன்பு பூண்ட நன்மக்களாலும் வலியமைந்த அரணாலும் உளதாகும் அரிய காவல் மற்றுமோர் அணியாக மதிக்கப்படுகின்றது.

'பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

ஒரு நாட்டில் தக்கார் சிலர் வாழ்தல் மிக்க பெரு மையை அந்நாட்டிற்குத் தருவதாகும். நிலத்தின் நலத்தை உணர்த்த வந்த தமிழ் மூதாட்டியார், 'அந் நிலம் ஒருபால் நல்ல நாடாகவும் இருக்கலாம்; ஒருபால் காடாகவும் கிடக்கலாம்; ஒருபால் மேடாகவும் அமைய லாம்; ஒருபால் வெறும்பள்ளமாகவும் காணலாம்; அஃது எவ்வாறு அமையினும் குறைவில்லை; எவ்விடத்தே ஆண் மக்கள் அருங்குணம் படைத்த நல்லாராக உள்ளாரோ அவ்விடமே நலமுடைய நாடு நன்கு அமைகின்றது' என்று அறவுரை வழங்கியருளினார்.

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்பது அமுத நெல்லிக்கனி உண்ட தமிழ் மூதாட்டியின் அருண்மொழியாகும்.

திருமுனைப்பாடி நாட்டின் சிறப்பைக் குறிப்பிட வந்த தெய்வப் புலமைச் சேக்கிழார், 'அறந்தரு நாவுக்கரசரும் ஆலாலசுந்தரரும் அவதரித்தருளும் பெருமையுற்றது அத் திருநாடு' என்று குறித்தருளினார். திருவருள் பெற்ற சான்றோர் தோற்றத்தால் ஏற்றமுற்ற அந் நாட்டின் சிறப்பை நம்மால் அளவிட்டு உரைக்கலாகுமோ என்பார் அச் சேக்கிழார்.

'மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ? பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு'

என்பது அவரது தெய்வ மணக்கும் செய்யுளாகும்.

தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தோற்றம் தமிழ் நாட்டிற்குத் தனிப்பெருமை அளித்தது. உலகப் பேரறிஞர் அனைவரும் தலைவணங்கும் சிறப்பினைத் தமிழகத்திற்குத் தேடித்தந்தவர் அத் தெய்வப் புலவரன்றோ! இதனாலேயே தேசியக் கவிஞராய பாரதியாரும்,

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று தமிழகத்தை வாழ்த்துவாராயினர்.

திருவள்ளுவரின் மறுதோற்றமோ, அன்றித் திருநாவுக்கரசரின் மற்றோர் அவதாரமோ என்று மதிக்கத் தக்க மகாத்துமா காந்தியடிகளார், நம் பாரத நாட்டின்

தவப்புதல்வராய்த் தோன்றினர். நம் நாடு அயலவர் ஆட்சியினின்று விடுதலை பெற அல்லும் பகலும் அயராது உழைத்தார். மக்களிடையே வாய்மை, இன்னாசெய்யாமை என்னும் அறங்களைத் திறம்பட அறிவுறுத்தினர். தாமும் உள்ளத்தால் பொய்யாது ஒழுகினர். அதனால் அப் பெருமான் இன்று உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் ஒளிவீசும் சுடர் விளக்காய் ஒளிர்கின்றார்.

'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'

என்ற வள்ளுவர் சொல்லமுதத்திற்குத் தக்க சான்றாய்த் திகழும் மிக்கார் அவரன்றோ! பிற உயிர்கட்குச் சிறிதும் இன்னல் விளையாத வகையில் பாரத நாட்டின் அடிமை நிலையை அகற்ற அருந்தொண்டு புரிந்தார். அவருடைய தியாகத்தாலும் அவரைப் பின்பற்றி ஒழுகிய தலைவர் பெருமக்களின் அருந் தியாகத்தாலுமன்றோ நமது பாரதநாடு பூரண சுதந்தரம் பெற்றது! அதனாலேயே பாரதநாடு, காந்தி பிறந்த கவின்மிகு நாடெனக் கற்றோர் போற்றும் பெருமையுற்றது.

என்றும் குன்றாது பெருகும் பெருஞ்செல்வம் நாட்டிற்குப் பேரழகு செய்வதாகும். அச் செல்வம் பல்வேறு வகையில் வந்து மல்குதல்வேண்டும். உள்நாட்டு, அயல் நாட்டு வாணிகத்தாலும், நீர்வளம்மிக்க நிலவளத்தாலும், நிலத்தில் புதைந்து புலப்படும் பொன்னும் மணியும் போன்றனவற்றாலும் நாட்டிற்குப் பெருஞ்செல்வம் நிறைந்து பொங்கும். கோசல நாட்டில் கொழித்த செல்வப் பெருக்கைக் கம்பர் ஒரு கவிதையால் விளக்கினர்.

'கலஞ் சுரக்கும் நிதியம் கணக்கிலா
நிலஞ் சுரக்கும் நிறைவள நன்மணி

பிலஞ் சுரக்கும் பெறுதற் கரியதாம்
குலஞ் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்.'

'செல்வத்தால் செழிப்புற்ற கோசல நாட்டில் வாழ்வார் குல நலம்பேணும்கொள்கையுடையார். செல்வச்செருக்கின் காரணமாக ஒழுக்கத்தில் அவர்கள் வழுக்குதலிலர். ஆகவே, ஆங்குள்ளார் செல்வமும் ஒழுக்கமும் ஒருங்கு சேர்ந்த உயர்குடியினர். அவர்களால் கோசலநாடு பெருமை கொண்டு இலங்கியது,' என்று குறிப்பிட்டார் கவியரசர்.

நாட்டிற்கு அமைய வேண்டிய எல்லா நலங்களும் வளங்களும் இனிது நிறைந்து விளங்கினாலும் நாட்டைக் காக்கும் நல்வேந்தன் ஒருவன் இல்லையாயின் அவற்றால் பயனில்லை என்பார் வள்ளுவர்.

'ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு'

என்பது அவர் சொல்லமுதமன்றோ! வேந்தனே நாட்டின் உயிர் என்பது நல்லறிஞர் உள்ளமாகும். உலகத்தார்க்கு நெல்லும் உயிரன்று. நீரும் உயிரன்று. மன்னனே உயிராவான். இந்த உண்மையை நன்கு உணர்ந்து செங்கோன்மை பூண்டு ஒழுகுவது சிறந்த அரசன் கடமையாகும் என்று மொழிவார் மோசிகீரனார்.

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே'

என்பது அப் புலவரின் பொருண்மொழியாகும்.

நாட்டிற்கு உயிர்போன்ற அரசனின் இயல்புகளைத் திருவள்ளுவர் தமது நூலில் குறிப்பாக இறைமாட்சி

என்ற பகுதியிலும் விளக்கமாக இருபத்தைந்து அதிகாரங்களைக் கொண்ட அரசியல் என்ற பெரும்பகுதியிலும் அழகுறத் தொகுத்தும் வகுத்தும் சொல்லியுள்ளார். மக்களுடைய இன்ப வாழ்வுக்கு மன்னன் இன்றியமையாதவன் என்ற உண்மையை வலியுறுத்த விரும்பிய வள்ளுவர் பொருட்பாலில் முதலிலேயே மன்னன் மாண்பைக் குறிப்பிட்டு விடுகிறார். இறைமாட்சி என்று அமைத்த தலைப்பிலேயே அரசன் எத்தகைய இயல்பினனாய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தைப் புலப்படுத்தும் பொய்யில் புலவரின் புலமைத்திறம் நம்மால் அளவிடலாகுமோ!

எங்கும் நிறைந்து தங்கிய எல்லாம் வல்ல ஈசனையும் இறை என்பர் ஆன்றோர். தனது செங்கோன்மைச் சிறப்பால் மக்கள் சிந்தையெல்லாம் என்றும் மங்காது தங்கும் பெருமையுற்ற மன்னனையும் இறை என்று குறிப்பர். என்றும் நீங்காது தங்கும் நல்லியல்பே இறை என்று சொல்லப்படும். அவ்வியல்புடையானே இறைவனாவன். எங்கும் நிறைந்த ஈசனே கண் காணாத்தெய்வம்; மக்களின் மனங் கவர்ந்த மன்னனே கண்கண்ட தெய்வம். 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டதற்கு ஒப்பாகும்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தனர். 'எல்லோர்க்கும் தெய்வம் இலைமுகப் பைம்பூண் இறை' என்பார் குமரகுருபரர்.

இங்ஙனம் இறைவனது கூறாக நின்று நாட்டைக் காக்கும் அரசனுக்கு நல்லியல்புகள் பல அமையவேண்டும். அவன் அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறு அங்கங்களையும் குறைவறப் பெற்றிருக்க வேண்டும். இவ் ஆறனுள் ஒன்றிரண்டு குறையினும் இழுக்கில்லை. எனினும் இவ் ஆறும் இனிது அமையப்

பெற்றவனே 'அரசருள் ஏறு' என்று கூறியருளினார் திருவள்ளுவர்.

அரசனுக்கு எப்பொழுதும் மாறாது, இயல்பாக அமையவேண்டிய பண்புகள் நான்கு. பகைவர்க்கு அஞ்சாத தகைமை, அருள் நிறைந்தகொடையுள்ளம், நுண்ணிதாக நோக்கும் அறிவுடைமை, வினை செய்தற்கண் மனவெழுச்சி ஆகிய பண்புகள் இயற்கையாகவே அமையப் பெற்ற அரசனே நிலவுலகும் திருவுடையனாகத் திகழ முடியும். அவன்பால் செயல் விரைவும் சிந்தையுள் நிறைந்த கல்வியும் சிறந்த ஆண்மையும் நீங்காமல் நிமிர்ந்து காணப்படும்.

அரசன் தனக்குரிய அறத்தின் வழுவாது ஒழுக வேண்டும். ஓதலும் ஈதலுமாய பொதுத் தொழிலினும் படைக்கலப் பயிற்சியும் பல்லுயிரோம்பலும் பகைத்திறம் தெறுதலும் ஆகிய சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றல் வேண்டும். கொலை, களவு, பொய், சூது, காமம் முதலாய குற்றங்கள் நாட்டின்கண் நிகழாமல் காத்தல் வேண்டும். வீரத்திற்கு ஊறு விளையாத மானத்துடன் விளங்கவேண்டும்.

வேலேந்திய வீரன், மதவேழத்தை எறிந்தாலும் விலங்கைஎறிந்தான் என்பர் என்று எண்ணி அச்செயலைப் புரிய விரும்பான். முன்பு வெட்டுண்டவர் தனக்கு ஒப்பானவராயினும் பிறர் படை தீண்டிய எச்சிலென்று அவரையும்வெட்ட விழையான். தனக்கு இளையவர் ஒப்பின்மையால் வீரத்திற்கு இழுக்கு விளையுமென எண்ணி அவரொடும் போர் புரியான். தன்னின் மூத்தோரை எதிர்த்து வாள் வீசுதல் அறமாகாதெனஅதனையும் செய்யான். தன்னைக் கண்டு அஞ்சிப் புறங்காட்டி ஓடுவார்

மீதும் வாளினை ஓச்சான். இவைபோன்ற உண்மை வீரனது திண்மையான செயல்களே மறனிழுக்கா மான மெனப் பேணப்படும். இதனையே பேராண்மை என்றும் கூறுவர் பெருநாவலர்.

அரசன் தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேலும் பெருக்கவேண்டும். பலதுளிப் பெரு வெள்ளமாகப் பல்வேறு வழிகளில் வந்து குவிந்த செல்வத்தை ஓரிடத்தே தொகுத்துவைக்கவேண்டும். அதனைப் பகைவர், கள்வர் முதலான பிறர் கவர்ந்து கொள்ளாமல் காக்கவேண்டும். அதனை அறம்பொருள் இன்பங்களின் பொருட்டுச் செலவிடவேண்டும். இச் செயல்களில் அரசன் சிறந்த வல்லமை படைத்தவனாய் இருக்க வேண்டும்.

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

பகைவரை அழிப்பதாலும், பிற நாடுகளைத் தன்னடிப் படுத்துத் திறை கொள்வதாலும், தனதுநாட்டைத் தலையளி செய்து காத்தலாலும் அரசனுக்கு நிதிக்களஞ்சியம் நிரம்புவதாகும். தனது களஞ்சியத்தைப் பொன்னாலும் மணியாலும் நிரப்பிய மன்னன் அவற்றைக் கொண்டு கடவுளர்க்கு விழவெடுத்தல் வேண்டும். அந்தணர்க்கும் வறியோர்க்கும் அருளுடன் வழங்கவேண்டும். இவ்வகையில் செலவிடவே அறத்தின் பொருட்டுச் செலவழிப்பாகும். படைவலியைப் பெருக்குதற்கும் பகைவருடன் சேர்வாரைத் தடுப்பதற்கும் தன்னை விட்டுப் பிரிவாரைக் கூட்டுதற்கும், செலவு செய்யவேண்டும். இவ்வகையான செலவுகள் பொருளின் பொருட்டுச் செலவழிப்

பதாகும். மண்டபம் அமைத்தும் குளங்கள் தோண்டியும் செய்குன்றுகளைப் படைத்தும் நறுமணப் பொழில்களை வளர்த்தும் ஐம்புல நுகர்ச்சிக்கு வேண்டுவன கொண்டும் இன்பத்தின் பொருட்டுப் பொருளைச் செலவிடுதல் வேண்டும். இங்ஙனம் அரசன் மூவகையாகப் பொருளை வகுத்துத் தவறாமல் செலவிடுதல் அரிது. மேலும் இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் முதலாய செயல்களைத் தவறாமல் புரிதலும் அரிதாகும். ஆதலின் இவையெல்லாம் வல்லவனே நல்லரசன் என்ற கருத்தால் 'வல்லது அரசு' என்று குறித்தார் வள்ளுவர்.

வலியரால் நலிவெய்தி முறைவேண்டிய மக்கட்கும், வறுமையால் துன்புற்றுக் குறையிரந்தார்க்கும் எளிதில் காணவல்ல காட்சிக்கு எளியனாய் அரசன் இருத்தல் வேண்டும். எவரிடத்தும் இன்சொல்லே பேசும் இயல்புடையனாக வேண்டும். இவ்வியல்புகளை உடைய அரசன் ஆளும் நாட்டைச் சிறந்த நாடென உயர்ந்தோர் ஏத்துவர். இத்தகைய மன்னன் காக்கின்ற நாட்டில் பசியும் பிணியும் பகையும் இன்றிப் பல்லுயிரும் நல்லின்பம் துய்க்கும். எல்லோரும் அரசனைக் கைகூப்பித் தொழுது வாழ்த்துவர். இன்சொல்லும் ஈகையும் உடைய அரசன், நாட்டில் பெரும் புகழை நாட்டுவான். அவன் நினைத்த பொருள்கள் அனைத்தும் பெற்று இன்புற்று வாழ்வான். நாட்டை நீதி வழுவாமல் பாதுகாக்கும் அரசன் பிறப்பால் மகனேயாயினும் அவனே மக்கட்குத் தெய்வமெனப் போற்றினர் பொய்யில் புலவர்.

அரசன் நாட்டைச் செங்கோன்மையுடன் ஆள்வதற்கு இடித்துரைக்கும் அமைச்சர்கள் இன்றியமையாதவர். அவரது அறிவுரைகளைத் தனது செவியால்

பொறுக்க முடியவில்லையாயினும் நாட்டின் நலன் கருதி அவற்றைப் பொறுத்துக் கேட்டல் அரசனது கடமையாகும். அத்தகைய கடமை உணர்ச்சியுடைய அரசனது கவிகை நீழலில் உலகம் என்றும் தவிராது தங்கும். வேண்டுவார்க்கு வேண்டுவன விரும்பிக் கொடுத்தல், எல்லோர்க்கும் இன்னருள் செய்தல், நீதியான ஆட்சியை நிலவுமாறு செய்தல், தளர்ந்த குடிகளைத் தாங்குதல் ஆகிய இந் நான்கு செயல்களும் உடைய அரசன், வேந்தர்க்கெல்லாம் வழிகாட்டும் ஒளிமிகு விளக்காய்த் திகழ்வான்.

இத்தகைய வேந்தனுக்குச் சென்ற சென்ற போர்களில் எல்லாம் வென்றி விளைப்பது அவனது வேலன்று; செங்கோலே சிறந்த வெற்றியை விளைப்பதாகும் என்று உரைப்பார் திருவள்ளுவர்.

'வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்'

என்பது அவர் சொல்லமுதமாகும். இக் கருத்தைச் சங்கத் தமிழ்ச் சான்றோர் ஒருவர் நன்கு வலியுறுத்துவார். அரசன் நால்வகைப் படைகளும் மிகுதியாக உடையவனாயினும் அவனது வெற்றி அறநெறியையே முதலாகக் கொண்டது என்று மொழிந்தருளினார் அப் புலவர்.

'கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'

என்பது அப் புலவரது பொருண்மொழியாகும்.

மேலும், அப் புலவர் அரசனுக்கு அமைய வேண்டிய நான்கு அரிய பண்புகளை நயம்பட உரைக்கிறார். நம்மவர் என்று குறை மறைத்தலும், அயலவர் என்று குணம் கொல்லுதலும் இல்லாத நடுவுநிலையும், வெங் கதிரன்ன வீரமும், திங்களன்ன தண்மையும், வான மன்ன வண்மையும் உடையவனாக வேந்தன் விளங்குதல் வேண்டுமென விளக்கினார். இத்தகைய அரசன் உறங் கினாலும் அவனது புகழ், நாட்டை நலம்பெறக் காக்கு மெனத் திருத்தக்கதேவர் உரைத்தருளினார்.

'உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்'

என்பது அவரது சிந்தாமணியாகும்.

தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் மாநிலம் காக்கும் மன்னற்கு இலக்கணம் வகுத்துள்ளார். மன்னன், தன் நாட்டில் வாழும் மன்னுயிர்க்கு ஐவகையாக வரும் இன்னல்களை அகற்றவேண்டும்; அறங்கள் ஓங்குமாறு ஆட்சி செலுத்த வேண்டும் என்றார். நாட்டில் வாழும் உயிர்கட்கு மன்னனாலும் அவன் சுற்றத்தாலும் பகைவ ராலும் கள்வராலும் காட்டு விலங்குகளாலும் இன்னல்கள் ஏற்படலாம். இவ் ஐவகை இன்னல்களையும் அகற்றி, நாட்டை ஆளுதல் அரசன் கடமையாகும் என்று அறி வுறுத்தினார் அப் புலவர்.

'மாநிலம்கா வலனாவான்
மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு
தன்னால்தன் பரிசனத்தால்

ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த்(து)
அறம்காப்பான் அல்லனோ?'

இத்தகைய நற்குண நற்செய்கைகளையுடைய அரசனால் ஆளப்பெறும் நாடே மக்களால் பெரிதும் விரும்பப்படும். அவ் அரசனை மக்கள் தெய்வமென மதித்துப் போற்றுவர். அவனுடன் ஒற்றுமையாக வாழ்ந்து நாட்டின் வலியைப் பெருக்குவர். அத்தகைய நாடும் அரசும் நல்லோரால் நயந்து போற்றப்படும்.

---

## உ. உழவும் உயர்வும்

நாட்டை ஆளும் மன்னன் முதல், காட்டில் திரியும் வேட்டுவன் வரை யாவர்க்கும் இன்றியமையாது வேண்டுவன உணவும் உடையுமாகும். உணவின்றேல் உயிர் வாழமுடியாது. உடையின்றேல் மானத்தைக் காக்க முடியாது.

'தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே'

என்னும் நக்கீரரது வாக்கால் இவ்வுண்மை நன்கு புலனாகும். இதனையே தமிழ் மூதாட்டியாரும் 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்று வலியுறுத்தினர்.

உணவுக்கு வேண்டும் தானிய மணிகளும் காய்கறி வகைகளும் உழவுத் தொழிலால் கிடைப்பன. உடைக்கு

வேண்டிய பஞ்சும் அவ் உழுதொழிலால் கிடைப்பதே. ஆதலில் மக்கள் மேற்கொள்ளும் தொழில்கள் பலவற்றுள் தூய்மையும் முதன்மையும் வாய்ந்தது உழவே இதனை வேளாண்மை என்றும் பயிர்த்தொழில் என்றும் குறிப்பதுண்டு. இத் தொழில் புரியும் மக்களை உழவர், வேளாளர், குடியானவர் முதலிய பல பெயர்களால் குறிப்பர்.

வேளாளர் உழுதுண்பார், உழுவித்துண்பார் என்ற இருவகையினராவர். தாமே நிலத்தை உழுது பயிரிடுவோர் உழுதுண்ணும் வேளாளர் எனப்படுவர். பிறரைக் கொண்டு நிலத்தைப் பயிரிடுவோர் உழுவித்துண்ணும் வேளாளராவர். முன்னவர் பெரும்பாலும் வறிஞரே. பின்னவர் எல்லோரும் பெருநிலக் கிழார்களே. இவர்களை வேளிர் என்றும் பழந்தமிழ் இலக்கியங்கள் பாராட்டும். வேளிர் குலத் தலைவர்கள் குறுநில வேந்தர்களாய் விளங்கினர். இவர்கள் விருந்தினரைச் சிறந்த முறையில் பேணும் பெருந்தகையாளர்கள். இதனாலேயே நல்லாதனார் என்னும் புலவர்,

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்'

என்று வேளாளனுக்கு இலக்கணம் விரித்தார்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே நமது முன்னோர் உழவுத் தொழிலின் உயர்வையும் அதன் நுணுக்கங்களையும் நன்கு தெரிந்திருந்தனர். பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் உழவுத் தொழிலைப் பற்றிய உண்மைகள் காணப்படுகின்றன. நிலத்தை நான்கு வகையாகப் பிரித்து, அவ்வந்நிலத்திற் கேற்றவாறு பண்படுத்திப் பயிரிட்டு வந்தனர். குறிஞ்சி முதலாய நிலங்களில் பயிரிடத்தக்க பயிர்கள் யாவையென்பதை இனிது உணர்ந்திருந்தனர். ஆதலின் தமிழ்நாட்டில்

உழவுத்தொழில் தோன்றிய காலத்தை அறுதியிட்டு உரைக்க முடியாது.

நாட்டிற்கு உயிர்நாடியாக விளங்குவது உழவுத் தொழிலே என்பதை வலியுறுத்த, வள்ளுவர் பெருமான் நாட்டின் இலக்கணம் நவில வந்த தொடக்கத்திலேயே,

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு'

என்று வகுத்தருளினார். என்றும் குன்றாத விளைச்சல் இன்றியமையாதது என்பதைத் 'தள்ளா விளையுள்' என்ற தொடரால் குறித்தார். அத்தகைய விளைச்சலைத் தரும் பயிர்த்தொழிலை உழவு என்ற ஓரதிகாரத்தால் விளக்கினார். பயிர்த்தொழிலின் நுட்பங்களையெல்லாம் திட்பமுற விளக்கும் திருவள்ளுவர் வேளாளரோ என்று கற்பவர் வியக்குமாறு உரைக்கிறார்.

மக்கள் பொருளீட்டுதற்கு உழவேயன்றிப் பிற தொழில்களையும் மேற்கொள்ளுகின்றனர். எனினும் உணவுப் பொருளைப் பெறுதற்கு உழவரிடமே செல்ல வேண்டும். ஆதலின் 'ஏர்ப்பின்னது உலகம்' என்று இயம்பினார் வள்ளுவர். மெய்வருந்தி உழைப்பவரே உழவை மேற்கொள்ளலாம். அத் தொழிலால் எத்துணை வருத்தம் எய்தினாலும் எல்லோரும் அதன் பயனையே எதிர்நோக்கி இருப்பராதலின் உழவே தலையாய தொழில் என்று மொழிந்தருளினார். தமிழ் மூதாட்டியாராகிய ஔவையாரும்,

'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு'

என்று உழவின் உயர்வை அறிவுறுத்தினார்.

உழுதொழில் புரிவானுக்கு இரண்டு ஏர்கள் உரிமையாக இருக்கவேண்டும். வீட்டில் என்றும் தட்டாது விதையும் இருக்கவேண்டும். அவனது நிலத்திற்கு வேண்டிய நீர், பக்கத்தில் நிரம்ப இருக்கவேண்டும். நாள்தோறும் அந் நிலத்தைச் சென்று கண்டு வருதற்கேற்ப, அஃது ஊரருகே அமையவேண்டும். குறிப்பறிந்து விருப்புடன் செயலாற்றும் ஏவலாளரும் பலர் இருக்க வேண்டும். இத்தனை நலங்களும் இனிது அமையப் பெற்றால் என்றும் உழவுத்தொழிலே இன்பமானது என்பார் அத் தமிழ்ச் செல்வியார்.

'ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரவணித்தாய்ச் செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது'

என்பது அவரது அருமைப் பாடலாகும்.

இனி, உழவரது பெருமையைத் திருவள்ளுவர் ஐந்து குறட்பாக்களால் அறிவுறுத்தினர். உழவர்கள் உலகத்திற்கு அச்சாணி போன்றவர்; பிற தொழில்களைப் புரிவார் யாவரையும் தாங்கும் பெருமை அவர்க்கே உரியது; அவ் உழவர்களே சுதந்திர வாழ்வு பெற்றவர்கள்; மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது வாழும் அடிமை வாழ்க்கை யுடையவர்களே; உழவர்கள் தண்ணளி நிறைந்த உள்ளத்தினர்; அன்னவர் நிறைந்த நாடே பொன் கொழிக்கும் திருநாடு; அத்தகைய நாட்டை ஆளும் மன்னனே பன்னாட்டையும் தன்னடிப் படுத்தும் தகையுடையனாவான்; தாமே உழுதுண்ணும் இயல்பினராகிய உழவர் பிறரை இரவார்; தம்மை இரப்பார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கரவாது

விரும்பிக் கொடுப்பர்; உழவர்தம் கை அத் தொழிலைச் செய்யாது மடங்குமாயின் முற்றும் துறந்த முனிவர்க்கும் அவ் அறத்தில் நிலைத்து நிற்கமுடியாது. இங்ஙனம் உழவர்களின் உயர்வை அழகுற விளக்கியருளினார்.

கவியரசராகிய கம்பர், வேளாளர் பெருமையை விளக்குதற் கென்றே ஏரெழுபது என்னும் நூலைப் பாடியருளினார். வேளாளர் குல விளக்காய்த் திகழ்ந்து தம்மைப் பேணி வளர்த்துப் பேராதரவு நல்கிய பெரு வள்ளலாகிய சடையப்பரைத் தமது காவியத்தில் தக்க இடங்களில் வைத்துப் பாராட்டும் கம்பர் வேளாளரோ என்று ஐயுறுவாரும் உண்டு. அவர் வேளாளரே என அறுதியிட்டு உரைத்தவரும் உளர். இராமபிரானுக்கு மணிமுடி புனையும் மங்கல நாளில் வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பரது மரபினர் தமது கரத்தால் மணிமுடியினை எடுத்துக் கொடுக்க, வசிட்டன் வாங்கி இராமனுக்குச் சூட்டினான் என்று சொல்லி மகிழும் கம்பர், உழவர்க்கு எத்துணை உயர்வு கொடுத்திருக்கிறார்!

அவர் பாடிய ஏரெழுபது என்னும் நூலில் ஏருழவர் ஏற்றத்தை எழுபது பாக்களால் இனிது விளக்குகின்றார். உலகம் உய்யப் பிறந்தவர்கள் உழவர்களே. அளவிலாத கலைகளை ஆய்ந்தாய்ந்து கற்றாலும் உணவிற்கு உழவர் வீட்டு வாயிலில் சென்றன்றோ நிற்க வேண்டும்! வேலேந்திய வேந்தருடைய வெற்றியெல்லாம் தாற்றுக் கோலேந்திய வேளாளர் சிறப்பாலன்றோ விளைவன! வானம் மழை பொழிந்தாலும், நிலம் வளம் தருவதற்கு உழவர்களன்றோ உள்ளம் கொள்ளவேண்டும்! வேதமும் வேள்வியும் கலைகளும் கவிதைகளும் செல்வமும் செழிப்பும் நீரும் நேர்மையும் ஆகிய எல்லாம் உழவாலேயே

உயர்வும் ஒளியும் பெறவேண்டும்! இங்ஙனம் கம்பர் உழவர் சிறப்பைப் பலவாறு உவந்து போற்றினர்.

'வேதநூல் முதலாக விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவார் எல்லாரும் உழவர்தம் தலைக்கடைக்கே
கோதைவேல் மன்னவர்தம் குடைவளமும் கோழுவளமே
ஆதலால் இவர்பெருமை யாருரைக்க வல்லாரே'

என்பது அவரது ஏரெழுபதுப் பாடலாகும்.

வள்ளுவர் பயிர்த்தொழில், செய்யும் முறையினை மூன்று பாக்களால் குறிப்பிடுகின்றார். நிலத்தினை அகல உழுவதினும் ஆழ உழுதல் வேண்டும். அங்ஙனம் உழுது, மண்ணைப் புழுதியாகப் பண்ணவேண்டும். அதனை நன்றாகக் காயவிட வேண்டும். ஒரு பலப்புழுதி காற்பல மாகுமாறு காய்ந்துவிட்டால் அந்நிலத்திற்குக் கைப்பிடி அளவுடைய எருவும் இடவேண்டுவதில்லை. அதன்கண் தோன்றும் பயிர் பணைத்துச் செழித்து விளையும் என்பது அவரது அனுபவ உண்மையாக விளங்குகிறது.

'தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்'

என்பது வள்ளுவர் சொல்லமுதம் ஆகும்.

நிலத்தை நன்கு உழுவதுடன் எருவிடுதலும் பெரு நலம் விளைக்கும். நீரோடும் கால்களை நேராக அமைத்து நிலம் புலராவண்ணம் இடையிடையே நீரைப் பாய்ச்ச வேண்டும். பயிர்களுக்கு இடையே தோன்றும் களைகளைப் பிடுங்க வேண்டும். பட்டிமாடுகளாலும் பறவை இனங்க ளாலும் பயிர் கெட்டுவிடாதவாறு கட்டான காவல் புரிய வேண்டும். இங்ஙனம் உழுதல், எருவிடுதல், களைபிடுங் குதல், நீர்கால்யாத்தல், பயிரைக் காத்தல் என்னும் ஐந்து முறைகளும் குறைவுறாது கையாளப் பெறவேண்டும்.

'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

என்பது வள்ளுவர் சொல்லமுதம் ஆகும்.

நிலத்திற்கு உரியவன் நாள்தோறும் நிலத்தைச் சென்று பார்வையிட வேண்டும். பிறரை ஏவியிராமல் தானே சென்று நோக்குதல் இன்றியமையாதது. 'உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டை' என்ற பழமொழி, பயிர்த்தொழில் பற்றி எழுந்ததன்றோ! நாளும் பயிரைச் சென்று கண்டு, வேண்டும் பக்குவங்களை உடனுக்குடன் அறிந்து செய்வானாயின் அப் பயிர் நன்கு செழித்துப் பெரும்பயன் விளைக்குமன்றோ! ஒருவன் தான் மணந்துகொண்ட மனைவிக்கு வேண்டுவன செய்யாமலும் அவளிடம் அன்பு கொள்ளாமலும் விலகி நிற்பானாயின் அவள், தானும் நலமிழந்து தன் கணவனையும் வெறுத்துப் பயன்படாது கழிவாள். அவளேபோல் உரியவன் சென்று நோக்காத நிலமும் உறுபயன் தாராது கெட்டொழியும் என்று கட்டுரைத்தார் வள்ளுவர்.

'செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்(து)
இல்லாளின் ஊடி விடும்'

என்பது அவர் சொல்லமுதம் ஆகும்.

'மாடு மேய்க்காமல் கெட்டது
பயிர் பார்க்காமல் கெட்டது'

இப் பழமொழி, வள்ளுவர் கருத்தை நன்கு வலியுறுத்துகின்றதன்றோ!

இலக்கண ஆசிரியராகிய பவணந்தி முனிவர் நிலத்தின் இயல்பைத் தெளிவுற விளக்கியுள்ளார். பிறரால் அளந்தறிய முடியாத உருவப் பெருமை

யுடையது நிலம். அளப்பரிய பெரிய பாரங்களைச் சலிப்பின்றித் தாங்கும் திண்மையுடையது. தன்னை அகழ்வாரையும் இகழாது தாங்கும் பொறையுடையது. பருவத்தில் உழவர் செய்யும் முயற்சியளவிற்குத் தக்கவாறு அவர்க்குப் பயனைத் தரும் இயல்புடையது. இத்தகைய அரிய பண்புகளைப் பெற்ற பெருமையுடையது. ஆதலின் அது நன்னிலம் என்று போற்றும் நலமுடைய தென நவின்றார் பவணந்தியார்.

'தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பாகும்மே'

என்பது அவரது நூற்பா வாகும்.

இத்தகைய நன்மை வாய்ந்த நிலத்தைத் திருவள்ளுவர் 'நிலமென்னும் நல்லாள்' என்று நலமுறப் பாராட்டினார். யாம் வறியோமாய் வாடுகின்றோம் என்று கூறிப் பாடுபடாது சோம்பித் திரியும் மக்களைக் கண்டால் நிலமகள் தன்னுள்ளே நகையாடுகின்றாள். ஏன்? தன்னை உழுது பண்படுத்திப் பயிர் செய்வார்க்குத் தக்க பயன் தருவது நிலம் என்பதைத் தெரிந்தும் வறுமையால் வாடும் மக்களின் அறியாமையைக் கண்டு அந்நிலமகள் பரிகசிக்கின்றாள் என்பதை, 'நல்லாள் நகும்' என்ற நயந்தரு தொடரால் விளக்கியருளினார்.

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய பழந்தமிழ்ப் புலவராகிய குடபுலவியனார், அவனுக்கு உழவரது உயர்வை விளக்கியுரைத்தார். தமது நாட்டில் நீர் நிலைகளைப் பலவாகப் பெருக்கிய மன்னரே உடம்பும் உயிரும் பெற்றுப் பெருவாழ்வு எய்துவர். அவர்களே இம்மையில் புகழும் மறுமையில் இன்பமும் பெறுவர்.

உணவையே முதலாக உடையது உடம்பு. அவ் உணவைக் கொடுப்பவர் உயிர் கொடுப்பவராவர். உணவால் உயிரளிக்கும் உழவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்து உழவினை வளர்க்க வேண்டும் என்று பாண்டியனுக்கு அறிவுரை பகர்ந்தார்.

'நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே'

என்பது அப் புலவரது பொன்மொழியாகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய வெள்ளைக்குடி நாகனார் அவனுக்கு உழவின் உயர்வைப் பற்றிய நல்லுரைகள் பல சொல்லியருளினார். பகைவரை எதிர்த்துப் போர் செய்யும் படைதரும் வெற்றியெல்லாம் உழவால் விளைந்த பயனேயாகும். ஆதலின் உழவர் குடியை இனிது காப்பாயாக. அக் காவலால் ஏனைக் குடிகளையும் காத்தவனாவாய். அதனால் நின் பகைவர் நினது அடியைப் போற்றி நிற்பர். இங்ஙனம் அறிவுறுத்திய நாகனாரது நன்மொழி உழவின் உயர்வை அழகுற விளக்கிய தன்றோ!

'வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
.....................................................
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே.'

என்பது வெள்ளைக்குடி நாகனாரின் தெள்ளிய பாடலடிகளாகும்.

## ௩. அவையும் ஆற்றலும்

கல்வி கேள்விகளால் மேம்பட்ட சான்ருேர் கூடிய கூட்டமே அவையெனப் போற்றப்படும். அஃதே நல்லவை யென்றும் சொல்லப்பெறும். மற்றவர் கூட்டமெல்லாம் புல்லவை யென்றே இகழப்படும். அறிஞன் ஒருவன் தான் கற்றுணர்ந்த நுண்பொருள்களைச் சொல்லத்தக்க அவை நல்லவையே. கல்வி அறிவில்லாக் கயவர்கள் கூடிய புல்லவையுள் நல்ல பொருள்களை மறந்தும் சொல்லற்க என்பார் வள்ளுவர்.

> 'புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
> நன்கு செலச்சொல்லு வார்'

என்பது அவரது சொல்லமுதமாகும்.

சிறந்த நூல்களைக் கற்றுணர்ந்த அறிஞர்க்கு மற்றவர் உள்ளங் கொள்ளுமாறு உயர்ந்த கருத்துகளை எடுத்துரைக்கும் வல்லமை அமையவேண்டும். இன்றேல் அவர் பெற்ற பேரறிவாற் சிறிதும் பயனில்லை. அவர்கள் மணமில்லாத மலருக்கு ஒப்பாவர் என்பார் ஒப்பில் புலவர்.

> 'இணரூழ்த்தும் நாரு மலரனையர் கற்ற(து)
> உணர விரித்துரையா தார்'

என்பது அவர்தம் வாய்மொழியாகும். கற்றவற்றை மற்றவர் தெற்றெனத் தெரியுமாறு விரித்துரைக்கும் சொல்வன்மை இல்லாதார், கொத்தில் அழகுற மலர்ந்தும் மணங் கமழாத பூவினைப் போல்வர் என்று புகல்வார்.

தேருந்தொறும் இனிமை பயக்கும் தெள்ளிய நூல்களை ஓதுவார்க்கு ஒப்பில்லாதோர் இன்பம் உண்டாகும் என்பர் தெய்வப் புலவர். 'நவில்தொறும் நூல் நயம்' என்பது அவரது நன்மொழியன்றோ! அத்தகைய கலை

யின்பத்தில் மேன்மேலும் ஆழ்ந்து மூழ்கும் ஆர்வமுடையார்க்குச் சொல்லாற்றல் இன்றியமையாததாகும். கற்றறிந்தார், தம் நாவன்மையால் மற்றவர்க்கு உயர்ந்த நூற்பொருள்களை உரைக்குங்கால் மிகுந்த உவகையடைவர். அவரது அகமகிழ்ச்சியை முகமலர்ச்சியாலும் புகழுரையாலும் அறிந்து இன்புற்ற அக் கற்றார், மேலும் சிறந்த நூலினைப் பயிலவேண்டும் என்று முயல்வார். அம் முயற்சியால் கல்வியின்பத்தைக் காண்பர்.

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்பது வள்ளுவர் சொல்லமுதமன்றோ!

கல்வியாளர் தம் கலையின்பத்தைப் பெருக்கவும் கலைஞானத்தை வளர்க்கவும் சொல்லாற்றல் ஏற்ற துணைபுரிகின்றது. அத்தகைய சொல்வன்மையைப் பெருக்குதற்கு நல்லவையே நல்வாய்ப்பு அளிப்பது. கலைச்சுவை கண்ட நல்லோரே கலைவல்ல புலவரைக் காண மகிழ்வர். அழகிய தாமரைத் தடாகத்தையே அன்னப் பறவைகள் விரும்பி அடையும். அஃதே போல் 'கற்றாரைக்கற்றாரே காமுறுவர்' என்று கட்டுரைப்பார் தமிழ் மூதாட்டியார். இழிந்த காக்கை இடுகாட்டில் கிடக்கும் பிணத்தையே விரும்பும். அஃதே போல் கல்வியறிவில்லாத மூர்க்கரை மூர்க்கரே விரும்புவர் என்பார்.

நல்லவையுள் புக்கு உரையாடும் இன்பம் எல்லையற்றதாகும். வானுலக இன்பத்தினும் அது மேலானதாகும் என்பர் ஒரு சமணமுனிவர். வானுலக இன்பம் அதனினும் வளமானது என்பார் உளராயின் அதைப்பற்றி இம்மையில் கவலையுறத் தேவையில்லை; மறுமையில் பார்த்துக் கொள்ளலாம் என்று மறுத்துரைப்பார் அம் முனிவர்.

'தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி'

என்பது அம் முனிவரது நாலடிப் பாடலாகும்.

புல்லவை புகுந்து நல்லவற்றைச் சொல்லுவார்க்குத் துன்பமேயன்றி வேறில்லை. ஆங்கிருந்த மூடரால் இகழப்படுவதேயன்றி இன்னலுக்கும் ஆளாவர். அவர்கள்பால் கூறிய அனைத்தும் செவிடர் காதில் ஊதிய சங்கிற்கு ஒப்பாகும். அங்கணத்துள் சிந்திய அமுதொக்கும் என்பார் திருவள்ளுவர். அமுதினை அங்கணத்துள் சிந்தினால் சிந்தியவர்க்கும் பயனில்லை. அமுதும் தன்னியல்பு கெட்டொழியும். அது சிந்தப்பெற்ற அங்கணத்திற்கும் சிறு பயனும் இல்லை. அதுபோலவேதான் கல்லாத மூடர் கூடிய புல்லவையுள் நல்லவற்றைச் சொல்லுவார்க்கும் பயனில்லை. அவரால் சொல்லப்படும் பொருள்களும் இகழப்படும். அவ் அவையினர் அவற்றைக் கேட்கவும் மாட்டார். இக் கருத்தை விளக்கப் போந்த பொய்யில் புலவர்,

'அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்'

என்று சொல்லியருளினார். இதனையே பழமொழியாசிரியர்,

'கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு'

என்று சொல்லி வலியுறுத்தினார்.

நல்லவை, புல்லவை என்னும் இருவகை அவையுள், அறிஞர்தாம் கற்றவற்றைச் சொல்லத்தக்க நல்லவையை நாடிச் சொல்லவேண்டும். அவையுள் கூடிய அறிஞர்

களின் தகுதி அறிந்து கருத்துகளை ஆராய்ந்து வழங்க வேண்டும்: அவையினர்க்குப் பெருமையளித்து அடங்கி நின்று பேசுதல் வேண்டும். இவை போன்ற கருத்துகளை யெல்லாம் தொகுத்து 'அவையறிதல்' என்ற அதிகாரத்தில் புகுத்துரைப்பார் நம் பொய்யில் புலவர்.

அவைக்கண் ஒன்றைச் சொல்லப் புகுவார் சொற்களின் இயல்பையெல்லாம் இனிது உணர்ந்திருக்க வேண்டும். தாம் சொல்லப் புகும் அவையின் தகுதியாகிய மிகுதி, ஒப்பு, தாழ்வுகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இவ் அவைக்கண் சொல்லும் சொற்கள் எத்தகையனவாய் இருந்தால் ஏற்றுக் கொள்ளப் பெறும் என்பதை அறிந்து பேசுதல் வேண்டும். அச் சொற்களை வழுப்படாமல் மிகவும் தேர்ந்து கூறவேண்டும். அவையினர் தகுதியை அளந்தறியாது ஒரு பொருளை விரித்துரைப்பார் சொல்லும் வகையறியாச் சிறியராவர். அவர்கள் எத்துணை நூல்களைக் கற்றவராயினும் அறிவற்ற மூடரே. ஆதலின் அறிவு நிறைந்த சான்றோர் அவைக்கண் ஆன்றமைந்த நுண்ணிய பொருள்களை எண்ணியுரைத்துப் பேரறிவாளரெனப் பெருமை யெய்துக; சிற்றறிவுடையார் குழாத்துள் சென்று ஒன்று சொல்லுங்கால் தாமும் அன்னவர்க் கேற்ப எளிய பொருள்களை எடுத்துரைத்து அவரானும் ஏத்துப் பெறுக; இதுவே சொல்வன்மை மிக்க நல்லறிவாளர்க்கு ஒல்லும் செயலாகும் என்று எடுத்துரைத்தார் வள்ளுவர்.

தம்மினும் மிக்க பேரறிஞர் கூடிய பேரவைக்கண் புக்கார் அவர்களின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லுதல் தகாது. ஆங்கு அடக்கமுடையராய் நடக்கவேண்டும். அச் செயல் நற்குணங்கள் அனைத்தினும் சிறந்த நற்குணமாக மதிக்கப்படும்.

'நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும். மூதறிவாளர் கூடிய பேரவையில் அவர்கள் முதற்கண் பேசக் கேட்டல் வேண்டும் அவர்கள் முற்பட்டுப் பேசினால் அவர்கள் விரும்பும் கருத்தும் விளங்கும் பேச்சாற்றலும் எத்தகையன என்பது இனிது உணரப்படும். அதன் பின்னர் அவருக்குத் தகத் தாம் பேச இயலும். ஆதலின் 'முதுவருள் முந்து கிளவாச் செறிவு' அரிய நற்பண்பாயிற்று.

நுண்மாண் நுழைபுலம் வல்ல நல்லார் அவைக்கண் நுண்பொருள்களைச் சொல்ல வல்லான் சொல்லிலும் பொருளிலும் குற்றம் தோன்றாத வகையில் கூர்ந்த கவனத்துடன் தேர்ந்து ஒன்றைக் கூறுதல் வேண்டும். இன்றேல் வீடெய்தும் நன்னெறியில் நின்றவன் கூடா வொழுக்கத்தால் தன்னிலை தவறி இழிநிலை எய்தியதற்கு ஒப்பாகும். ஆற்று வெள்ளத்தில் நீந்தி அக்கரை அடைய முற்பட்டான் நட்டாற்றில் கால் கைகள் சோர்ந்து வீழ்ந் ததற்கு ஒப்பாகும் என்பர் பரிதி என்னும் உரையாசிரியர். 'பிழைபடச் சொல்லேல்' என்னும் பழமொழி இக்கருத்தை நன்கு வலியுறுத்துகின்றதன்றோ! அவையில் குற்றப் படுதலைக் 'கடும்பகல் ஏதிலான்பாற் கண்ட இல்லினும் பொல்லாதே' என்று அறிவுறுத்துவார் குமரகுருபரர்.

ஒருவனது அறிவின் பெருமையைத் தெரியவல்லதும் தேர்ந்து பாராட்ட வல்லதும் நல்லவையேயாகும். புனுகும் சவ்வாதும், பூசி மகிழும் நேசரிடத்தன்றோ சிறப் படையும் பிறர் உணர்த்த வேண்டாது அரிய பொருள் களைத் தாமே உணரவல்ல அறிவுடையார் நிறைந்த

அவையில் ஒன்றைச் சொன்னல் அது, தனக்கும் பிறர்க்கும் பெரும்பயன் விளைப்பதாகும். அச் செயல், தானே வளரும் தன்மையுடைய பயிர் நின்ற பாத்தியுள் தண்ணீர் பாய்ச்சியதற்கு ஒப்பாகும் என்பர் தெய்வப் புலவர். பாத்தியோ நன்கு பண்படுத்தப் பெற்றது. அதன்கண் தோன்றிய பயிரோ செழித்து வளரும் சிறப்புடையது. அதற்கு நீரைச்சொரிய மேன்மேலுந் தழைத்து வளர்ந்து செழித்த பயனை நல்கும். அதைப் போன்று நல்லறிவாளர் உள்ளத்தில் பெய்த தெள்ளிய கருத்துகள் எல்லோர்க்கும் நல்லின்பம் விளைக்குமன்றோ!

கல்வியறிவில்லாத கயவர்கள் கூடிய புல்லவையுள் புகுந்த ஒருவன் அவ் அவையின் தகுதியை அறியாது, தான் கற்றன அனைத்தும் கொட்டி முழக்குதல் பெருங்குற்றமாகும். எல்லாம் அறிந்தும் அவையின் தரமறியாத திறம் யாது பயனைச் செய்யும்? அவன் அவ்அவையினரை நோக்கி வருந்துவதால் என்னபயன்? என்று இடித்துரைப்பார் குமரகுருபரர்.

‘கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉம்
குற்றம் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை உணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்’

என்பது அவர் காட்டும் நீதிநெறியாகும்.

கடல் வெள்ளத்தில் மிதந்து செல்லும் கப்பலில் எவ்வளவு பாரமான பொருளை ஏற்றினலும் அஃது இலேசானதாகி விடுகின்றது. அதைப் போன்றே புல்லவையுள் புகுந்த நல்லார் தமக்குரிய பெருமையை தண்ணார் என்றுரைத்தார் சிவப்பிரகாசர்.

'கல்லா அறிவிற் கயவர்பால் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணுரே'

என்பது அவரது நன்னெறிப் பொன்மொழியாகும்.

அறிவுடையார் தாம் பெற்ற இன்பம் வையகமும் பெறுவதாக என்று பேருள்ளம் கொண்டு பிறர்க்குத் தமது அறிவைப் பயன்படுத்தச் சொல்வன்மை இன்றி யமையாதது. அச் சொல்வன்மை அவையச்சம் நீங்கி ஞர்க்கே பாங்குற அமைவதாகும். அறிவுடையார் தாம் சொல்லப் புகுந்த அவைக்கு அஞ்சி நெஞ்சம் கலங்குவ ராயின் வாயினின்று சொற்கள் வரமாட்டா. உள்ளமும் உடம்பும் ஒருங்கு நடுங்கி உரை தடுமாறி எல்லாம் மறந்து வீழ்வர். ஆதலின் அறிவுடையார்க்கு அவையஞ்சா ஆற்றல் இனிது அமைய வேண்டும். அதனை அவை யஞ்சாமை என்ற பகுதியுள் வகுத்துரைப்பார் வள்ளுவனர்.

'அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்'

பூத்தலிற் பூவாமை நன்று' என்று புகல்வார் குமர குருபரர்.

குற்றமறக் கற்றுத்தெளிந்த தூய அறிவினர்க்கே அவையச்சம் இலதாகும்; மற்றவர்க்கு அஃது உளதாகும் என்று உரைப்பார் திருவள்ளுவர். அன்னவரே அவையின் தகுதியைத் தெரிந்து மறந்தும் வழுத்தோன்ருவண்ணம் ஒன்றனை மொழிவர். அவர்கள், கற்ருர் அவைக்கண் அஞ்சாது தாம் கற்றவற்றை அவர் உள்ளம் கொள்ளுமாறு சொல்லுவர். அவர்களே கற்ருருள் கற்ருர் என்று உலகத்தவரால் உவந்து ஏத்தப் பெறுவர். இங்ஙனம் அவையஞ்சா அறிஞர் பெருமையை அறிவுறுத்தினர் திருவள்ளுவர்.

'ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே! தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு'

என்று உறுதிமொழி உரைத்தார் தமிழ் மூதாட்டியார். மக்கள் அனைவரும் தக்கார் நல்லவையில் புக்கிருத்தல் ஒல்லாது. நூற்றில் ஒருவரே அதற்குரிய ஆற்றல் பெற்று ஒளிர்வர். அவருள்ளும் புலவரென்ற தகுதியுடன் புக்கிருக்கும் மிக்கார் ஆயிரத்தில் ஒருவராகவே அமைவர். இத்தகைய அறிஞர் நிறைந்த அவையுள் அஞ்சாது செஞ்சொல் வழங்குவார் பதினாயிரத்தில் ஒருவராகவே பாருள் காணமுடியும். அச்சொல்வல்ல புலவரைப் போற்றிக் காக்கும் புரவலரோ கோடிக்கு ஒருவராகவே திகழ்வர் என்று தேர்ந்து மொழிந்தார் அம் மூதாட்டியார். இவர் படிப்படியாக விளக்கிய இக் கருத்தைத் தெய்வப் புலமை சான்ற திருவள்ளுவர் இரு வரிக்குள் சுருக்கமாகச் சொல்லும் திறம் வியக்கற்பாலதாகும்.

'பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத் தஞ்சா தவர்'

என்பது அவர்தம் சொல்லமுதம் ஆகும். பகைவர் போர்க்கோலம் தாங்கி நிற்கும் போர்க்களத்தில் அஞ்சாது புகுந்து போர் புரிந்து ஆருயிரை இழப்பவர் அநேகர். ஆனால் கற்றவர் அவையுள் அஞ்சாது புகுந்து சொல்ல வல்லார் மிகவும் அரியர். அத்தகைய அரிய ஆற்றலைப் பெற்றவர், தாம் கற்றவற்றை மற்றவர் மனம் கொள்ளுமாறு சொல்லவேண்டும். அவற்றினும் மிக்க பொருள்களை மிகக் கற்றாரிடத்து அறிந்துகொள்ளவேண்டும்.

நுண்ணிய நூல் பல கற்றவராயினும் அவைக்கு அஞ்சும் அறிவுடையார் பலர். அவர்கள் பெற்ற நூலறிவால் சிறிதும் பயனில்லை. நெஞ்சில் உரமில்லாத ஒருவன் வாளேந்தி யாது பயன்? அவன் கையிற் பிடித்த வாள் எத்துணைக் கூர்மையுடையதாய் இருந்தாலும் அதனால் விளைவது ஒன்றுமில்லை. அதைப் போன்றே ஒருவன் மிகச் சிறந்த நூல்களை மிகவும் நுட்பமாகப் பயின்றிருந்தாலும் அவைக்கு அஞ்சுவானாயின் அவனது நுண்ணறிவு பிறர்க்கும் தனக்கும் பயன்படாதொழியும். இதனை மக்களுடைய தீர்ப்புக்கு விடும் திருவள்ளுவருடைய பொருண்மொழி உவமை நலம் கனிந்த உயர்ந்த வினவாகத் திகழ்கின்றது.

'வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

அவைக்கஞ்சும் அறிஞனது இழிவை மற்றுமோர் உவமையால் வள்ளுவர் விளக்கியருளினர். பெண்ணியல்பு மிக்கு ஆணியல்பும் உடைய பேடி கூரிய வாளைப் பிடிப்பதில் பயனில்லையன்றோ! வீரர் நிறைந்த சிறந்த போர்க்களத்தே பேராண்மை மிக்க வீரன் பிடித்த கூரிய வாளே சீரிய பயனை விளைக்கும். பேடி பிடித்த வாள் தனது பெருமை இழக்கும். அஃதேபோல் கற்றோர் கூடிய அவையும் வாய்த்துச் சொல்லப்பெறும் நூலும் சிறந்ததாக அமைந்தாலும் அதனைச் சொல்லப் புகுந்த கலை வல்லான் அவைக்கு அஞ்சுபவனாயின் அவனது அறிவும் அந் நூலும் சிறப்பை இழப்பனவாகும் என்று உரைப்பார் திருவள்ளுவர்.

'பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்(து)
அஞ்சு மவன்கற்ற நூல்'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

நல்லார் இருந்த அவைக்கண் அச்சத்தால் தாம் கற்ற நல்ல சொற்பொருள்களைச் சொல்லும் வல்லமை இல்லாதவர் பற்பல நூல்களை ஆய்ந்து கற்ற விற்பனராயினும் அவர்கள் உலகிற்குச் சிறிதும் பயன்படார். அவர்களை உலகத்தார் கல்லாத கயவரினும் கடையரென இகழ்வர். அவர்கள் உயிர் வாழ்பவராயினும் இறந்தவர்க்கு ஒப்பாவர். இங்ஙனம் அவையஞ்சுவாரது இழிநிலையைப் பலவாறு விளக்கியருளினார் வள்ளுவர்.

அவையின் திறமறிந்து அச்சமில்லாது அரிய கருத்துகளை நல்லவைக்கண் நவிலப் புகுவார்க்கு நாவன்மை இன்றியமையாததாகும். அதனை நாநலம் என்று வள்ளுவர் சொல்லுவார். அந் நாநலம் நலம் விளைக்கும் நயமுடையதாக இருக்கவேண்டும் என்ற கருத்தால் அங்ஙனம் குறித்தருளினார். நலம் பயக்கும் நாவன்மை பிற நலங்களுடன் ஒப்பிடப்படும் தன்மையுடையதன்று. அது தனிப்பெரும் சிறப்புடைய நலம் என்று குறிப்பிட்டார் அப் புலவர்.

'நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ள தூஉம் அன்று'

என்பது அவர் சொல்லமுதமன்றோ !

நாவன்மையின் சிறப்பைக் குறிப்பிட வந்த சிறுபஞ்சமூலம், உடம்பில் அமைந்த உறுப்புகளின் வனப்பெல்லாம் சிறப்பைத் தருவனவல்ல. சொல்வன்மையின் வனப்பே சிறப்பான வனப்பு என்று குறிப்பிட்டது.

'மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.'

சிறந்த நாவன்மையுடன் அவைக்கண் சொல்லும் சொற்களைச் சோர்வின்றிக் கூர்ந்த கவனத்துடன் சொல்லவேண்டும். 'ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்' என்பது பழமொழி. நாவலன் ஒருவன் திறம்படக் கூறும் சொல்லால் ஆக்கமும் பெருகுவதுண்டு, அழிவும் விளைவதுண்டு. அதிலும் நாட்டை ஆளும் அரசவை அமர்ந்த அமைச்சர் இந்த உண்மையை உணராது சோர்வால் ஒன்றைச் சொல்லுவராயின் அதனல் விளையும் அழிவு நாட்டையே வாட்டுவதாகும். ஆதலின் அமைச்சராவார் அரசவையில் மிகுந்த கவனத்துடன் பேசுதல் வேண்டும் என்பார் பெருநாவலர்.

வள்ளுவர் தமது பாவொன்றில் நாவன்மைக்கு நல்லதோர் இலக்கணம் வகுத்துள்ளார். சிறந்த கருத்துகள் பொதிந்த அத் திருக்குறள் பலகால் நினைந்து இன்புறத் தக்கதாகும். நாவலன் ஒன்றை உரைக்கும்போது அதனைக் கேட்பவர் கருத்தையெல்லாம் கவரும் நற்பண்புகள் அவனது சொல்லில் அமைய வேண்டும். அதனைக் கேளாதவர், கேட்டவர் பாராட்டிச் சொல்லக் கேட்டவளவில், அந்தோ! அந் நாவலனது சொல்லைக் கேளாதொழிந்தோமே! என்று இரங்கிக் கேட்கும் விருப்பை அவர்க்கு விளைக்கவேண்டும். மேலும், நட்பாய் ஏற்றுக்கொண்டவரை அந் நட்பினின்று அகலாத வண்ணம் பிணிக்கும் அரிய குணங்கள் அச் சொல்லில் அமையவேண்டும். பகைவரும் தம் பகைமை ஒழிந்து நட்

பினை விரும்புமாறு செய்யும் வியத்தகுகுணங்கள் அச்சொல்லில் அமையவேண்டும். இனிக் கற்றார், கல்லார் ஆகிய எல்லோரையும் வயப்படுத்தும் வல்லமை அச் சொல்லிற்கு இருத்தல் வேண்டும். வழுவின்மை, சுருக்கம், விளக்கம், இனிமை, விழுப்பயன் தரும் தன்மை முதலாய நற்பண்புகள் அமைந்த சொல்லே சிறந்த நாவலன் வாய்ப் பிறக்க வேண்டும். இத்தகைய பண்புகள் நிறைந்த பண்பட்ட சொற்களைப் பேசுவதே சிறந்த நாவன்மைக்கு இலக்கணமாகும் என்பார் திருவள்ளுவர். இக் கருத்துகளை எல்லாம் தன்னுள் கொண்டு திகழும்,

‘கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்’

என்ற திருக்குறள் எண்ணுந்தொறும் இன்பந்தரும் தெள்ளமுதமாகும்.

அவையிடைத் தமது நாவன்மை தோன்ற நயம்படப் பேசும் நாவலர் தம் குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் ஆகியவற்றால் அமையும் தகுதிக்கேற்பச் சொற்களை ஆய்ந்து சொல்லுதல் வேண்டும். அவையினருடைய தகுதி வேறுபாடுகளையும் உணர்ந்து உரை வழங்குதல்வேண்டும். அங்ஙனம் ஆராய்ந்து பேசும் அருஞ்செயல் சிறந்த பொருளும் புண்ணியமுமாக எண்ணப்படும். நாவல்லார் தாம் சொல்லக் கருதிய சொல்லை வெல்ல வல்லதொரு சொல் இல்லாத வகையில் தெள்ளத் தெளிந்து சொல்ல வேண்டும். தம் சொல்லைக் கேட்டார், பின்னும் பலகால் கேட்க விரும்புமாறு சொல்லவேண்டும். தாம் பிறர் பேசும் சொற்களைக் கேட்க நேர்ந்தால் அவரது சொல்லின் பயனை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இது குற்றமறக் கற்றார் கொண்ட துணிபாகும் என்றார் திருவள்ளுவர்.

'வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்'

என்பது அவர் சொல்லமுதமாகும். இக் கருத்தை வலியுறுத்த வந்த பழமொழி ஆசிரியர்,

'கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பர் வித்தகர்'

என்று மொழிந்தருளினார்.

சொல்வன்மை மிக்கானது சிறப்பைக் குறிப்பிட வந்த செந்நாப்போதார், அன்னவனைப் பகைமையால் வெற்றி கொள்ள எவராலும் இயலாது என்கிறார். அவன் எண்ணிய காரியங்களை எத்தகைய பிறரும் ஏற்குமாறு சொல்லும் வல்லமையுடையவன். சொல்ல வேண்டிய செய்திகள் மிகப் பலவாய்ப் பெருகிய வழியும் ஒன்றும் மறவாது திறம்பட உரைக்க வல்லவன். அவைக்குச் சிறிதும் அஞ்சாதவன். இம் மூன்று திறங்களும் இனிது அமையப்பெற்ற அருஞ்சொல்வல்லானை வெல்ல யாரால் கூடும் என்று கேட்பார் வள்ளுவர். சொல்வல்லான் தனது திறமையால் பொய்யையும் மெய்யென மக்கள் ஏற்குமாறு செய்து விடுவான் என்பார் அதிவீரராமர்.

'பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே'

என்பது அவர் மொழிந்த நறுந்தொகையாகும்.

இனி, அச் சொல்வன்மையுடையான் தான் சொல்லும் செய்திகளை நிரல்படக் கோத்துச் சொல்லுவான். மக்கள் மனமும் செவியும் மகிழ்ந்து ஏற்குமாறு வரிசைப் படுத்தி வகுத்துரைப்பான். அவற்றை மிகவும் இனிமையாக

எடுத்துரைப்பான். இத்தகைய நலத்தொடு பேசும் நாவலன் ஏவலை உலகம் தலைமேல் தாங்கி விரைந்து செய்ய முனைந்து நிற்கும் என்று மொழிந்தருளினார் திருவள்ளுவர்.

'விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்'

என்பது அவர் சொல்லமுதமாகும். அன்னவர் சிலவாய சொற்களில் பலவாய பொருள்களை விளக்குவர். ஒன்றை விரைந்து உரைக்க மாட்டார். சொன்னவற்றையே பின்னும் பின்னும் பன்னி உரையார். பொய்யாய கருத்துகளைப் புகலார். ஒரே பொருளைப் பெரிதும் விரித்துரையார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பர். இங்ஙனம் சிறந்த நாவலர்க்கு இலக்கணம் வகுத்தது ஆசாரக்கோவை :

'விரைந்துரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித் துரையார்—ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னானே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து'

என்பது பெருவாயின் முள்ளியாரது அருமைப் பாடலாகும்.

சொல்வன்மையின் இன்றியமையாமையையும் அதன் சிறப்பையும் குறிப்பிட வந்த குமரகுருபரர், எத்தனை நூல்களைக் கற்றுணர்ந்தாலும் அவையின் தகுதியறியும் அறிவு, ஒருவற்கு இல்லையெனிற் கற்ற கல்வியால் பயனில்லை; அவையின் தகுதியறியும் ஆற்றலுடன் கற்றவற்றை அஞ்சாது எடுத்துரைக்கும் செஞ்சொல் திறம் இனிது அமையவேண்டும்; அஃதும் அமையுமாயின் பொன்னால் செய்த மலர் புது மணம் பெற்றுக் கமழ்வதற்கு ஒப்பாகும் என்று உரைத்தருளினார்.

'சொல்வன்மை இன்றேனின் என்னும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து'

என்பது அவரது திருவாக்கு.

## ௧௩. இன்பமும் துன்பமும்

இன்பத்தை விரும்பாத மனிதன் யார்? இம்மையிலும் மறுமையிலும் எல்லோரும் இன்பத்தைப் பெறவே விரும்புகின்றனர். ஆனால், இறைவன் வகுத்த வகையாலன்றிக் கோடிக்கணக்கான செல்வத்தைத் தொகுத்தவராயினும் இன்பம் துய்த்தல் அரிதாகும். அதனாலேயே நக்கீரர், 'துய்ப்பேம் எனினே தப்புந பலவே' என்று நவின்றருளினார்.

சிலர் கண்ணுக்கினிய காட்சிகளைக் காண்பதில் கழிபேரின்பம் அடைவர். சிலர் சிந்தைக்கும் செவிக்கும் இனிய இன்னிசைகளைக் கேட்பதில் இன்பம் காண்பர். சிலர் சுவை மிகுந்த உணவுகளை உட்கொள்வதில் உள்ளுவகை கொள்ளுவர். சிலர் நறுமணப் பொருள்களை நுகர்வதில் நல்லின்பம் காண்பர். சிலர் பொன்னும் மணியும் பூணுவதிலும் பொற்புறும் பட்டாடைகளைப் புனைவதிலும் தனியின்பம் காண்பர். இங்ஙனம் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல இன்பங்களுக்கும் ஆசைப்படாத மக்களே இலர்.

ஒன்றை இன்பமென உணர்வதும் மற்றொன்றைத் துன்பமென வெறுப்பதும் உள்ளத்துக் கொள்வதோர் கொள்கையே அன்றிப் பிறிதில்லை யென்பர் அறிஞர். ஒருவற்கு இன்பமெனப்படுவது மற்றொருவற்குத் துன்ப

மாகத் தோன்றலாம். ஒருவற்குத் துன்பமெனப் படுவது இன்னொருவற்கு இன்பமென இருக்கலாம். எல்லாம் அவனது உள்ளத்தின் இயல்பைப் பொறுத்ததாகும். மெய்ப்பொருளில் நாட்டமுடைய மேலோர் பிறர் பேசும் வன்சொல்லை இன்சொல்லாகக் கொள்வர். கூழை நெய் பெய்த சோறென்று கொள்ளுவர். மிகவும் கசப்பான பொருளை வெல்லக் கட்டியென விரும்பி யுண்பர். இத்தகைய மாற்றத்திற்குக் காரணம், அவர்தம் உள்ளத்தில் கொண்ட கோட்பாடே.

மக்கள் அறத்தோடு பொருந்தி வரும் இன்பத்தையே அனுபவித்தல் வேண்டும். அதற்குப் புறம்பாக வரும் இன்பமெல்லாம் ஒருகால் இன்பந்தரினும் பின்னர்த் துன்பத்தையே பெருக்கும். அஃதன்றிப் புகழையும் அழிக்கும். ஆதலின் 'அறத்தான் வருவதே இன்பம்' என்று அறிவுறுத்தினர் திருவள்ளுவர். இல்லற வாழ்வில் எழிலும் கற்பும் மிக்க இல்லாளைப் பெற்றவன் இணையிலா இன்பத்தை எய்துவான்.

'இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை'

என்பதன்றோ வள்ளுவர் சொல்லமுதம் ?

மனையறத்தின் அணிகலனாய்த் திகழ்பவர் மக்கள். மக்கட் செல்வமே மிக்க செல்வமெனத் தக்கோர் கூறுவர். பெற்றோர்க்குத் தம் பிள்ளைகள் இளங்கையால் அளாவப் பெற்ற கூழ், அமிழ்தினைக் காட்டிலும் அதிக இன்பத்தை அளிப்பதாகும். அவரது மெய்யைத் தீண்டுதல், பெற்றோர்க்கு மிக்க இன்பம் தருவதாகும். அவரது மழலை மொழிகளைக் கேட்பது செவியினுக்குச் சிறந்த இன்பம் பயப்பதாகும்.

வறியார்க்கு வேண்டியவற்றை வழங்கி, அவர் உவத்தலால் அருளுடையார் எய்தும் இன்பம் மற்றொரு வகையானது. அதனை 'ஈத்துவக்கும் இன்பம்' என்று குறிப்பார் திருவள்ளுவர். அதனையே 'வள்ளியம் என்னும் செருக்கு' என்றும் வழங்குவார். ஈகையால் விளையும் இன்பத்திற்கு ஓர் எல்லை காட்ட விரும்பிய வள்ளுவர்,

'சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை'

என்று இயம்பியருளினர். ஒருவற்கு இறப்பைப் போன்று இன்னாதது ஒன்றுமில்லை. அத்தகைய துன்பமும் வறியார்க்கு ஒரு பொருளை வழங்கமுடியாத வழி, அருள் நெஞ்சினர்க்கு அளவற்ற இன்பம் தருவதாகும்.

தமிழ் மதுரைத் திருநகரில் கலைமகள் கோவில் மண்டபத்தே ஆபுத்திரன் என்னும் அந்தணச் சிறுவன் வாழ்ந்து வந்தான். வாரணாசியைச் சார்ந்த அச் சிறுவன் வேள்விப் பசுவினை அவிழ்த்துவிட்ட குற்றத்திற்காக அங்குள்ளாரால் விரட்டப்பெற்று மதுரை மாநகரை உற்றவன். அவன் நாள்தோறும் கையில் ஓடேந்தி வீடுகளில் சென்று பிச்சை ஏற்பான். பிச்சையெடுத்து வந்த சோற்றைத் தன்னைச் சார்ந்தார்க்கு உவகையுடன் வழங்கித் தானும் உண்டு மகிழ்வான். பசியால் தன்னைச் சூழ்ந்தோர் உணவுண்டு பசியாறி மலர்ந்த முகத்துடன் விளங்குவதைக் காணக் கழிபேரின்பம் எய்துவான்.

இங்ஙனம் பிச்சை எடுத்தும் பேரறம் புரிந்துவரும் அந்தணச் சிறுவனிடம் பெருமழை பொழிந்துகொண்டிருந்த ஒருநாள் நள்ளிரவில் பசியுடன் வந்த பலர், தமது பசியைப் போக்குமாறு வேண்டினர். அந்த நள்ளிருட் போதில் யாது செய்வதெனத் தெரியாது

அக் கலைமகள் நியமத்தில் குடிகொண்ட சிந்தாதேவியைச் சிந்தையுருகப் பணிந்து வேண்டினான். அக் கலைத் தெய்வம் தன்னைப் பணிந்த ஆபுத்திரனுக்கு,

'வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தகைமையது'

ஆகிய அமுதசுரபி என்னும் தெய்வப் பாத்திரத்தை அருளொடு வழங்கியது. அதனைப்பெற்ற ஆபுத்திரன் அதனின்று சுரந்த உணவைத் தன்பால் அன்புடன் வந்தவர்க்கு ஊட்டிச் சிந்தை மகிழ்ந்தான். அன்று முதல் ஆபுத்திரன் வீதியில் சென்று பிச்சை ஏற்பதில்லை. அமுதசுரபியினின்று சுரக்கும் அமுதனைய உணவை அடைந்தார்க்கெல்லாம் அகமகிழ ஊட்டித் தானும் தனி மகிழ்வுற்றான்.

ஆபுத்திரன் அறச்செயலை உணர்ந்த தேவர்கோன் அவனுக்கு வரமருள வானகம் நீங்கி மதுரையைச் சார்ந்தான். ஆபுத்திரனைக் கண்டு, 'நினது அறச்செயலை வியந்து பாராட்டினோம், நினக்கு வேண்டும் வரத்தைக் கேட்க; மகிழ்வுடன் வழங்குவோம்' என்று இயம்பினான். அதற்கு மறுமொழி பகர்ந்த ஆபுத்திரன்,

'வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தவர்
திருந்து முகங்காட்டும் இத்தெய்வக் கடிஞை'

என்பால் இருக்கிறது. இதனால் வறியவர்க்கு வயிறார ஊட்டுகிறேன். அவர்கள் அகமும் முகமும் மலர்ந்த அரிய காட்சியைக் காணுகிறேன். அதனால் அளவிலாத இன்பத்தை அடைகிறேன். இதற்கு மேலான இன்பம் வேறென்ன இருக்கிறது? இந்திரனே! நீ எனக்கு என்ன வழங்க இருக்கிறாய்? உண்டியோ? உடையோ? பெண்டிரோ? ஒன்றும் எனக்கு வேண்டுவதில்லை''

என்றான். ஆபுத்திரன் மொழியைக் கேட்ட அமரர்கோன் அடங்காச் சினத்துடன் திரும்பினான். அவ் ஆபுத்திரன் ஈத்துவக்கும் இன்பத்தில் பெரிதும் திளைத்து நின்றானன்றோ!

நின்றைக் காளத்தி வள்ளல் தமது செல்வத்தையெல்லாம் வறியவர்க்கு வாரி வாரி வழங்கிவிட்டு, இறுதியில் தாமும் வறியரானார். தானே, தம்மைக் காண வருவார்க்கு இல்லையென்ற சொல்லையன்றோ இயம்ப வேண்டும்! அச் செயல் நம் மரபிற்கே இழுக்கைக் கொடுப்பதன்றோ! இன்றிரவே வீட்டைவிட்டு நீங்கிக் காட்டையடைவேன் என்று உள்ளம் இரங்கிக் காடு புகுந்தார். காட்டிடையே பாழும் மண்டபமொன்றில் படுத்துக்கிடந்தார். அதே மண்டபத்தில் மற்றொருபால் படுத்திருந்த பைந்தமிழ்ப் புலவனொருவன் தன்னைப் பன்னெடுங்காலமாக வருத்தி வரும் வறுமையுடன் உறவாடி உரையாடும் திறத்தைச் செவிகுளிரக் கேட்டார். அப் புலவன் உளமுருகிப் பாடிய பாடல் வள்ளலின் உள்ளத்தையும் உருக்கிவிட்டது.

'நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருத்தியோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே இரு'

என்று பாடிய புலவனது பாவைக் கேட்டுக் காளத்தி வள்ளல் உள்ளம் கரைந்தார். "ஐயோ! இப் புலவன் எத்தகைய உள்ளத்துடன் இருக்கிறான்! நாளை நம்மைக் கண்டு நல்குரவைப் போக்கிக்கொள்ளலாம் என்ற உறுதியையன்றோ கொண்டுள்ளான்! இவன் நாளை நமது மனையகம் புகுந்து நம்மைக் காணானாயின்

எத்துணைத் துன்பம் எய்துவான்! அத்தகைய துன்பம் அடையாதவண்ணம் நாம் இறந்துவிடவேண்டும். நமது இறப்பை அறிந்தானாயின், 'வள்ளல் உயிரோடு இருந்தால் நம் வறுமையை ஒழித்திருப்பான், அவனோ இறந்துவிட்டான்' என்று எண்ணியாவது ஒருவாறு உளந்தேறிச் செல்வான்'' என்று பலவாறு நினைந்தார். பொழுது புலர்வதற்கு முன்னர்த் தமது மனையகம் புகுந்தார். தமது உயிரை மாய்த்துக்கொள்ள விரும்பி, வீட்டுத் தோட்டத்திலுள்ள பாம்புப் புற்றினுள் கையை விட்டார். ஆங்கிருந்த விடநாகம் காளத்தி வள்ளலின் கரத்தைக் கண்டதும் தனது மணியைக் கக்கியது. கையில் நாகமணியைக் கண்ட வள்ளல் மீண்டும் மனையுட் புகுந்தார். தம்மை நாடிப் பாடிவந்த புலவனுக்கு நாகமணியையே பரிசிலாக வழங்கி மகிழ்ந்தார். அவ் வள்ளல் தமது ஈகையறத்திற்குத் தடையாக வறுமை வந்தபோது சாதலே இன்பமென எண்ணினார்.

துறவறத்தில் நிற்பார்க்கு ஆசைகள் அறவே ஒழிய வேண்டும். இன்றேல் அவை துன்பத்துள் துன்பமாகப் பெருந்துயர் விளைக்கும். அவ் ஆசைகள் முற்றும் அற்றுவிட்டால் மறுமையில் மட்டுமன்றி இம்மையிலும் இன்பம் இடையறாது பெருகும் என்றார் பெருநாவலர்.

'இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்'

என்பது அவரது சொல்லமுதம் ஆகும்.

உள்ளத்திற்கு இனிப்பது உயர்ந்த கல்வியாகும். சிறந்த நூல்களை ஆராய்ந்து கற்கக் கற்க அளவிலாத இன்பம் விளையும். 'நவில்தொறும் நூல் நயம்' என்பதன்றோ வள்ளுவர் சொல்லமுதம்! இறைவனது திரு

வருள் இன்பத்தைக் குறிக்க வந்த சுந்தரர், 'கற்ற கல்வி யினும் இனியானை' என்று மனங்கனிந்து பாடினார். பேரறிஞன் தான் கல்வியால் பெற்ற இன்பத்தை மற்ற வர்க்கு உரையால் வழங்கும்பொழுது அவர்களும் இன்புறு கின்றனர். அவரது இன்பத்தைக் கண்டவுடன் கலைஞன் மேன்மேலும் இன்பந்தரும் கல்வியை விழைந்து கற்பான். இங்ஙனம் பல்வேறு வகையில் மக்கள் இன்பத்தை எய்துவர்.

'நல்ல செயலுக்கு நாலு இடையூறு' ஏற்படுவது உலக இயற்கை. அதனைக் கண்டு உள்ளந் தளர்வது அறியாமையாகும். துன்பத்தைக் கண்டு உள்ளம் துளங் காது மகிழ்க என்றார் வள்ளுவர். அங்ஙனம் மகிழ்வதே அத் துன்பத்தைத் தாக்கிப் போக்கவல்ல வழியாகும். வெள்ளம் போன்று வெந்துயர் பெருகிவந்தாலும் அறி வுடையார் அதனை இன்பமெனமாற்றி எண்ணவே அவரைச் சாராது அகலும். இடையூறு விளைந்த இட மெல்லாம் உளந்தளராது செயலாற்றுபவனைத் துன்பம் யாது செய்யமுடியும்! களரும் அளறும் மணலும் மண்ணும் காடும் மேடும் கடந்து வண்டி இழுக்கும் காளைகள் மருங் கொற்றியும் மூக்கு ஊன்றியும் காலால் தவழ்ந்தும் அரிதின் இழுக்குமாறுபோலத் தன் மெய்வருத்தம் நோக் காது ஊக்கமுடன் முயல்பவனை வந்துற்ற துன்பம் தானே துன்புற்றொழியும்.

செல்வம் வந்து சேர்ந்த காலத்தில் இதனைப் பெற் றோம் என்று செருக்குறாதவர் வறுமையுற்ற காலத்து, ஐயோ! யாம் வறியமாயினோமே என்று வருத்தமும் கொள்ளார். உடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாமல் ஊழ்வினையால் துன்பம் எய்துதல் இயல்பு என்பதைத்

தெளிதல்வேண்டும். அத்தகைய தெளிவுடையார்க்குத் துன்பம், துன்பமாகத் தோன்றுவதில்லை. முன்னை நல்வினையால் இன்பம் துன்னிய வழி அதனைத் துய்த்துக் கொண்டே உளத்தால் விரும்பாதவர், துன்பம் வந்த போதும் அதனை அனுபவித்துக்கொண்டே உளத்தால் வருந்தார். அங்ஙனம் ஒருவன் முயற்சியால் வரும் துன்பத்தைத் தனக்குவந்த இன்பமாகக் கற்பித்துக் கொள்வானாயின் அவன் பகைவரும் மதிக்கும் மாண்பினைப் பெறுவான்.

மறுநாள் மணிமுடி தரிக்க இருக்கும் இராமன் தன் சிற்றன்னையாகிய கைகேயியின் அரண்மனையை அடைந்தான். பெற்ற மகனைக் காட்டிலும் பேரன்பு காட்டி இராமனை வளர்த்த கைகேயி அவனது வரவை அறிந்தவுடன் எமனென வந்து எதிரே தோன்றினாள்.

'தாயென நினைவான் முன்னே
கூற்றெனத் தமியள் வந்தாள்'

என்ற கம்பரது வாக்கு எத்துணைக் கருத்துநலம் பொதிந்து காணப்படுகிறது! அவளைக் கண்டதும் இராமன் தனது சென்னி மண்ணுற வணங்கினான். சிந்துரப் பவளச் செவ்வாயைத் தன்து செங்கையால் புதைத்தான். மற்றொரு சுந்தரத் தடக்கையால் ஆடையை மடக்கித் துவண்டு நின்றான். அந்தி நேரத்தில் வீடு வந்து சேர்ந்த தாய்ப்பசுவைக் கண்ட கன்றைப்போல் அன்புருக நின்றான்.

இங்ஙனம் தாயை வணங்கித் தனிப்பெரும் பணிவுடன் நின்ற இராமனை நோக்கி, கைகேயி, 'உனக்கு இன்று அறிவிக்க வேண்டியதொரு செய்தியுண்டு' என்றான். 'என் தந்தையே ஏவத் தாயாகிய நீரே

அதனைக் கூறியருளும் பேறு எனக்கு வாய்க்குமாயின் இதைவிடப் பிறிதொரு தவப்பயன் உளதோ? எனக்குத் தந்தையும் தாயும் நீரே; கட்டளையிடுக! பணியினைத் தலையால் செய்யக் காத்திருக்கிறேன்' என்று இராமன் மறுமொழி இயம்பினான்.

உடனே கைகேயி, "கடல் சூழ்ந்த இவ் உலக மெல்லாம் பரதன் ஒருவனே ஆளவேண்டுமாம்; நீயோ தாழ்சடை தாங்கித் தவக்கோலம் பூண்டு, கானகம் புகுந்து, புண்ணிய நதிகள் படிந்து, ஏழிரண்டு ஆண்டுகள் கழித்து மீளவேண்டுமாம்; இங்ஙனம் இந்த நாடாளும் அரசர் கட்டளை பிறப்பித்துள்ளார்" என்று மிகவும் திறம்பட உரைத்தாள்.

தசரதன் தாங்கமுடியாத பெரும்பாரத்தைப் பரதன் தலையில் சுமத்திவிட்டான் என்று தோன்றுமாறு கைகேயியைப் பேச வைத்த கம்பர் திறத்தை என்னென்பது!

கைகேயியின் மொழியினைக் கேட்டு இராமன் இதயம் கலங்கவில்லை. எல்லையற்ற இன்பமே அடைந்தான். அவன் அடைந்த துன்பத்தின் அளவை இப்பொழுது என்னைப் போன்ற கவிஞரால் கணக்கிட்டு இயம்புதல் இயலுமோ! என்று கவியரசராய கம்பர் பெருமானே வியந்துரைப்பாராயின் துன்பத்தையும் இன்பமென வரவேற்ற இராமனது உயர்பண்பை என்னென்னுரைப்பது!

'இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்

ஒப்பதே முன்பு பின்பவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா !'

கம்பர் வரைந்தருளிய இக் கவிச் சித்திரம் கற்பவர் உள்ளத்தைக் கவர்வதன்றோ ! சிற்றன்னையின் கட்டளை மொழியைக் காதால் மட்டும் கேட்டானில்லை. கருத்தாலும் இனிதுணரக் கேட்டான் இராமன். அப்பொழுது அவனடைந்த இன்பம் அவனது மலர்ந்தமுகத்தால் புலப்பட்டது. அப்போதுதான் பூத்த செந்தாமரை மலரின் சிறந்த அழகையும் அவனது மலர்ந்த திருமுகம் வென்று விட்டது. அங்ஙனமாயின் மணிமுடி இழந்ததுன்பநிலையை இராமன் துன்பமென எள்ளளவும் கொள்ளவில்லை. அதனை இன்பமென்றே எண்ணி மகிழ்ந்தான். அவன் மணிமுடிதரிக்கும் இன்பத்தை இன்பமென எண்ணி இறுமாக்கவில்லை. இப்போது அதனை இழக்கும் துன்பத்தையும் துன்பமென எண்ணி உள்ளம் துளங்கவில்லை. இரு சமயத்திலும் ஒத்திருக்கும் உள்ளத்தனாகவே விளங்கினான்.

'இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்'

என்ற வள்ளுவர் சொல்லமுதம் இராமனது வரலாற்றால் எத்துணை வலிபெறுகின்றது !

அசோகவனத்தில் சிறையிருந்த செல்வியாகிய சீதை, தன் கணவனாகிய இராமனது உயர்ந்த குண நலன்களை எண்ணியெண்ணி இனைகின்றாள். அப்போது இராமன் முடிசூடும் இன்பம் வந்த நாளிலும் அதனை இழக்கும் துன்பம் வந்த நாளிலும் மாறுபடாது அழகுற

மலர்ந்த செந்தாமரை மலரை ஒத்து விளங்கிய அவனது திருமுகம் அவனது அகக்கண் முன்னர்த் தோன்றியது. அதனை நினைத்து அகமுருகினாள் சீதை. அவளது உளநிலையை விளக்கும் கம்பரது பாடல் கற்பவர்க்கு இன்ப மூட்டுவதாகும்.

'மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள்.'

இங்ஙனம் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்று போல் கருதி அனுபவிக்கும் உள்ளம் எல்லோர்க்கும் எளிதில் வாய்ப்பதன்று. யான், எனது என்னும் இரு வகைப் பற்றுகளை விட்டொழித்தார்க்கே அத்தகைய உள்ளம் அமைவதாகும். இப் பற்றுகளே துன்பத்திற்குக் காரணமாவன. ஆதலின் அவற்றைத் துன்பத்துள் துன்பம் என்று குறித்தார் திருவள்ளுவர். அத்தகைய அவாக் கெடுமாயின் இருமையினும் இன்பம் பெருகும்.

'இன்பம் இடையறா(து) ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்'

என்பது வள்ளுவர் சொல்லமுதம்.

## ௫. செல்வமும் நல்குரவும்

'செல்வம் என்பது சித்தையின் நிறைவே' என்பர் செந்தமிழ் அறிஞர். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று கூறுவர் சிலர். இங்ஙனம் பல்வேறு வகையில் செல்வத்திற்கு இலக்கணம் வகுப்பர் சிறந்த அறிஞர். பதினாறு வகையான செல்வங்கள் ஒருவனது வாழ்வை வளம்படுத்த வேண்டும் என்று கண்ட நம் முன்னோர் வாழ்த்தும் பொன்னான மொழி எண்ணுதற்குரியது. 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க !' என்று பெரியோர் வாழ்த்துவதைக் கேட்டிருக்கலாம். ஒருவனது வாழ்விற்கு இன்பமூட்ட உறுதுணையாய் விளங்கும் அனைத்தும் செல்வம் என்ற சொல்லுள் அடங்குவனவே.

தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தமது தென்னமுதப் பெருநூலில் பல செல்வங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மக்கட் செல்வம், அருட் செல்வம், பொருட் செல்வம், கல்விச் செவ்வம், செவிச்செல்வம், முதலாய பல செல்வங்களுள் ஈண்டு எடுத்து விளக்கப் பெறுவது பொருட் செல்வமே. இஃதே உலக வாழவிற்கு இன்றியமையாது வேண்டப்படுவது. இதனை,

> 'அருளில்லார்க்(கு) அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்(கு)
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு'

என்னும் வள்ளுவர் சொல்லமுதம் நன்கு வலியுறுத்தும்.

மக்கள் இம்மையில் எய்த வேண்டிய அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்கள் மூன்றனுள் பொருள், பிற இரண்டனையும் பெறுதற்குப் பெருந்துணையாவது.

'வடுவிலா வையத்து மன்னிய மூன்றுள்
நடுவண(து) எய்த இருதலையும் எய்தும்'

என்று நாலடியார் நவிலும்.

'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்(கு) எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு'

என்னும் வள்ளுவர் சொல்லமுதம் அக்கருத்தை நன்கு வலியுறுத்தும். பொருளைப் படைத்தவர் அறனும் இன்பமும் பெறுவர் என்று மட்டும் குறித்தார் சமண முனிவர். ஆனால், வள்ளுவரோ சுருங்கிய சொற்களால் அக்கருத்தை விளக்குந் திறம் வியப்பிற்குரியதாகும். பொருளை ஒண்மை என்ற அடையொடு புணர்த்தினர். அறநெறியால் வந்த பொருளே ஒண்பொருள் என்று போற்றப்பெறும். அத்தகைய பொருளைக் கொண்டு ஆற்றும் அறமே ஏற்றமுடையது. அதனால் துய்க்கும் இன்பமே தூய்மையானது. அதுவே மறுமை இன்பத்திற்கும் காரணமாவது. இத்தகைய கருத்துகள் எல்லாம் பொதிய 'ஒண்பொருள்' என்று குறித்தார். இதனாலேயே தமிழ்மூதாட்டியாரும் பொருளுக்கு இலக்கணம் புகலுமிடத்துத் 'தீவினை விட்டு ஈட்டல் பொருள்' என்று தெரிவித்தார்.

அறத்தால் ஈட்டும் அரும்பொருளும் சுருங்கிய அளவினதாயின் அறனும் இன்பமும் எளியவாகா. படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப்பெருஞ் செல்வர்க்கே அவை எளிதின் அமைவனவாகும். ஆதலின் ஒண்பொருள் காழ்ப்ப இயற்ற வேண்டும் என்று உரைத்தார் வள்ளுவர். அறனும் இன்பமும் ஒருங்கு பெறவேண்டும் என்று எண்ணுவார்க்கே பெரும்பொருள் வேண்டும். ஏதேனும் ஒன்று மட்டும் கொண்டால் போதும் என்று உன்னு

வார்க்குச் சிறு பொருளே போதுமானது என்ற கருத்தையும் புலப்படுத்துகிருர். எண்பொருள் என்ற தொடர் எளிய பொருள் என்று மட்டும் பொருள்பட்டதில்லை; எண்ணத்தக்க பொருள் என்றும் பொருள்பட்டது. பெருத்த செல்வம் படைத்தவரே அறத்தையும் இன்பத்தையும் பற்றி எண்ணுவதில் பயனுண்டு. அவர்கள் எண்ணுவராயின் எளிதில் முடிவன என்ற கருத்தெல்லாம் அமைய அத் தொடரை அமைத்தார் வள்ளுவர்.

ஒருவனைப் பெருமையுடையவ னுக்குவது செல்வமே. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவனையும் மற்றவர் மதிக்குமாறு செய்யும் வல்லமை இச் செல்வத்திற்கு உண்டு.

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்'

என்பது வள்ளுவர் சொல்லமுதம் ஆகும். கல்வி இல்லாத கசடனுக இருந்தாலும் கைப்பொருள் உடையவனுயின் எல்லோரும் சென்று அவனை எதிர்கொண்டு வரவேற்பர். பொருள் இல்லாத ஏழைமகனை மணந்து கொண்ட மனைவியும் விரும்பாள். அவனைப் பெற்ற அன்னையும் வெறுப்பாள். அவனது வாய்ச்சொல்லை எவரும் மதியார். 'ஏழை சொல் அம்பலம் ஏருது' என்பதன்ருே பழமொழி? செல்வமில்லாதவன் எய்தும் சிறுமைகளை எல்லாம் ஒருங்கு சொல்லப் புகுந்த வள்ளுவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

'இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு'

என்பதன்ருே அவரது வாய்மொழி? பெற்ருேரும் உற்ருேரும் மற்ருேரும் மனைவியும் மக்களும் ஆகிய அனைவரும் பொருள் இல்லாதவனை இகழ்வர் என்ற

கருத்தை 'எல்லாரும்' என்ற ஒரு சொல்லால் குறித்த வள்ளுவர் திறம் வியத்தற்குரியதாகும்.

'கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்'

என்பது தமிழ் மூதாட்டியார் காட்டும் நல்வழியாகும். 'பொருளுடையாரைப் புகழாதார் இல்லை' என்றே மொழிவார் முன்றுறையரையனார். "கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல்ஞாலம்' என்று கட்டுரைப்பார் குமரகுருபரர். வெற்றியும் மேன்மையும் கல்வியும் கட்டழகும் சுற்றமும் நட்பும் குலமும் நலமும் ஆகிய எல்லாம் செல்வத்தால் ஏற்படுவனவே. பணம், பெரியோர் பந்தியில் சென்று குந்துமாறு செய்யும். பணமில்லாத குலம் குப்பையிலன்றோ தள்ளப்படும்! 'பணம் இல்லாதவன் பிணம்' என்றன்றோ இகழப்படுவான்?

ஒருவனது புகழை உலகெலாம் பரப்பும் நந்தா விளக்கு, நன்னெறியில் தேடிய செல்வமே. அச் செல்வம் தன்னைப் பெற்றவர்க்கு அவர் எண்ணிய சேய்மை நாட்டிலும் சென்று பகை இருளைக் கெடுக்கும்; வெற்றி ஒளியை வீசும். அவர் செய்கின்ற வினையனைத்தும் சிறப்பாகவே முடியும். அன்னவர் மலைமேல் ஏறி நின்று யானைப் போரைக் காண்பவர்க்கு ஒப்பாவர் என்பார் ஒப்பில் புலவர்.

'குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்(று)
உண்டாகச் செய்வான் வினை'

என்பது அவரது சொல்லமுதம் ஆகும்.

இங்ஙனம் இம்மை இன்பத்திற்கு இன்றியமையாத செல்வத்தைப் பல்வகையாலும் ஈட்டுதல் வேண்டும். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்றார் தமிழ் மூதாட்டியார். மனிதன் தனது வாழ்வை மானமுடையதாகப் பேணிக்கொள்ள, உணவிற்கும் உடைக்குமேனும் பணந்தேடக் கடமைப்பட்டவன். அதற்காகப் பிறர்பால் சென்று சேவகம் செய்வர் சிலர். செல்வரிடம் போய் யாசிப்பர் சிலர். கடல் கடந்து அயல்நாடு புகுந்து வாணிகம் பேணுவர் சிலர். நாடகம் ஆடுவர் சிலர். நாடாளுவர் சிலர். பாவாணராய்ப் பாட்டிசைப்பர் சிலர். இங்ஙனம் பாழாகும் உடம்பிற்கு நாழி அரிசி உணவை நாடி, மக்கள் என்ன பாடுபடுகின்றனர் என்று இரங்கினார் தமிழ் மூதாட்டியார்.

'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்'

என்பது அச் செல்வியார் காட்டும் நல்வழியாகும்.

செல்வத்தைத் தேடுக என்று செப்ப வந்த தெய்வப் புலவர் 'செய்க பொருளை' என்று அறவுரை பகர்ந்தார். உலகில் பல நலங்களும் தமக்கு உண்டாகவேண்டும் என்று எண்ணுவார், செல்வத்தைத் தரும் நல்வழியில் சென்று முயல்க; அச் செயலே செல்வத்தைச் சேர்க்க வல்லது; முயற்சி திருவினையாக்கும்; தளராத ஊக்க முடையானை ஆக்கம் வழி வினவிக்கொண்டு வந்து சேரும் என்ற கருத்தெல்லாம் பொதியச் செயலை முன்னரும் பொருளைப் பின்னரும் குறித்தார். இச் செல்வத்தால் அடையும் சிறப்பிற்கு ஓர் எல்லை சொல்லுவார்போலப், பகைவர் செருக்கினை அறுக்கும் படைக்கலம் செல்வமே;

அதைப்போன்று கூரிய படைக்கலம் வேறொன்றில்லை என்று கூறியருளினார் வள்ளுவர்.

'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்'

என்பது அவரது சொல்லமுதம் ஆகும்.

'ஈட்டி எட்டின மட்டுமே பாயும்; பணம் பாதாள மட்டும் பாயும்' என்பது செல்வத்தின் பேராற்றலை விளக்கும் பழமொழியாகும். எல்லா வல்லமையும் படைத்த செல்வம் என்றும் ஒருவன்பால் நின்று நிலைத்திருப்ப தன்று. நிலையாமைபற்றிப் பேசவந்த பெருநாவலர் செல்வத்தின் நிலையாமையினை இரு பாவான் விளக்கியருளினார். ஒருவனது நல்வினை காரணமாகப் பல்வகையால் செல்வம் வந்து சேர்கின்றது. அந் நல்வினை முடிந்தவழிச் செல்வமும் அவனைத் தணந்துவிடுவது இயல்பு. இதனைத் திருவள்ளுவர் உவமை வாயிலாக விளக்குந்திறம் வியப்பைத் தருவதாகும். நாடக அரங்கத்தில் நடைபெறும் நாடகத்தைக் கண்டு மகிழப் பல்வேறு இடங்களினின்றும் பல்வேறு நிலையினராகிய மக்கள் பெருந்திரளாக வந்து கூடுகின்றனர். அதுபோலவே ஒருவனது பல்வேறு திறப்பட்ட நல்வினைகட்கு ஏற்பப் பல்வகையான செல்வங்கள் வந்து அவன்பால் குவிகின்றன. பொன்னும் மணியும், மாடும் மனையும், நிலமும் புலமும், பதவியும் பாராட்டும் ஆகிய பல்வகைச் செல்வங்கள் தாமே வந்து பற்றுகின்றன. நாடகம் முடிந்த, அப்பொழுதே, நாடி வந்த மக்கட் கூட்டமெல்லாம் அவ்விடம் விட்டு அகலுதல் போன்றே ஒருவனது நல்வினை உலந்த அப்பொழுதே அவன் பெற்ற செல்வமெல்லாம் மாயமாய் மறைந்து போகும்.

'கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று'

என்பது வள்ளுவர் சொல்லமுதம் ஆகும்.

இங்ஙனம் எடுத்துக்காட்டால் செல்வ நிலையாமையை வலியுறுத்திய வள்ளுவர் அதன் இயல்பே நிலையாமை தான் என்றும் குறிப்பிடுகின்றார். 'அற்கா இயல்பிற்றுச் செல்வம்' என்பது அவரது வாய்மொழியாகும். நில்லாத இயல்பையுடைய செல்வத்தைப் பெற்றவன் அதனைப் பெற்றுள்ள நாளில் நிலையான அறத்தைச் செய்து நல்வினையை ஈட்டுக என்று அறிவுறுத்தினார். 'செல்வம்' என்ற சொல்லே 'தான் ஒருவன்பால் நிலைத்திருக்கும் இயல்புடையதன்று' என்ற கருத்தைப் புலப்படுத்தி நிற்ப தாக மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை குறிப் பிடுவார்.

'மல்லல்நீ ருலகில் தோன்றி
மறைந்திடும் நும்மைவிட்டுச்
செல்வமென் றுறுவ தற்குச்
செல்வமென் றுரைக்கும் பேர்நன்று'

என்று குசேலோபாக்கியானத்தில் குறிப்பிடும் சிறப்புக் கூர்ந்து நோக்கத்தக்கது. 'மக்களே! நீவிர் தோன்றி மறையும் இயல்புடையீர்; ஆதலின் நும்மைவிட்டு யாமும் செல்வோம்! செல்வோம்!' என்று செல்வம் ஒருவனை விட்டு நாள்தோறும் சென்றுகொண்டிருக்கிறது. இத்தகைய செல்வத்திற்கு முன்னோர் 'செல்வம்' என்று பெயரமைத்த திறம் மிகவும் பொருத்தமாகும் என்று போற்றினார் அப் புலவர்.

செல்வத்தை அறநெறியில் ஈட்டுவதும் எளிதான செயலில்லை. முயன்று அரிதில் தேடிய பெரும் பொருளைக்

காப்பதும் கடுந்துன்பமே. அதனைக் காப்பதில் சிறிது குறை ஏற்படினும் அழிந்து பெருந் துன்பத்தைத் தரும். ஆதலின் துன்பத்திற்கே உறைவிடமானது செல்வம் என்று நவின்றது நாலடி நன்னூல். துன்பத்திற்கு உறையுளாகிய செல்வத்தாலேயே இன்பத்தை இருமையிலும் பெற இயலும். ஆதலின் அச் செல்வம் தோன்றிய நாள் தொடங்கிப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக என்று அறிவுறுத்தினர் ஆன்றோர்.

'துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்'

என்பது சமணமுனிவர் பொருண்மொழியாகும். எத் தகையாரிடத்தும் செல்வம் நிலைத்திருப்பதில்லை; வண்டிச் சக்கரம் போன்று சுழன்றுகொண்டே வரும் இயல்புடையது என்று இயம்பினர். 'உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா' என்று சுருக்கமாகச் சொல்லும் அதிவீரராமர் அறவுரை மிகவும் அருமை வாய்ந்ததாகும்.

செல்வத்தை வெறுக்கை என்ற பெயராலும் குறிப்பதுண்டு. செல்வம் பல்வேறு பந்தங்களைத் தந்து நிற்கும். உறக்கத்தைப் பெருக்கித் தெய்வத்தை மறக்குமாறு செய்யும். பிறவிப் பெருங்கடலுள் வீழ்த்தும். செருக்கினை வளர்க்கும். பேசும் வாயினரும் ஊமையராவர். கேட்கும் செவியினரும் முழுச்செவிடராவர். காணும் ஒளியுடைய விழியினரும் குருடராய்ப் போவர். இத்தகைய பல கேடுகளைக் கொடுக்கும் இயல்பும் அச் செல்வத்திற்கு உண்டு. ஆதலின் மக்கள் அதனை விரும்புதலாகாது; வெறுத்தலே தக்கது என்ற கருத்

தமைய 'வெறுக்கை' என்ற பெயரைப் பொருத்தமாகக் கொடுத்தனர் புலவர் என்று போற்றினர் மகாவித்துவான் பிள்ளையவர்கள்.

'பொருவறு பந்த மெல்லாம்
புணர்த்திடும் தெய்வ சிந்தை
ஒருவமே லிட்டு நிற்கும்
உறக்கமும் இறக்கச் செய்யும்
கருவினுட் புகுத்தும் இன்ன
கரிசுகண் டதனு லன்றே
இருநிலத் திடைவே றுக்கை
என்மனுர் புல்மைச் சான்றேர்'

என்பது அவரது இனிய பாடலாகும்.

நல்வினை தீவினை இரண்டற்கும் காரணமாகிய செல்வத்தைப் பெற்றவர் அறிவின் துணைக்கொண்டு அதன் பயனைப் பெறுதற்கு முயலவேண்டும். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பார் நக்கீரர்.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'

என்பார் வள்ளுவர். தாமும் துய்க்காது தக்கார்க்கும் வழங்காது புதைத்து வைக்கும் புன்மையுடையார் செல்வம், பருவமும் உருவமும் பெற்றும் மணம் பெருத கன்னியர்க்கு ஒப்பாகும் என்று உரைத்தது நாலடிப் பாடல். கணவனைப் பெருது கன்னியராகவே வாழும் காரிகையர் பேரழகினராய் இருந்து யாது பயன்? தாமும் இன்புருது, தக்க மணாளர்க்கும் இன்பந் தராது, தமது பேரழகைப் பாழ்படுத்திப் பயனின்றி அழிவர். அது போலவே உலோபியின் பெருஞ்செல்வம் அழிந்தொழிவதாகும்.

'கொடுத்தலும் துய்த்தலும் தேற்று இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம்—இல்லத்(து)
உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும்'

என்று சமணமுனிவர் சாபமொழி பகர்ந்தார்.

உலோபிகள் பெற்ற செல்வம் நாய் பெற்ற தெங்கம் பழத்திற்கு ஒப்பாகும் என்றார் பழமொழியாசிரியர். கழுதைக்குக் கரும்பின் சுவை தெரிவதில்லை. உலோபியோ செல்வத்தின்பயனை உணர்வதில்லை. தேங்காயைப்பெற்ற நாய் அதனைப் பாங்காய் உடைத்துண்ணும் பக்குவத்தை அறியுமா ? மற்றவர்க்குத்தான் அதனைக் கொடுக்குமா ? அந்நாயை அடித்துப் பறித்துச் செல்வார்க்கே அத் தேங்காய் பயன்படுவதாகும். ஆகவே, பிறர்க்கு உதவி செய்யார் பெருஞ்செல்வம், வேறு பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேருக மாறும் என்று கூறுவார் சிவப்பிரகாசர். இக் கருத்துகளை எல்லாம் சுருக்கமாகச் சொல்ல வந்த வள்ளுவர்,

'அற்றார்க்கொன்(று) ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று'

என்று கூறியருளினார். உலோபியின் செல்வம் வீணேயழிதல், பெண்களுள்ளே பேரழகைப் பெற்றாள் ஒருத்தி, கொடுப்பார் இன்மையால் கொழுநனைப்பெறுமல் தனித்துக் கன்னியாகவே வாழ்ந்து தனது நலத்தைக் கெடுத்து மூத்த தன்மைக்கு ஒப்பாகும் என்று உரைத்தார் திருவள்ளுவர். மேலும், ஊர் நடுவே நச்சுமரம் பழுத்து நிற்பதற்கு ஒப்பாகும் என்றும் குறித்தார்.

பேரறிவாளர் பெற்ற பெருஞ்செல்வமும், நயனுடையார் பெற்ற நற்செல்வமும், பெருந்தகையுடையார் பெற்ற

அருஞ்செல்வமுமே பிறர்க்குப் பயன்படுவதாகும். அங்ஙனம் மற்றவர்க்கு உதவும் செல்வமே மேன்மேலும் ஓங்கும் பெற்றியுடையதாகும்.

'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள'

என்பதன்றோ வள்ளுவர் சொல்லமுதம்? காக்கை, தனக்குக் கிடைக்கும் உணவைத் தனித்துண்ண எண்ணாது, தனது இனத்தைக் கரைந்து அழைத்து உடனிருந்து உண்ணும். அதைப்போன்று பகுத்துண்ணும் பண்புடையார்க்குச் செல்வம் செழித்தோங்கும் என்று குறித்தருளினர்.

இத்தகைய செல்வநிலைக்கு மாறுபட்டதே நல்குரவு எனப்படுவது. இதனை வறுமை, தரித்திரம், துவ்வாமை, நிரப்பு என்னும் பல பெயர்களால் குறிப்பர் சான்றோர். ஒரு பொருளும் இல்லாது வற்றி வாடிப்போன துன்பநிலையாதலின் நல்குரவிற்கு வறுமை என்ற பெயரும் வழங்கலாயிற்று. இத் துன்பநிலை ஒருவன்பால் என்றும் தரித்திருப்பதன்றாதலின் அதனைத் தரித்திரம் என்றும் குறித்தனர். ஐம்புல இன்பங்களும் துய்க்கமுடியாத துன்பநிலையாதலின் துவ்வாமை என்றும் குறிக்கப்பட்டது. 'துன்புறூஉம் துவ்வாமை' என்று அடைமொழி கொடுத்தே குறிப்பிட்டார் வள்ளுவர். நல்குரவு என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் 'நுகரப் படுவன யாவும் இல்லாமை' என்று பொருள் விரித்தார். 'எல்லாவற்றையும் நல்கும் வலிமை' என்றும் பொருள் தரும் அச்சொல்லுக்கு இன்பம் தருவது ஒன்றும் இல்லாமை என்ற மாறுபட்ட பொருளும் அமைந்த சிறப்பு ஆராய்தற்குரியது. மங்கலமல்லாத சொல்லை மங்கலமாகக் கூறுவது தமிழ்மரபாகும். அதனை

மங்கல வழக்கு என்று இலக்கணம் குறிக்கும். அம் முறையில் நல்குரவு என்றசொல் மங்கலவழக்காக நின்று வறுமையைக் குறித்தது. நிரப்பு என்ற சொல்லும் மங்கல வழக்கின்பாற்பட்டதே. எல்லாம் நிறைந்திருக்கும் நிலையே நிரப்பு எனப்படும். ஒரு பொருளும் இல்லாமையை உடைய வறுமையை நிரப்பு என்னும் எதிர்மறைச் சொல் லாற் குறிப்பதும் தமிழரது சிறந்த பண்பாட்டைப் புலப் படுத்துவதாகும்.

இந் நல்குரவின் கொடுமையைத் திருவள்ளுவர் பத்துக் குறட்பாக்களால் விரித்துரைக்கின்றார். ஒருவ னுக்கு வறுமையைப்போலத் துன்பம் தருவது வையத்தில் எதுவுமே இல்லை; துன்பம் விளைப்பதில் வறுமைக்கு ஒப் பானது வறுமையே என்று குறித்தார் வள்ளுவர்.

'இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது'

என்பது அவரது சொல்லமுதமாகும். 'எற்றுள்ளும் இன்மையின் இன்னாத தில்லை' என்றே நான்மணிக் கடிகை நவிலும்.

கொடியது யாதெனக் கூற வந்த தமிழ் மூதாட்டி யார் 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று வலி யுறுத்தினார். ஒருவனது இளமைப் பருவத்தில் வறுமை வந் துறுமாயின் அது மிகவும்கொடியதாக வருத்தும். இளமை யில் கலந்த வறுமையுடன் பிணியும் சேர்ந்து கொள்ளு மாயின் பெருந்துன்பத்தை விளைக்கும். இவற்றுக்கு மேல் ஒருவனுக்குச் சிறிதும் அன்பில்லாத மனைவியும் அமைந்து விட்டால் அவனது துன்பத்திற்கு எல்லையே இல்லை. இத்தனை துன்பங்களுடன் அவ் அன்பில்லாத மனைவியின் கையால் அமுது படைக்க, உண்ணவேண்டிய நிலை ஏற்பட் டாலோ எண்ணரிய துன்பமே எய்துவான்.

ஒருவனது உள்ளத்தில் பொருமை எழுமாயின் அதனால் பல பாவங்களைச் செய்யத் துணிவான். ஆதலின் அப் பொருமையினைப் பாவி என்றே குறித்தார் வள்ளுவர். 'அழுக்காறு என ஒரு பாவி' என்பது அவர் வாய்மொழி. இதைப் போலவே வறுமையும் பெரும்பாவங்களைச் செய்யுமாறு தூண்டும் பெற்றியுடையது. ஆதலின் இவ் வறுமையையும் வள்ளுவர் 'இன்மை என ஒரு பாவி' என்று குறித்தருளினார். இருமை இன்பத்தையும் இழக்குமாறு செய்து மீளாத இருளுலகத்தில் வீழுமாறு செய்யும் வெம்மை வாய்ந்தது வறுமையாகும். தொன்றுதொட்டு வரும் குடிப்பெருமை யெல்லாம் குலையுமாறு செய்யும். பிறர் பழித்தற்குக் காரணமாய சோர்வைப் பெருக்கும். வறுமைத் துன்பம் காரணமாகப் பல்வேறு துன்பங்கள் தாமே வந்து விளையும்.

வறிஞன் சிறந்த அறிஞனாக நுண்ணிய நூற்பொருளை எண்ணி அறிந்து சொன்னாலும் எவரும் கேளார். இவன் சொல்லும் இனிய பொருளை விரும்பிக் கேட்போமாயின் இவன்பால் அன்பு காட்ட வேண்டும்; இவனது குறையை முடிக்கவேண்டும் என்று அஞ்சிக் கேளாது அகல்வர். ஆதலின் வறிஞனது சொற்கள் பயனற்றனவாய்ப் போகும். இக் கருத்தை வலியுறுத்த வந்த குமரகுருபரர் தக்கதோர் எடுத்துக் காட்டுடன் விளக்கியருளினார். இல்லறத்தை ஏற்ற ஆண்மகன் நல்லறத்தை நாடிச் செயினும் அவனுக்கு வாய்த்த மனைவி மனைத்தக்க மாண்பிலளாயின் அவன் ஆற்றும் அறங்கள் போற்றப்படா. அஃதே போல் வறுமையுற்றார் கற்ற கல்வி எத்துணைப் பெருமையுற்றதாயினும் சிறிதும் சிறப்பெய்தாது என்று குறிப்பிட்டார் குமரகுருபரர்.

துன்பமே அன்றி இழிவையும் தொடர்ந்து தரும் வறுமையால் வாடுவோன் நாள்தோறும் செத்துப் பிறப்பது போன்று சிந்தைநொந்து வருந்துகின்றான். நேற்று வாட்டிய நீள்பசியைப் போக்கப் பெருந்துயருழந்தான் ஒருவன் ஒருவாறு பசியை ஒழித்து நாளைக் கழித்துவிட்டான். மறுநாள் பொழுது புலர்ந்து விட்டது. 'ஐயோ! நேற்றுக் கொன்றது போன்று கொடுந்துன்பம் விளைத்த வறுமை இன்றும் வந்துவிட்டதே! என் செய்வேன்!' என்று கதறினான்.

'இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு'

என்பது வள்ளுவர் சொல்லமுதம் ஆகும்.

வறிஞனுக்குச் சிறிதும் உறக்கம் வராது. ஒருவன் மந்திர வல்லமையாலோ மருந்தின் துணையாலோ நெருப்பிலும் படுத்துறங்க முடியும். ஆனால், வறுமையுற்ற நாளில் எந்த வகையாலும் சிறிதும் துயில் கொள்ள இயலாது என்பர் வள்ளுவர். இத்தகைய வறுமையுற்றோர் யாது செய்தல் வேண்டும்? எல்லாப் பற்றுகளையும் விட்டு முற்றத் துறத்தலே உற்ற வழியாகும். அது செய்யாதிருந்தால் பிறர் இல்லங்களில் உள்ள உப்பிற்கும் காடிக்கும் வறிஞன் எமனாவான் என்று குறித்தார் வள்ளுவர்.

நல்குரவால் பெருகும் கொடும் பசியைச் சீத்தலைச் சாத்தனார் 'பசிப் பிணி என்னும் பாவி' என்று குறிப்பிட்டார். இப்பாவி ஒருவனைப் பற்றுமாயின் அவனது குடிப்பிறப்பு, விழுப்பம், கல்வி, அறிவு, நாணம், அழகு முதலிய எல்லா நலங்களும் அழியும் என்று அறிவுறுத்தினார்.

'குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி'

என்பது அப் புலவரது பொன்மொழியாகும்.

## கூ. குடிமையும் கயமையும்

உயர்ந்த குடியில் பிறந்தாரது தன்மையே குடிமை யெனப்படும். படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் பழங்குடியே சிறந்த குடியெனப் பாராட்டப்படும். வாழை யடி வாழையெனச் சிறந்து விளங்கிவரும் பழங்குடி மக்கள் தம் பண்பில் என்றும் மாறுதலிலர். செல்வம் சுருங்கிய காலத்தும் தமது தொன்மைப் பண்பில் சுருங்காத அருங் குடி மக்களின் பெருமையே குடிமையெனப்படும்.

சிறந்த குடியில் பிறந்த பெருமக்கள் கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறுபடாத செம்மையுடை யோராவர். பழி பாவங்கட்கு நாணும் பண்புடையோ ராவர். தமக்குரிய ஒழுக்கத்தில் எந்நாளும் தவற மாட்டார். வாய்மையில் வழுவாத தூய்மையராவர். இத்தகைய நற்பண்புகள் எல்லாம் அவர்கள்பால் இயற்கையாகவே அமைந்திருக்கும்.

எக்காலத்திலும் மாறுதலில்லாத சீரிய குடியில் தோன்றிய செல்வர்கள் தம்மை நாடி வரும் வறியோரை

முகமலர்ச்சியுடன் வரவேற்பர். தம்பால் உள்ளன வற்றைக் கரவாது உள்ளுவகையுடன் ஈவர். எவர்க்கும் இன்சொல்லே வழங்குவர். எல்லாரும் எள்ளுதற்குரிய இல்லாரையும் அவர் எள்ளார். இந்நான்கு இயல்புகளும் நற்குடி மக்களின் இலக்கணம் என்றே வள்ளுவர் சொல்லுவார்.

'நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

இங்ஙனம் வள்ளுவர் வகுத்த இலக்கணத்தை நாலடியார் சிறிது விளக்கமாக நவின்று வலியுறுத்தியது. நல்லினத்தாருடன் சேர்ந்தொழுகும் நலம், இன்சொல் இயம்புதல், வறியார்க்கு ஈதல், மனத்தூய்மை என்னும் நல்லியல்புகள் எல்லாம் இற்பிறந்தார்க்கு இயல்பாய் அமைந்தன என்று நாலடியார் விளக்கியது.

'இனநன்மை இன்சொல்ஒன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை யெல்லாம்—கனமணி
முத்தோ டிமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே யுள'

என்பது நாலடியார்ப் பாடலாகும்.

'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' என்பது ஒ[ரு] பழமொழி. ஒருவனுக்குச் செல்வம் பெருகிவிடுமாய[ின்] குடிப்பெருமை தானே வந்துவிடும் என்பர் சிலர். செல்வம் காரணமாக மற்றவர் கொடுக்கும் மதிப்பெல்லாம் போலியானவையே. தொன்றுதொட்டு வரும் தவத்தா லும் கல்வியாலும் முயற்சியாலுமே குடிப்பெருமை சிறப் புறுவதாகும்.

'ஒண்பொருள் ஒன்றோ தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்'

என்பது முனிவர் ஒருவர் பொருண்மொழியாகும். இக் கருத்தை மற்றொரு நாலடிப் பாடலும் நன்கு வலியுறுத்தும்.

'சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்தோயும்
மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு'

குடிப்பிறந்தார்க்கு அன்றி, மற்றையோர்க்குப் பெருஞ் செல்வம் பெற்றவிடத்தும் நற்பண்புகள் அமையா என்பதை இப் பாடல் அறிவுறுத்திய தன்றோ!

மலை போன்ற மாண்புடைய மக்களும் தம் பெருமை குன்றுதற்குக் காரணமான இழிசெயலைக் குன்றிமணி அளவாயினும் செய்யார். அதனைச் செய்வதால் கைம் மாருகப் பலகோடி செல்வம் வருவதாயினும் வழிவழியாக ஈட்டி நாட்டிய இசையினை இழக்கத் துணியார். பண் புடையார், 'பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்பார் இளம்பெருவழுதியார். மிகவும் சிறிய செயல் தானே என்று எண்ணிக் குடிப்பிறந்தார் இழிசெயல் ஒன்றைப் புரியத் துணிவராயின் அவரது தொல்புகழ் முழுதும் அழிந்தொழியும். ஆதலின் பழம்பெருங்குடியினர் என்றும் பெருமை குன்றும் செயலைச் சிறிதும் புரியார் என்று இயம்பினர் வள்ளுவர்.

'அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

தொல்புகழ் குன்றாது துலங்கிவரும் பெருங்குடி மக்கள் வறியார்க்கு விரும்பும் பொருளை மனமுவந்து வழங்குவர். அங்ஙனம் கொடுக்கும் பொருள் முன்னினும் குறைந்தாலும் நன்னெஞ்சில் எந்நாளும் குறையார். நீர்வளம் தரும் ஆறுகள் மழையின்மையால் கோடையில் வறந்தனவாயினும், தன்பால் ஊறும் நீரை உலகினர்க்கு உதவுமன்றோ! அத்தகைய ஆறுகளைப்போல, நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாராயினும் இல்லையெனும் இழிசொல்லை எவரிடத்தும் சொல்ல இசையார்.

'எற்றொன்றும் இல்லா விடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க்(கு) அசைவிடத்(து)—ஊற்றுவார்
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்'

என்பது நாலடிப் பாடலாகும்.

செல்வன் ஒருவன் பெருமாளிகை யொன்றை அமைத்தான். அவன் மறைந்தொழியவே அம் மாளிகை பேணுவாரற்றுச் செய்கை அழிந்து சிதல் மண்டிச் சிதைவுற்றது. என்றாலும் மழைக்கு ஒதுங்குமாறு ஓரிடம் இல்லாது போவதில்லை. அதுபோலவே உயர்குடிப் பிறந்தார் எத்துணை வறுமையுற்றாலும் செயத் தக்கவற்றை எவ்விதத்திலும் செய்வர். கலைநிறைந்த முழுமதியை ஒரு பக்கம் பாம்பு பற்றினாலும் மற்றொரு பக்கத்தால் மாநிலத்திற்குத் தண்ணிலவைப் பொழியா நிற்கும். அஃதேபோல் குடிப்பிறந்தார்க்கு வறுமை பெரிதும் வாட்டினாலும் ஒப்புரவு செய்தற்கு என்றும் உள்ளம் தளரார்.

'செல்லாமை செவ்வன்நேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார்'

என்பது சமணமுனிவர் அருளிய வாக்காகும்.

குடிப்பெருமை குன்ருது வாழ்வோம் என்ற உறுதியுடைய பெருமக்கள் வறுமையுற்ற வழியும் நெஞ்சில் சிறிதும் வஞ்சகம் எண்ணுர். தம் மரபிற்குப் பொருந்தாத மாணிலாச் செயல்களைக் கருதவும் செய்யார். ஒருகால் தமது உறுதியில் தளர்ந்து சிறு செயல் புரிவராயின் அது பெருங்குற்றமாகப் பிறரால் இகழ்ந்து பேசப்படும். வானத்தில் ஒளிரும் மதியிடத்துள்ள மறு, மிகச் சிறியதாயினும் அஃது எல்லோரும் காண விளங்குதல்போலக் குடிப்பிறந்தார் செய்த சிறு குற்றம் பெருங்குற்றமாக விளங்கித் தோன்றும்.

'குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும். இக் கருத்தை மற்ருெரு வகையால் விளக்கினுர் சமணமுனிவர் ஒருவர். வானத்தில் உலவியவண்ணம் நிலவைப் பொழியும் திங்களும் வையத்தில் இலகியவண்ணம் அறிவைப் பொழியும் சான்ருேரும் ஒப்பாவர். திங்களிடத்தே என்றும் மாருத களங்கம் காணப்படும். ஆனுல், குடிப்பிறந்த சான்ருேர்பால் களங்கத்தைக் காண்டலரிது. அவரைச் சிறு மாசு வந்து சேரினும் தெருமந்து தேய்வர் என்று மொழிந்தார் அம்முனிவர்.

முன்றுறையரையனுர் இதே கருத்தை விளக்குந் திறம் மிகவும் நன்ருயிருக்கிறது. இழிந்த குலத்தில் பிறந்த கயவர்கள் எத்தனை பழிபாவங்களைச் செய்தாலும் ஒன்றேனும் பிறரால் உணரப்படுவதில்லை. குடிப்பிறந்தார் சிறியதொரு குற்றத்தைப் புரிந்தாலும் மலைமேலிட்ட விளக்கைப்போல் அது மங்காது விளங்கித் தோன்றும் என்று விரித்துரைத்தார்.

'நன்றி முதிர்ந்த கழியப்பன் னுன்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்ருனும்—தோன்ருதாம்
ஒன்ருய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மே லிட்ட விளக்கு'

என்பது பழமொழிப் பாடலாகும்.

வழி வழியாக வரும் குலநலமுடையார் உள்ளம், இயல்பாகவே அருள் வெள்ளம் பெருகும் உயர்வுடையதாகும். அத்தகையாரிடம் அருளின்மை காணப்படுமாயின் அவருடைய குலப்பிறப்பில் பிறர் ஐயுறுவர். அவர்கள் குற்றமுடைய சொற்களை ஒருபோதும் கூருர். இன்சொற்களையே எஞ்ஞான்றும் பேசுவர். கரும்பினைப் பற்களால் கடித்துச் சுவைத்தாலும் கணுக்கள் சிதையுறுமாறு இடித்துச் சாற்றை எடுத்தாலும் அக் கரும்பு இனிப்பதன்றிக் கசப்பதில்லையன்றே! அஃதேபோல் குடிப்பிறந்த நல்லாரைப் பொல்லார் பழித்துப் பொல்லாங்கு சொல்லினும் அவர்கள் தம் வாயால் தீயசொற்களைப் பேசார்.

'கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயில் சிதைந்து'

என்பது நாலடிப் பாடலாகும்.

ஒருவன் பேசும் சொற்களைக் கருவியாகக் கொண்டு அவனது குடிப்பிறப்பின் பெருமை சிறுமைகளை அளந்து விடலாம். நிலம், பண்பட்ட நலமும் வளமும் உடையதாயின் அதன்கண் இட்ட வித்து நன்கு முளைத்துக் கிளைக்கும். வளமற்ற பாலை நிலமாக இருந்தால் அதன் கண் இட்ட வித்துச் செத்தொழியுமன்றே! நிலத்தில்

தோன்றிய முளை நலத்தால் நிலப்பெருமை புலப்படுவ தாயிற்று. அஃதேபோல் ஒருவன் வாயிற் பிறந்த சொல் லால் அவனது குலநலம் புலனாகும் என்றார் பொய்யில் புலவர்.

> 'நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
> குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்'

என்பது அவர் வாய்மொழியாகும். இப் பாடற்கு எளிதில் புலனாகும் மற்றோர் உரையும் எண்ணத்தகும். செம்மண் நிலத்திலோ, கரிசல் புலத்திலோ நடந்தான் ஒருவன் காலைப் பார்த்த வளவில் அவன் மிதித்துவந்த மண்ணின் நிறத்தை மதித்தறியலாகும். அதுபோல ஒருவனது வாய்ச்சொல்லால் அவனது குடிப்பிறப்பை அறிய முடியும் என்பது எளிதில் கொள்ளும் பொருளாகும்.

குடிப்பிறந்தார்க்கு அமையவேண்டிய பண்புகளுள் பணிவும் ஒன்றாகும். பணிவும் இன்சொல்லும், மக்கட்கு அணியென்று கூறுவர் அறிஞர். எத்தகையார்க்கும் பணிவு ஓர் இனிய பண்பாகும். செல்வர்க்கும் குடிப் பிறந்தார்க்கும் அமையும் பணிவு, அவர்கள் பெற்ற மற்றொரு செல்வமாகவே மதிக்கப்படும். ஆதலின் 'குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக' என்று பகர்ந் தருளினார் வள்ளுவர்.

ஒழிபியலின் தொடக்கத்தில் குடிமையை வகுத் துரைத்த வள்ளுவர், கயவரைப்பற்றிப் பொருட்பாலின் கடைசியில் புகலுந் திறம் கூர்ந்து நோக்கும் தரமுடைய தாகும். அதிகார அமைப்பிலேயே கயவரது இழிவைக் காணுமாறு செய்யும் பொய்யில் புலவரின் புலமைத் திறம் நம்மால் அளந்து சொல்லும் தரமுடையதன்று. உயர் குடிப் பிறந்தார்க்கு உரியவான நற்குணங்களுள் ஒன்

றேனும் இலராகிய கீழோரது தன்மையே கயமை எனப்படும்.

கயவரது இயல்பை விளக்க வந்த வள்ளுவர் மிகவும் வேடிக்கையாகவே பேசுகிறார். கயவர் வடிவத்தால் முழுதும் மக்களைப் போல்வர். அவர்கள் பிற மக்களை ஒத்திருப்பது போன்ற ஒப்புமையை வேறு இரண்டு சாதிக்கண் காணவே முடியாது. அங்ஙனம் கயவரும் மேலோரும் வடிவால் மிகவும் ஒப்புமையுடையராவர். இம்மை மறுமை வீடுகட்கு உரியவாய உறுதிப் பொருள்களை உணர்ந்து அவற்றை அடைய விழையும் மேலோர் அவற்றிற்குரிய அறநெறிகளை முயன்று ஆற்றுவர். அவற்றைச் செய்துகொண்டே மிகுதியாகச் செய்ய முடியவில்லையே என்று சிந்தை நோவர். அவற்றிற்கு ஏதேனும் இடையூறு நேருமோ என்றும் பழிபாவம் விளையுமோ என்றும் உளம் வருந்துவர். கயவர்க்கோ அத்தகைய கவலையேதும் இல்லை. அவர்கள் பழிபாவங்களை எத்துணை மிகுதியாகச் செய்தாலும் எட்டுணையும் கவலை கொள்ளார். ஆதலின் உறுதிப் பொருள்களைப் பற்றி அறியாத கயவர்கள் எப்பொழுதும் களிப்புடன் இருப்பர். மேலும் இக் கயவர், தேவர்க்கு ஒப்பாவர். தேவர் தாம் பெற்ற தலைமையால் ஏவுவார் இல்லாத பெருமையுடையவர். ஆதலின் தாம் விரும்பும் நல்லனவற்றைத் தக்காங்கு செய்து மகிழ்வர். கயவரோ பிறர் சொல் கேளாத பேதையர். தாமும் தக்கன அறியாத தாழ்வினர். ஆதலின் 'இதனைச் செய்க' என்று அவரை ஏவுவாரும் எவருமிலர். ஆகவே 'தேவரனையர் கயவர்' என்பது பொருந்துமன்றோ!

இங்ஙனம் கயவர், மக்களையும் தேவரையும் ஒப்பர் என்றும், உறுதிப் பொருளை உணர்ந்து செய்யும் சான்

ருரினும் மேலானவர் என்றும் புகழ்வதுபோல் இகழ்ந் துரைத்தார் பொய்யில் புலவர். பின்னர்க் கூறும் காரணத்தால் அன்னவரின் இழிதகவை ஆய்ந்துணரு மாறு செய்தார்.

'மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்',

'நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்',

'தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்'

என்ற மூன்று பாக்களாலும் கயவரது குற்றமிகுதியைக் கட்டுரைத்தார் திருவள்ளுவர். இவற்றில் வஞ்சப் புகழ்ச்சி என்னும் அணி அமையுமாறு செஞ்சொற்களை அமைத்த திறம் சிந்தைக்கினிப்பதாகும்.

அடக்குவாரின்றி ஊரில் திரியும் மாட்டைப் பட்டி மாடு என்று பழித்துரைப்பர். அங்ஙனமே அடக்க மின்றித் திரியும் கயவரும் பட்டிமாக்கள் ஆவர். அவர்கள் தாம் விரும்பியவாறே பிறர்க்குத் துன்பம் விளைத்துத் திரிவர். அத்தகைய கீழோர், தம்மினும் குறைவாகப் பிறர்க்குத் தீங்கு விளைக்கும் பெற்றியரைக் காணின் அவரின் மேம்பட்ட தம் தகுதியை எண்ணி இறுமாப்பர். இவர்களிடத்து நல்லொழுக்கத்தை எள்ளளவும் காண வியலாது. ஒருகால் இவர்கள் ஒழுக்கமுடையாரைப்போல் காணப்படுவராயின் அரசு ஒறுக்கும் என்ற அச்சம் அதற் கொரு காரணமாகலாம். அன்றி, அவர்கள் விரும்பும் பொருள் அங்ஙனம் நடிப்பதால் கிடைப்பதாயிருக்கலாம். இவை காரணமாக அன்றிக் கயவர்பால் ஒழுக்கத்தைக் காணலரிது என்பார் திருவள்ளுவர். 'பூரியோர்க்கு

இல்லை சீரிய ஒழுக்கம்' என்பது தமிழ் மூதாட்டியாரின் அமுத மொழியாகும்.

ஒருவன் மனத்தில் கொண்ட மறையை எல்லோர்க்கும் சொல்லுதல் தகாது. குடிப்பிறந்த சான்றோர்பால் கூறினால் அவர்கள் தம் உள்ளத்தே கொண்டிருப்பரன்றி மற்றவர்க்கு எந்நாளும் மறந்தும் உரையார். அறிவிலாக் கயவர்பால் மறையினைக் கூறின் அதனை எல்லோர்க்கும் பறையறைந்ததுபோலச் சென்று பகர்ந்து விடுவர். அவர்கள்பால் சொல்லிய மறை, பிறரிடம் பரவும் விதத்திற்குப் பழமொழி ஆசிரியர் கூறும் உவமை அழகுடையதாகும்.

'பெருமலை நாட! பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர்—அருமறையை
நெஞ்சிற் சிறியார்க்கு உரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று'

பெருங்காற்று வீசும் பொழுதில் பனை மேலிருந்து பஞ்சுத் துய்யினைப் பறக்கவிட்டால் சிறுபொழுதில் எங்கும் பறந்து பரவிவிடுமன்றோ! அஃதேபோல் கயவர்பால் உரைத்த மறை கணப்பொழுதில் ஊரெங்கும் பரவிவிடும் என்றார் முன்றுறையரையனார். ஆதலின் 'சான்றோர், கயவர்க்கு உரையார் மறை' யென்றும் கட்டுரைத்தனர்.

மறை காவாக் கயவர் இயல்பை அறை பறைக்கு ஒப்பிட்டார் வள்ளுவர். அரசன் ஆணையை ஊரினர்க்கு அறிவிக்கும் ஒருவன் பறையினைக் கையில் தாங்கி ஒலியெழுமாறு கொட்டியவண்ணம் பல இடங்களிலும் சென்று நின்று மக்களைத் திரட்டுவான். மக்கள் கூடியதும் செய்தியை எல்லோரும் தெரியச் சொல்லுவான். அதைப் போன்றே கயவர்கள் தாம் கேட்ட மறையினை

வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவுங் கொண்டு மற்றவர் பால் விரைந்து சென்று உரைத்துப் பரப்புவர். இன்றேல் அவர்க்கு அது பெரும்பாரமாக இருக்கும்.

'எச்சிற் கையால் காக்கையையும் ஓட்டான்' என்பது நம் நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. உண்டு கழுவப் பெறாத கையில் சிறு சோற்றுப் பருக்கைகள் ஒட்டி யிருக்கலாம். அக் கையைச் சிதறினால் ஒட்டிய பருக்கைகள் தரையில் சிந்திவிடும். அவற்றைக் காக்கைகள் உண்டுவிடுமே என்றெண்ணிக் கயவர் எச்சில் கையைச் சிதறமாட்டார் என்பர். இதற்கு மேலும் கயவர் வன்னெஞ்சமுடையவர் என்பதை வள்ளுவர் விளக்குந்திறம் வியப்பை விளைப்பதாகும். கயவர் உண்டு கழுவிய ஈர்ங்கையையும் தரையில் சிதறார். எவரேனும் அவ் ஈர்ங்கையைத் தெறிக்க வேண்டுமென்று இரந்தாலும் தெறிக்கமாட்டார். ஆனால், கையை முறுக்கி ஓங்கிப் பற்கள் சிதறுமாறு கன்னத்தில் அறையும் பொல்லார்க்கு எல்லாம் கொடுத்துப் போவர் என்று சொல்லுவார் வள்ளுவர்.

'ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு'

என்பது அவர் சொல்லமுதமாகும். ஈரக்கையை உதறினால் ஒட்டிய நீர் மற்றவர்க்கு உதவிவிடுமோ என்ற எண்ணத்தால் உதறார் போலும். அஃதன்றிக் கையி னின்று சிதறிய நீரால் தரையில் முளைத்த புல் தழைத்து விடுமோ என்றும் சிதறமாட்டார்கள். இங்ஙனம் கயவரது ஈரமற்ற வன்னெஞ்சத்தை வள்ளுவரைப்போல் விளக் கினர் யாவர்?

'பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையிலே
போடுவார்க் கீவர் பொருள்'

என்றார் ஒரு புலவர்.

கயவர், தம்மைப் பெற்றோரையும் பேணார். தாம் பெற்ற பிள்ளைகளையும் விரும்பார். தமது உற்ற நண்பர்க்கும் உதவமாட்டார். உற்றார், உகந்தார்பால் பற்றுக்கொள்ளார். அவரை வாயார வாழ்த்தி வணங்கினாலும் சிறு பொருளும் பிறர்க்கு உதவார். குருதியொழுகப் புடைப்பார்க்கு எல்லாம் கொடுப்பர் என்றார் தமிழ் மூதாட்டியார்.

'பெற்றார் பிறந்தார் பெருநட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார்—மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தான்'

என்பது அவர் காட்டும் நல்வழியாகும். கரும்பினை ஆலையிலிட்டு நையுமாறு நெருக்கினால் தனது இனிய சாற்றைத் தரும். அதைப்போன்றே கயவர்களை வருத்தி நெருக்கினால் பொருளைப் பிறர்க்கீவர்.

மற்றவர்பால் குற்றம் காண்பதே கயவர் இயல்பாகும். சிறிதும் குற்றமில்லாத பெருமக்களிடத்தும் குற்றத்தைக் கற்பித்து உரைக்கும் அற்பர்கள் கயவர். 'சிறுமைதான் குற்றமே கூறிவிடும்' என்று அறுதியிட்டு உரைப்பார் திருவள்ளுவர். செழித்த பொழிலிடத்தே கனிதரும் மரங்கள் பல இருந்தாலும் காக்கை வேப்பங் கனியினையே விரும்பும். அதைப்போன்றே ஒருவரிடம் பற்பல நற்குணங்கள் இருப்பினும் அவற்றைக் காணாது, குற்றத்தையே காணுவர் கயவர். ஒளி பொருந்திய விழிகளை இருளைக் கண்டு அஞ்சும் இயல்புடையன. குருட்டுக்

கண் இருட்டிற்கு அஞ்சுவதில்லையன்றோ! அதுபோலவே கல்வி யறிவில்லாக் கயவரும் பழிக்கு அஞ்சாத பாவிக ளாவர். அவர்கள், பிறர் தாம் பெற்ற செல்வத்தால் பட்டும் துகிலும் கட்டுவதைக் காணப் பொறார். பாலோடு சோறுண்டலைப் பார்க்கவும் சகியார். பொன்னும் மணியும் பூண்டிருத்தலைக் காணவும் பொறார். சிறந்த ஊர்தி களில் ஏறிச் செல்வதைக் காணவும் சீறுவர். இவையெல் லாம் இவர்க்குக் களவால் வந்த பொருள்களோ? தீய வழிகளால் ஈட்டிய செல்வமோ? என்று பலவாறு எண்ணி, நல்லோரைப் பழித்துரைப்பர்.

'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

இத்தகைய தீமையே உருவெடுத்த கயவரால் உலகிற்கு ஒரு பயனும் இல்லை என்பதைச் சொல்ல வந்த வள்ளுவர், 'எற்றிற்கு உரியர் கயவர்?' என்று வினவினார். கயவர்க்கு ஏதேனும் துன்பம் ஏற்படுமாயின் அதனைத் துடைக்கும் வகையறியார். அதுவே பற்றுக் கோடாக விரைந்து, தம்மைப் பிறர்க்கு விற்றுக் கொள்வர். அச்சிறு துன்பமே காரணமாக மீள முடியாது பேரழிவு எய்துவர். எதனையும் பொறுக்கும் ஆற்றல் அவர்க்கு இலதாகும். ஆதலின் இத்தகைய 'இடும்பரை ஏன் வகுத்தாய் இறைவா!' என்று இரங்கிப் பாடுவார் பட்டினத்தார்.

## எ. கள்ளும் கவறும்

கள்ளுண்ணல், கவறாடல், பிறர்க்குரிய மகளிரை விரும்புதல், பொய்ம்மொழிதல், கொலை புரிதல் ஆகிய ஐந்து செயல்களையும் அறிவுடையோர் ஐம்பெரும் பாதகங்கள் என்று பழித்துரைப்பர். இவற்றைத் திருவள்ளுவர் தமது நூலில் தனித்தனியே எடுத்து விளக்கிக் கடியுமாறு அறிவுறுத்துகின்றார். தாசியர் நேசம் பொல்லாது என்பதை வரைவின் மகளிர் என்ற பகுதியில் வகுத்துரைத்த வள்ளுவர் அதன் இறுதியில் திருமகளால் துறக்கப்பட்டார்க்குத் தொடர்புடையன மூன்றைக் குறிப் பிட்டார்.

'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு'

என்பது அவர் சொல்லமுதமாகும். கணிகையரும் கள்ளும் சூதும் ஆகிய மூன்றும் இலக்குமியால் வெறுக்கப் பட்ட கயவர்க்கு நட்புடையன என்றார்.

'வெண்பாவிற் புகழேந்தி'யென வியந்து போற்றும் சிறப்புற்ற செந்தமிழ்ப்புலவர், தமது நளவெண்பா என்னும் நன்னூலில் சூதாடப் புகும் நளனுக்கு நல்லமைச்சர் சொல்லும் அறிவுரையாகப் பாடலொன்றை அமைக்கின்றார்.

'காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா! செம்மை
நினையாமை பூண்டார் நெறி'

பிறர் மனை நோக்குதல், சூதாடல், கள்ளுண்ணல், பொய் பேசுதல், உலோபம் செய்தல் இவை போன்ற

செயல்கள் எல்லாம், அறத்தைச் சிறிதும் கருத்தில் கொள்ளாத கொடியவர் மேற்கொள்வனவன்றோ! இத்தகைய சூதினை ஆடப்புகுதல் தகுமா? என்று நளனை அமைச்சனொருவன் இடித்துரைத்ததாக எடுத்துரைத்தார் புகழேந்தியார்.

இம்மையில் அறம் புரியும் மனம் இல்லாத பொல்லார் கைப்பொருளைப் போக்குதற்கென்றே பிரமன் கள்ளும் சூதும் கணிகையும் படைத்து வைத்தான் என்றார் ஒரு புலவர்.

'இம்மையே தவஞ்செ யார்கை இருநிதி அகற்றல் வேண்டி
நம்மையும் கள்ளும் சூதும் நான்முகன் படைத்து விட்டான்'

என்பது அவரது கவிதை அடிகளாகும். தீயார் கைப்பட்ட திரு அகல்வதற்குக் காரணமான பலவற்றுள் கள்ளையும் சூதினையும் பற்றி இப் பகுதியில் கவனிப்போம்.

பொதுமகளிர் நட்பால், ஒருவனது ஒழுக்கமும் உணர்வும் கெட்டொழியும். அஃதேபோல் கள்ளுண்ணும் தீச்செயலும் ஒருவனது ஒழுக்கத்தைக் கெடுத்து அறிவை அழித்துவிடும். சூதாட்டமும் அத்தகைய தீமையை விளைப்பதே. ஆதலின் இம் மூன்றையும் அடுத்தடுத்தே வள்ளுவர் சொல்லியுள்ளார்.

கள்ளினை ஒருகால் உண்டு சுவை கண்டவன் அதனை என்றும் விடான். ஆதலின் கள்ளுண்பாரைக் 'கள் காதல் கொண்டொழுகுவார்' என்றே குறிப்பார் வள்ளுவர். கள்ளுண்டு களிப்பார் தாம் முன்பு எய்தியிருந்த புகழை இழப்பர். அவர்க்குப் பகைவர்கள் சிறிதும் அஞ்சார். எதைப் புரியினும் கண்டும் கேட்டும் களிப்படையும் தாய், கள்ளுண்ணும் மகனைக் கண்டால் வெறுத்துப் பழித்து ஒதுக்குவாள். அறிவுடைச்

சான்றோர், கள்ளுண்பார் முகத்தைக் காணவும் ஒருப் படார். அவர்கள்பால் பழிபாவங்கட்கு நாணும் நல் லியல்பே இல்லாது அகலும். கள், அறிவிழந்து மெய்ம் மறக்குமாறு செய்யும் தீமையுடையதன்றோ! அதனை அறிவுடையார் விலைகொடுத்துப் பெறுவாரோ? ஆதலின் கள்ளுண்பார் எல்லாரும் பழவினை காரணமாக நிறைந்த அறியாமையுடையோரே; அவர்கள் உண்பது கள்ளாயி னும் நஞ்சுண்டவர்க்கு ஒப்பாவர்.

உறக்கத்தில் ஆழ்ந்தோர்க்கும் உயிரை இழந்தோர்க் கும் அறிவு இல்லை. அவ் அறிவின்மையொன்றே காரண மாகத் 'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்' என்று கூறுவார் வள்ளுவர். அவ்வாறே நஞ்சுண்பார்க்கும் கள்ளுண்பார்க்கும் எக்காலத்தும் அறிவின்மையால் இரு வரும் ஒரு நிலையினரே என்று உரைத்தருளினார். கள்ளைப் பிறர் அறியாமல் மறைந்திருந்து உண்டாலும் களிப்பால் விளையும் மயக்கினை மறைக்க முடியாதன்றோ! ஆதலின் அம் மயக்கத்தால் உண்மையுணர்ந்த ஊர்மக்கள் எக்கா லும் இகழ்ந்து பரிகசிப்பர்.

பிறர் அறியாமல் மறைந்திருந்து கள்ளுண்ட கய வர்கள், கள்ளுண்ணாத போழ்தில் மற்றவர்பால் 'யாம் என்றும் கள்ளுண்டறியோம்' என்று தமது ஒழுக்கத்தை வியந்துரைப்பார். அன்னவர் கள்ளுண்ணலை ஒருகால் பிறர் அறிந்தால் அவர்கள் முன் ஒளித்த குற்றமும் முன்னை அளவினும் மிக்கு வெளிப்படும். கள்ளுண்பார்க்கு இஃது ஆகாதென்று பிறர் எவ்வளவு அறிவுரைகளைக் காரணம் காட்டிக் கூறினாலும் அவர்கள் காதிலோ கருத் திலோ அச் சொற்கள் ஏறமாட்டா. அவர்கட்கு அறிவுரை கூறித் தெளிவிக்கப் புகுதல் நீருள் மூழ்கிய ஒருவனை மற்

ஒருவன் கையில் விளக்கேந்திப் புகுந்து தேடியதற்கு ஒப்பாகும் என்பர் திருவள்ளுவர். நீருள்ளே நெருப்பால் எரியும் விளக்கை அவியாது கொண்டு செல்லுதல் இயலா தன்றே! அதுபோலவே கள்ளுண்பார் உள்ளத்தில் அறிவுடையார் கூறும் காரணங்கள் செல்லாவாகும்.

'களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

நல்லறிஞர் சொல்லும் அறிவுரையைச் சிறிதும் கொள்ளாத களிமகனையினும் அவனும் திருந்த வேண்டு மெனத் திருவள்ளுவர் கருதுகிறார். அவனுக்குப் பெரிதும் இரங்கிப் பேசும் அப் பெருநாவலரின் திருவுள்ளத்தை என்னென்பது!

'கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு'

என்பது அவர் சொல்லமுதம் அன்றோ! கள்ளுண்ணும் களிமகன் அதனை உண்ணாது தெளிந்திருக்கும் வேளையில் கள்ளுண்டு அறிவிழந்து சோர்ந்துகிடக்கும் ஒருவனது அவலநிலையைக் காணும்பொழுதேனும், யானும் கள்ளுண் டால் இவ் இழிநிலையைத்தானே அடைவேன் என்று எண்ணமாட்டானோ? அதனைப் பலகால் எண்ணி உணர்ந்த காலத்திலேனும் உள்ளம் மாறானோ? என் றெல்லாம் இரங்குகிறார் வள்ளுவர்.

கள்ளுண்டலால் விளையும் கேடுகளையெல்லாம் தொகுத்து ஒரு பாட்டில் உரைத்துவிட்டார் விநாயக புராணத்தார்.

'அறிவை அழிக்கும் செயலழிக்கும்
அழியா மானம் தனையழிக்கும்
செறியும் அறிஞர் மதியாத
செருக்கை விளைக்கும் ஈன்றாளும்
முறியும் வெறுப்பு மிகவிளைக்கும்
முனிவு விளைக்கும் பகையஞ்சாக்
குறிகள் விளைக்கும் நகைவிளைக்கும்
கொள்ளேல் கள்ளுண் டலைமைந்தா!'

கள், தன்னை உட்கொள்வானது அறிவை அழித்து விடும். அவன் செய்யும் செயல்களையெல்லாம் சீரழித்து விடும். அவனது மானத்தைக் கெடுத்துவிடும். செருக்குற்று அலையுமாறு செய்யும். அவனைப் பெற்ற அன்னையும் வெறுத்து விரட்டுவாள். அவனது உள்ளத்தில் கோபம் கொந்தளிக்கும். அவனுக்குப் பகைவர் சிறிதும் அஞ்சார். எல்லோரும் அவனை இகழ்ந்துரைப்பர்.

இத்தகைய பல தீமைகளுக்கு உள்ளாக்கும் கள்ளால், உண்டவர்க்கேயன்றித் தொடர்புடைய பலர்க்கும் நரகம் கிடைக்கும் என்று நவின்றார் மற்றொரு புலவர். கள்ளை விலைக்கு விற்பவர், கள்ளருந்த இசைந்தவர், கள்ளுண்டாரைக் கண்டு மகிழ்ந்தவர் ஆகிய பிறரும் மீளாத நரகினில் வீழ்வர் என்று அறிவுறுத்தினர்.

நீதியை ஓதவந்த வேதநாயகர் தெருவில் நடந்த நிகழ்ச்சியொன்றைச் சிறந்த பாடலாகப் புனைந்து தந்தார். வழிநடுவே பிணமொன்று கிடந்தது. அதனை நாயும் பறவையும் சூழ்ந்து வட்டமிட்டன. அதைக்கண்ட சிலர், இப் பிணத்திற்கு உரியவர் எவரும் இலர்போலும் என்று எண்ணிச் சுடுகாடு தூக்கிச் சென்றனர். கட்டைகளை அடுக்கி, அவற்றின்மேல் அப் பிணத்தைக் கிடத்தி

நெருப்பை வைத்தனர். அப்பொழுதே அந்தப் பிணம் உயிர்பெற்று எழுந்தது. இது கள்ளுண்ட மயக்கம் என்று சொல்லி அங்கு நின்றும் ஓடியது. பக்கத்திலிருந்த கள்ளுக்கடையின் உள்ளே புகுந்தது. இங்ஙனம் கள்ளுண்டவன் அடையும் அவல நிலையையும் அவன் அக் கள்ளின்மேல் கொண்டுள்ள காதல் பெருக்கையும் அழகுற விளக்கினார் வேதநாயகம் பிள்ளை.

ஐம்பெருங் காவியங்களில் ஒன்றாகிய மணிமேகலையில் ஆதிரை என்னும் நல்லாளைப் பற்றிச் சொல்லுகிறார், ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார். ஆதிரை தன் கணவனை தெய்வமெனக் கருதி வாழ்ந்த காரிகை. அவள் திருவாதிரை நாளில் பிறந்தமையால் அப்பெயரைப் பெற்றாள் போலும்! அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலை, ஆதிரை நல்லாளின் அணிமனை முற்றத்தை அடைந்து புனையா ஓவியம் போல நின்றாள். அவளைக் கண்ட ஆதிரை உணவை உள்ளன்புடன் கொண்டுவந்து வலமாகச் சுற்றி வணங்கிப் 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறு'கென வாழ்த்திப் பாத்திரம் நிறையப் பிச்சையிட்டாள்.

இத்தகைய கற்பரசியின் கணவனாய சாதுவன் வாணிகத்தின் பொருட்டுக் கப்பலேறி வங்க நாட்டுக்குப் புறப்பட்டான். கப்பல் கடல் நடுவே சென்றுகொண்டிருக்கும்போது கடுஞ் சுழல்காற்று எழுந்தது. கப்பல் சின்ன பின்னமாகச் சிதறுண்டு கடலுள் தாழ்ந்தது. கப்பலினின்று தப்பிய சாதுவன், சிதைந்து மிதந்த கட்டையொன்றைப் பற்றிக்கொண்டு பலநாள் அலைகளால் அலைப்புண்டு நாகர் மலையை வந்தடைந்தான். அங்கு வாழ்ந்த நாகர் என்னும் வகுப்பார் சாதுவனைத் தம் தலைவன்பால் அழைத்துக் கொண்டுசென்று நிறுத்தினர். பசியா

லும் குளிராலும் நலிந்து மெலிந்த சாதுவனை அந்நாகர் தலைவன், ''நீ யார்? இங்கு வந்த காரணம் என்ன?'' என்று நாகர் மொழியிலே வினவினான். அவரது மொழியினைச் சாதுவனும் அறிந்திருந்தமையால் கடல் நடுவே தான் அடைந்த துயரத்தை நாகர் தலைவனுக்கு எடுத்துரைத்தான். அவனது செய்தியைக் கேட்ட நாகர் தலைவன் உள்ளம் இரங்கினான். ''நலிந்து வருந்திய நம்பிக்கு நாட்பட்ட கள்ளும் நறுஞ்சுவை ஊனும் கொடுத்து அருந்துமாறு செய்க'' என்று நாகரைப் பணித்தான்.

நாகர் தலைவனது வாசகம் கேட்ட சாதுவன் திடுக்கிட்டு இரு கையாலும் காதுகளைப் பொத்திக்கொண்டான். 'ஐயனே! எனக்குக் கள்ளும் ஊனும் வேண்டா' என்று உறுதியாக உரைத்தான். இவ்வுரையைக் கேட்ட நாகர் தலைவன் பெரிதும் வியப்புக் கொண்டான். 'ஈதென்ன வியப்பு! கள்ளும் ஊனும் கவலையை ஒழித்துக் களிப்பைத் தருவனவன்றோ! அவற்றை விலக்கலாகுமோ?' என்று சினத்தொடு வினவினான். அதுகேட்ட சாதுவன் கள்ளுண்பதால் விளையும் தீமையைச் சொல்லலுற்றான்.

'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்'

என்று அறவுரை பகர்ந்தான்.

மக்கள் பெற்றுள்ள செல்வங்களுள் மிக்கது அறிவுச் செல்வமே. அதனாலேயே நன்மை தீமைகளைத் பகுத்துணர்ந்து நல்வாழ்வு வாழ்கின்றோம். இத்தகைய அறிவை வளர்ப்பவரே மேலோராவர். அதனைக் கெடுப்

பவர் கீழோராவர். கள்ளுண்ணல் அறிவை மயக்கிக் கெடுத்து விடுகின்றது. அவ்வறிவை இழந்துவிட்டால், வாழ்வு பாழும் நரகமாக மாறிவிடும். இந்த உண்மையை உணர்ந்த சான்றோர் கள்ளைக் கடிந்து ஒழித்தனர் இங்ஙனம் எடுத்தியம்பிய சாதுவன் பாதங்களை நாகர் தலைவன் பணிந்து வணங்கினான்.

கள்ளுண்டலால் கணக்கிலாத் தீமைகள் விளைவன போன்றே சூதாட்டத்தினாலும் சொல்லவொண்ணாத தொல்லைகள் சூழ்வனவாகும். நிடத நாட்டை ஆண்ட நளன், புட்கரனுடன் ஆடிய சூதாட்டத்தில் நாடும் செல்வமும் இழந்து வருந்தினான். மனைவியையும் மக்களையும் அழைத்துக்கொண்டு வனம் புகுந்தான். காட்டிலும் அவர்களைக் காக்க முடியாமல் தனியே அவர்களைவிட்டுப் பிரிந்தான். வடிவை மறைத்து வாகுகன் என்ற பெயருடன் அயோத்திமன்னன் அரண்மனையில் மடைத்தொழில் புரிந்தான். பாண்டவரும் கௌரவரும் சூதாடிய வரலாற்றைப் பாரதம் பரக்கக் கூறும். பாண்டவர் சூதாட்டத்தால் தமது தாயபாகமாகிய நாட்டையும் அரசையும் இழந்து காட்டகம் புகுந்தனர். கௌரவர் சூதாடிக் கவர்ந்த அரசையும் போரில் இழந்து மாண்டொழிந்தனர். நாடாளும் மன்னர்க்கும் சூதால் இத்தகைய இன்னல்கள் விளையுமெனின் மற்றையோர்க்கு என்னாகும்!

சூதாடு கருவிக்குக் கவறு என்பது ஒரு பெயர். அது கொண்டு ஆடப்பெறும் விளையாட்டும் கவறு எனப்படும். அக் கவற்றால் விளையும் பெருங்கேட்டை விளக்க வந்த வள்ளுவர், 'சூதினை வேண்டற்க' என்று மிகவும் பரிவுடன் அறிவுரை கூறினார். ஒருவனுக்குச் சூதாட்டத்தில் வெல்லும் வல்லமை நிரம்பவுள்ளது ; மேன்மேலும் வெற்றியும் விளைந்து கொண்டிருக்கிறது; அத்தகையானும் சூதாடுதல்

தகாதோ எனின் 'வென்றிடினும் சூதினை வேண்டற்க' என்று பேரன்புடன் கூறினர். அங்ஙனம் தாம் கூறுதற்குரிய காரணத்தையும் அக் குறட்பாவிலேயே குறிப்பிடும் சிறப்பை என்னென்பது! மீன் பிடிப்பவன் தூண்டிலின் நுனியிலுள்ள இரும்பினை இரைப்பொருளால் மறைத்து நீருள் மிதக்க விடுகிருன்; இரையால் மறைந்த இரும்பினை இரையென்றே கருதி மீன் விழுங்குகின்றது. அதில் சிக்குண்டு உயிர் இழக்கின்றது. அதைப் போலவே சூதாட்டத்தில் வென்று வந்த பொருளும் இழந்து சூதாடியவனும் கெட்டொழிவான். சூதில் வென்று கொண்ட பொருள், மேலும் சூதாட்டத்தில் விருப்பினை உண்டு பண்ணி, அதனின்று நீங்காதிருப்பதற்கு இட்டதொரு தனையாகும். அதனுல் எல்லாப் பொருளும் இழத்தற்கு ஏதுவாதும்.

சூதாட்டத்தில் ஒருகால் வென்றவர் இன்னும் வென்று பெரும்பொருள் பெறுவோம் என்னும் கருத்தால் மிக்க பொருளைப் பணையமாக வைத்தாடுவர்; அத்தனையும் இழந்து அல்லலுறுவர். இத்தகையார்க்கு 'அறனும் இன்பமும் அடைந்து வாழும் நல்வாழ்வு உண்டோ?'' என்று கேட்பார் திருவள்ளுவர். சூதாடுவார்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவும் வந்து வருத்தும். அதைப்போல வறுமையைக் கொடுக்கும் செயல் வேருென்றில்லை. சூதாடுவார் எப்போதும் சூதின் வெற்றி தோல்விகளைப் பற்றிய நினைவாகவே இருப்பர். அதனுல் ஒருபோதும் வயிருர உண்ணமாட்டார். மற்றைய பொறிகளால் பெறும் இன்பத்தையும் எண்ணமாட்டார். பொய்யும் களவுமாகிய பாவங்களையே ஈட்டுவராதலின் மறுமையில் நரகத்தையுறுவர். தொன்றுதொட்டு வந்த அவரது நற்குணங்கள் தோன்ருதொழியும்.

ஒருவன் சூதினை இன்பப் பொழுது போக்கிற்காகக் கொள்ளும் விநோதத் தொழிலாகவும் விரும்புதல் தகாது. நாளடைவில் காலமெல்லாம் அதுவே வேலையாக அமைந்து எல்லாம் இழத்தற்குக் காரணமாகும். சூதாடத் தொடங்கியவன் புகழும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமாகிய ஐந்தும் இழந்து வருந்துவான். இங்ஙனம் இருமைப் பயன்களையும் இழக்குமாறு செய்யும் சூதினைப் போல் கொடியது வேறில்லை.

புகழேந்தியார் சூதால் விளையும் தீமைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். சூது, ஒருவனது அழகிய உருவைச் சிதைக்கும். பொய் பேசுமாறு செய்யும். வளமான செல்வத்தைக் கெடுக்கும். மானத்தை ஒழிக்கும். நட்பை அழிக்கும். இன்னும் எத்தனையோ கேடுகளை விளைக்கும் என்று கிளந்தார்.

'உருவழிக்கும் உண்மை நலனழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும்—ஒருவர்
ஒருவரோ(டு) அன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து'

என்பது அவரது பாடலாகும்.

ஒருவன் பல நூல்களையும் ஆராய்ந்து கற்றான். சான்றோரால் சிறந்த அறிஞன் எனப் போற்றவும் பெற்றான். இத்தகைய மேன்மை யுற்றவன் ஒருகால் சூதாடினான் என்று பிறரால் பேசப்படுவானாயின் அவனது பெருமையெல்லாம் அப்பொழுதே மறைந்தொழியும் என்றார் முனைப்பாடியார்.

'ஓதலும் ஓதி உணர்தலும் சான்றோரால்
மேதை எனப்படும் மேன்மையும்—சூது

பொருளும் என்னும் சொல்லினுல் புல்லப் படுமேல்
இருளாம் ஒருங்கே இவை'

என்பது அவர் காட்டும் அறநெறியாகும்.

சூதாடுவான் தன் பெற்ருேரும் உற்ற மனைவியும் இறந்து கிடந்தாலும் ஆட்டத்தினின்று எழுந்து செல்லான். இந்த வழியாகத்தானே அப் பிணத்தைத் தூக்கிச் செல்வர்; அப்போது உடன்போய்க் கொள்ளலாம் என்று கூறிக் கருத்தெல்லாம் சூதாட்டத்திலேயே செலுத்துவான். மனைவி இறந்தாளாயின் அவள் கழுத்தணிந்த தாலி, பந்தயப் பொருளுக்கு உதவும் என்று சொல்லி உவகையுடன் ஆடுவான். இங்ஙனம் அவனது இழிநிலையை விளக்கினுர் வேதநாயகர்.

'கவறினை யாடுவோன் காந்தை வீயினும்
சவமதிவ் வழிசெலும் என்று தானெழான்
அவன்புனை தாலிபந் தயத்துக் காமெனா
உவகையுற் றாடுவான் உயர்வுற் ருனரோ'.

## ௮. குற்றமும் சுற்றமும்

'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்பது தமிழ் மூதாட்டியாரின் அமுதமொழி. குற்றம் சிறிதும் இல்லாத மக்கள், குவலயத்தில் எவரும் இலர். 'குறை இல்லாதவன் இறைவன் ஒருவனே' என்பர் ஆன்ருேர். ஆதலின் எத்தகைய நல்லோரும் பிறர் அறியாத சிறு குறையுடையவராகவே இருப்பர். ஒரு சிறு குற்றமும் இல்லாத நல்லோரையே சுற்றமாகக் கொள்ள வேண்டும் என்று

எண்ணுவார்க்கு உலகில் எவருமே உறவினராக அமையார். ஆதலின் பிறரது குற்றத்தை ஆய்வார் அறிவுடையரல்லர். மற்றவர் பால் காணும் குணங்களையே ஆராய வேண்டும். நற்குணங்கள் மிகுதியாக அமைந்த தகுதியுடையாராயின் அவரையே உற்ற உறவினராக ஏற்று ஒழுகுதல் வேண்டும். இத்தகைய பல கருத்துகளைத் தன்னுள் பொதிந்து விளங்கியது புலமைச் செல்வியாரின் பொன்மொழி.

சான்றோர், பிறர்பால் தோன்றும் குணங்களையே தெரிந்து பாராட்டுவர். பிறரது குற்றத்தை மறைத்தே பேசுவர். கீழ்மக்கள் எப்போதும் மற்றவர்பால் உள்ள குற்றங்களையே கூர்ந்து நோக்குவர். அவற்றையே எடுத்துக்கூறி இகழ்ந்துரைப்பர். பிறர்பால் எத்தனை குணங்கள் விளங்கினாலும் அவற்றுள் ஒன்றையேனும் அவர்கள் உணரார்.

'அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான்
குற்றமே கூறி விடும்'

என்பது வள்ளுவர் சொல்லமுதமன்றோ!

புறங்கூறும் புன்மையுடைய கீழ்மக்கள் பிறரிடத்துள்ள குறைகளைக் கூர்ந்து நோக்கியிருப்பர். அங்ஙனம் பிறர் குற்றம் காணும் பெருங்குற்றம் தம்பால் உள்ளதே என்பதை அக் கீழ்மக்கள் சிறிதே அறிவராயின் மன்னுயிர்க்கு இன்னல் உண்டாகுமோ? என்று கேட்பார் திருவள்ளுவர்.

'ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'

என்பது அவர் சொல்லமுதமாகும். மற்றவரால் பெரிதும் மதிக்கப்படவேண்டும் என்று எண்ணும் ஒருவன் பிறர்

குறை காணவோ பேசவோ கூடாது. பிறருடைய சிறந்த குணங்களையே வியந்து பாராட்ட வேண்டும். எத்தகை யார்க்கும் பணிந்த இன்சொற்களையே பகரவேண்டும். அத்தகைய பண்புடையார் உலகில் எளிதில் பெருமை யுறுவர் என்றார் குமரகுருபரர்.

'பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர் பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்'

என்பது அவர் காட்டும் நீதிநெறியாகும்.

மக்கள்பால் காணப்படும் குற்றங்கள் ஆறெனக் கூறுவர் அறிஞர். அவையாவன காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்ற ஆறுமாம். இவற்றை வடநூலார் காமம், கோபம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பர். வரம்பு கடந்த சிற்றின்ப விருப்பே காமம் எனப்படும். ஏதேனுமோர் காரணத்தாலோ அல்லது அறியாமையினாலோ ஒருவன் தமக்குத் தீங்கு செய்தவிடத்து உளதாகும் கோபத்தை அளவின்றிக் கொள்வது வெகுளி எனப்படும். செல்வத்தை அவசியம் செலவிடவேண்டிய செயல்களிலும் செலவு செய்யாமல், அப்பொருளினிடத்து மிகுதியான பற்றுக் கொண்டு இறுகப் பிடிப்பது உலோபம் அல்லது கடும்பற்றுள்ளம் எனப்படும். எப்பொழுதும் தான் தாழா மல் பிறரையே தாழ்த்த வேண்டும் என்று எண்ணும் தவறான கொள்கையே மானம் எனப்படும். இதனை வள்ளுவர் 'மாண்பிறந்த மானம்' என வழங்குவார். மகிழத் தக்கனவல்லவற்றிற்கும் எல்லைகடந்து மகிழ்தல் உவகை எனப்படும். செல்வம், பதவி, பட்டம், அதிகாரம்,

அறிவு முதலிய சிறப்புக்களால் ஏற்படும் பெருஞ்செருக்கே மதம் எனப்படும். இவ் இயல்புகள் எல்லாம் மக்கள்பால் ஓரளவில் அடங்கி நிற்குமாயின் அவற்றைக் குற்றமென எவரும் குறைத்துப் பேசார். எல்லை கடந்து எல்லோரும் அறியும் அளவில் இக் குற்றங்கள் மிகுந்து நிற்குமாயின் பிறர் இகழ்தற்குக் காரணமாகும்.

அறிவுடையார் அறுவகைக் குற்றங்களும் தம்பால் நிகழாத வண்ணம் காத்துக் கொள்வர். இவை குற்றம் என்பதையே அறியாத கீழோர் இக் குற்றங் களையே பெரிதும் செய்வர். பிறர்பால் இக் குற்றங்களைக் காணவும் மகிழ்வர். தம்மினும் குறைவாகக் குற்றம் புரியும் கயவரை இகழ்ந்து பேசித் தாம் இறுமாப்புக் கொள்வர்.

'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' என்பது பொன் முடியாரது நன்மொழியாகும். 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' என்பது இந் நாட்டுப் பழமொழி. ஆதலின் அரசனே மக்களுடைய நல்லொழுக்கத்திற்குக் காரணமாவான். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற ஆன்றோர் வாக்கும் அதனையே வலியுறுத்தும். ஆகையால், நாட்டை ஆளும் அரசரிடத்தும் தலைவரிடத் தும் இவ் அறுவகைக் குற்றங்கள் இருத்தல் தகாது. இக் குற்றங்கள் இல்லாத மன்னரது செல்வமே மேன்மேலும் செழித்து நிலைத்திருக்கும். அதுவே நல்வழிகட்கு உதவுவதாகும்.

'செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும். அளவிறந்த காமம் சிறுமையை விளைப்பதாகலின் அதனைச் சிறுமை

என்றே குறித்தார். வேண்டும் வழிப் பொருள் கொடாத உலோபமும், நன்மையின் நீங்கிய மானமும் அளவிறந்த உவகையும் ஆகிய மூன்றும் அரசர்க்குப் பெருங் குற்றங்களாகக் கருதப்படும். குற்றந்தரும் மானத்தை மாண்பிறந்த மானம் என்று வள்ளுவர் குறிப்பிட்டார்.

'இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு'

என்பது அவரது சொல்லமுதம்.

காமத்தால் கட்டுண்ட இலங்கை வேந்தனாகிய இராவணன், இராமனின் மனைவியாகிய சீதையிடத்துக் காதல் கொண்டான். அவளை அடைய விரும்பிய அரக்கர் கோமான் அச்சீதையை இருந்த இடத்துடன் பெயர்த்துத் தூக்கிச் சென்றான். தனது பெருநகரத்திலிருந்த அசோக வனத்தில் அரக்கியர் நடுவே அவளைச் சிறை வைத்தான். அவனது தம்பியரெல்லாம் பிறர் மனை நயத்தல் தகாதெனத் தக்க அறிவுரைகள் வழங்கியும் கேட்டானில்லை. இறுதியில் இராமனது வில்லம்பால் கொல்லப் பட்டானன்றோ! இராவணனது உடம்பை இராமனது பகழி துளைத்த விதத்தைக் கம்பர் கவினுறச் சித்திரித்தார்.

'வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும்
இடநாடி இழைத்த வாறே ?
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ? ஒருவன் வாளி'.

இராமனது கடியவேகச் சுடுசரத்தால் உடல்முழுதும் துளைக்கப்பட்டு இறந்துகிடந்த இலங்கை வேந்தனின் மனைவியாகிய மண்டோதரி அவனது மார்பில் விழுந்து புரண்டு இங்ஙனம் புலம்பிக் கதறினாள். வில்லில் வல்ல வீரனாகிய இராமனது வெங்கணை, இராவணனது உடம்பில் உயிர் இருக்கும் இடத்தைத் தேடித் தேடி இங்ஙனம் துளைத்ததோ? அல்லது சீதை என்னும் நல்லாளை உள்ளச் சிறையில் ஒளித்து வைத்த காதல், உடம்புள்ளே எங்கேனும் ஒதுங்கி மறைந்திருக்குமோ என்று ஊடுருவித் தடவித் தடவித் தேடியதோ? என்று மண்டோதரி புலம்புமாறு இலங்கை வேந்தன் உடல் இராமனது அம்புகளால் சிதைந்து புண்பட்டுக் கிடந்தது.

ஏமாங்கத நாட்டு மன்னனாகிய சச்சந்தன், 'விசயை என்னும் பெண்ணணங்கை விரும்பி மணந்தான். அவளது பேரழகில் ஈடுபட்ட அரசன் இடையறாது அவளுடன் அந்தப்புரத்தில் தங்கி இன்புற ஆசை கொண்டான். அமைச்சனாகிய கட்டியங்காரன் என்பானிடம் அரசினை ஒப்புவித்துக் காம நுகர்ச்சியில் காலத்தைப் போக்கத் தலைப்பட்டான். இதுதான் தக்க சமயமெனக் கருதிய கட்டியங்காரன், அரசினைக் கைப்பற்றித் தானே வேந்தனாக முயன்றான். விசயையின் அந்தப்புரத்தை முற்றுகையிட்டு வேந்தனைக் கொன்றொழித்தான். அளவிறந்த காமநுகர்ச்சியின் காரணமாகச் சச்சந்தன் அரசினை இழந்து, ஆருயிர் துறந்தானன்றோ! இவ் வரலாறுகளால் வரம்பிகந்த காமம், அரசர்க்கும் பெருங்குற்றமாகும் என்பது அறியப்படும்.

கோசிகன் என்னும் முனிவன் சினத்தையே தனது வடிவாகக் கொண்டவன். அவன் நீண்ட நாள் ஆற்றிய நெடுந்தவ ஆற்றலையெல்லாம், தான் கொள்ளும் அள

மிறந்த கோபத்தால் இழந்து திரிவான். பொருளாசை மிக்க உலோபிகள் தாமும் உண்ணார்; பிறர்க்கும் உதவார். அவர்களுடைய பெருஞ்செல்வத்தைக் கள்வரும் கொடியரும் எளிதாகக் கவர்ந்து செல்வர். அப்போது உலோபிகள் அனைத்தும் இழந்து உழல்வர். ஆதலின் வரம்பிகந்த கோபமும் உலோபமும் பெருங்குற்றமாகப் பேசப்பட்டன.

அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், பெற்றோர், தம்முன்னோர் ஆகியோர்க்குப் பணிந்து வணங்குதல் அறிவுடையார் இயல்பு. இன்னோரை வணங்குதல், தம் பெருமைக்கு இழுக்கு என்று எண்ணுவதே மாண் பிறந்த மானமாகும். ஒருவன் செய்ய எண்ணிய சிறந்த செயலைத் திண்ணமுறச் செய்து முடித்தல் மாண்புடைய மானத்தைக் காப்பதாகும். தகாத செயலொன்றைச் செய்யக்கருதி, அதனை முடித்தேவிடுவன் என்று முனைந்து நிற்றலும் குற்றமுடைய மானமாகக் கொள்ளப்படும். துரியோதனன் தன் உடன்பிறந்தார்களாகிய பாண்டவர் அரசினை வஞ்சகமாகக் கவர்ந்து கொள்ளக் கருதினான். எவ்விதத்திலும் பாண்டவரை நாட்டைவிட்டுத் துரத்த வேண்டும் என்ற தீயகருத்தால் சூதாடத் தொடங்கினான். அவன் மேற்கொண்ட செயலில் வெற்றி கண்டானாயினும் இறுதியில் எல்லாம் இழந்து பாரதப்போரில் உயிர் நீத்தானன்றோ! இத் துரியோதனனது செயலும் மாண்பிறந்த மானத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

எளியார்க்கு அருளுடன் உதவி மகிழ்தலும் வலியாருடன் பொருத போரில் வெற்றி கண்டு மகிழ்தலும் மாணுற்ற உவகையாகும். தக்கவரல்லாரிடத்துக் காட்டும் கழிகண்ணோட்டமே மாணா உவகையெனப்படும். பாரி

வள்ளலின் பார் பரந்த பெரும்புகழில் பொறுமை கொண்ட மூவேந்தர், அவனது பறம்புமலையை முற்றுகையிட்டனர். அவர்கள் பன்னாட்கள் முற்றுகை செய்தும் பறம்புமலைக் கோட்டை பற்றுதற்கு அரியதாயிற்று. பாரியின் ஆருயிர் நண்பராகிய கபிலர் என்னும் கவிஞர் கோமான் முற்றுகை யிட்ட மூவேந்தர்க்கும் ஓர் உபாயம் உரைத்தார். அதனைக் கையாண்ட மூவேந்தரும் யாழில் வல்ல பாண ரைப்போல் பண்ணிசைத்துப் பாடிச்சென்றனர். அவரது உரிமை மகளிரெல்லாம் விறலியரைப்போல் ஆடிப்பாடிச் சென்றனர். பாரிவள்ளலின் உள்ளம் உவகை கொள்ளு மாறு பறம்பு நாட்டைப் புகழ்ந்து பாடினர். அவரது பாடல் ஆடல்களில் உள்ளத்தைப் பறிகொடுத்த பாரி, அவர்கள் விரும்பியவாறே தனது ஆருயிரைக் கொடுத்து அளவிறந்த உவகையுற்றான். இங்ஙனம் பாரிவள்ளல் கொண்ட உவகை, அவனது உயிருக்கே இறுதியளித்த தன்றோ! இந்நிகழ்ச்சி, மாணா உவகைக்குச் சிறந்த தோர் எடுத்துக்காட்டாகும்.

மதம் என்பது செருக்கைக் குறிக்கும். கல் செல்வம், கொடை, வீரம் முதலிய காரணங்கள செருக்குக் கொள்வார் பலர். அங்ஙனம் செருக்குற்ற அனைவரும் சீரிழந்து கெடுவர். கல்வியால் செருக்குற்ற கவிஞர் பலர், தம் கட்டுரை இழந்து கெட்டொழிந்த வரலாறுகள் பல உண்டு. ஒட்டக்கூத்தர் தம் புலமைச் செருக்கால் புலவர் பலரைச் சிறையிட்டு வருத்தினர். பின்னர்ப் புகழேந்தி என்னும் புலவரால், தம் செருக் கொழிந்து சிறுமையுற்றார். வீரத்தால் செருக்குற்ற இராவணன், குபேரனை வென்று அவனது புட்பக விமானத்தில் பொலிவுடன் அமர்ந்து தென்னிலங்கை நோக்கித் திரும்பினான். விமானத்தில் ஏறி, வான

வீதியில் வரும்போது, அவனது செலவைக் கயிலாயம் தடுத்து நின்றது. செருக்குற்ற அரக்கர் கோமான் பொருக்கெனச் சினங்கொண்டான். 'எனது செலவைத் தடுத்த இம் மலையைப் பறித்தெடுத்துக் கடலில் எறிவேன்' என்று சீறினான். புட்பக விமானத்திலிருந்து இறங்கித் திரிபுரம் எரித்த விரிசடைப்பெம்மான் வீற்றிருக்கும் வெள்ளிமலையைத் தனது இருபது கரங்களாலும் அள்ளியெடுத்தான். மலை சிறிதே அசைவதைக் கண்ணுற்ற கண்ணுதற் பெருமான் கால்விரலால் சற்றே அழுத்தினான். மலையைத் தூக்கிய மாவீரனாகிய இராவணன் அதன்கீழ் அகப்பட்டு அலைகடல் துரும்பெனத் துயருற்று அலறினான். செருக்குற்ற தனது தவற்றினை உணர்ந்து சிவனைப் பணிந்தான். அவனது புகழை யாழிசையுடன் குழைத்துப் பண்ணமையப் பாடினான். இன்னிசைக்குத் தன்னருள் புரியும் ஈசன், இலங்கை வேந்தனை மன்னித்து, அவனுக்கு வடிவாளும், வாழ்நாளும் மனமுவந்து வழங்கினான்.

தேவர்கள் யாவரையும் வீரத்தால் வெற்றி கொண்ட சலந்தரன் என்பான் சிவனையும் வென்று வாகைசூட விரும்பினான். அப் பெருமான் எழுந்தருளிய கயிலாயம் நோக்கிக் கடுகி நடந்தான். அவனின் மனைவியாகிய பிருந்தை தடுத்தும் கேளாது விரைந்து சென்றான். அவனது செருக்கை அடக்க விரும்பிய சிவன், அந்தண வடிவுடன் வழியில் எதிர்ப்பட்டான். சலந்தரனை நோக்கி, "நீ எங்கே செல்கின்றாய்?" என்று வினவினான். அவன், "சிவனொடு போர்புரிந்து வெல்லுதற்குச் செல்கின்றேன்" என்று விடையிறுத்தான். அதுகேட்ட சிவன், "அஃது உனக்கு இயலுமோ? இயலுமாயின் யான் இத் தரையில் கீறும் சக்கரத்தை எடுப்பாய்" என்று சக்கரமொன்றைக்

கீறினான். அதைச் சலந்தரன் தன் தோளின்மீது எடுத்தவளவில் அஃது அவன் உடம்பைப் பிளக்கவே அவன் இறந்தொழிந்தான். இங்ஙனம் செருக்கால் அழிவுற்றோர் பலர் உளர்.

அழிவைத் தரும் அறுவகைக் குற்றங்களும் களைந்த ஆன்றோரே ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் எனப்படுவர். அவர்களே உலகில் அமரரென உயர்வுற்று வாழ்வர். இவ் இயல்பினர், தம்பால் தினையளவு குற்றம் வரினும் அதனை அவ்வளவாகக் கருதாது பனையளவாகக் கருதுவர். அதனால் வரும் சிறு பழிக்கும் பெருநாணம் கொள்வர். கொற்கையை ஆண்ட பாண்டியன் ஒருவன் ஐயத்தால் அந்தணன் வீட்டுக் கதவைத் தட்டிய சிறு குற்றத்திற்காகத், தானே தனது கையை வாளால் துணித்துக் கொண்டான். நீதியில் வழுவாத பாண்டியனது நீண்ட கை மீண்டும் பொற்கையாக வளர்ந்ததன்றோ!

ஒருவனுக்கு இறுதி பயக்கும் பகை அறுவகைக் குற்றங்களே. ஆதலால் இவற்றுள் ஒரு குற்றமேனும் தன்னிடம் வாராமல் காப்பதே வாழ்வின் பயனாகக் கருத வேண்டுமென்பார் திருவள்ளுவர். குற்றம் வருதற்கு முன்னரே அதனை அறிந்து வாராமல் தடுக்கவேண்டும். அங்ஙனம் தடுக்காவிடின் சிறு நெருப்பின் முன்னர்ச் சேர்ந்த பெரிய வைக்கோற் குவையைப்போல விரைவில் கெடுவான் என்று விளம்பினார்.

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும். ஆற்றில் வெள்ளம் வருதற்கு முன்னர் அணைகோலி வைத்தால் அவ்

வெள்ளத்தைத் தடுக்கமுடியும். வெள்ளம் வந்த பின்னர்க் கரையும் அணையும் கட்டத்தொடங்கினால் அவை நிற்றல் செய்யுமோ ?

மருத்துவன் மற்றவர் நோயைப் போக்கும் மாண்புடையன். அவனே பிணியாளனாக இருந்தால் அவன் பிறர் உற்ற பிணியை நீக்குவது இயலுமோ ? அரசன் குடிகளிடம் காணும் குற்றங்களைக் களைந்து நன்னடை நல்கும் கடமையுடையவன். அவ்வரசனே குற்றமுடையனாக இருந்தால் பிறர் குற்றம் களைவது இயலாத காரியமாகும். ஆதலின் அரசன் முதற்கண் தன் குற்றத்தைக் கண்டு நீக்கவேண்டும். அதன் பின்னர்ப் பிறர் குற்றம் காணவல்லனாயின் அவ் அரசனைக் குறை கூறுவார் யாவர்? என்று கேட்பார் வள்ளுவர்.

வெள்ளாட்டின் பால், மக்களின் வாதநோய்போக்கும் ்ல மருந்தாகும். ஆனால், வெள்ளாட்டிற்கு வாதநோய் நமாயின் அதனைத் தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் அதற்கு ல்லை. தமது குற்றத்தை நீக்காமல் மற்றவர் குற்றத்தை ாற்ற முயலும் மக்கள் வெள்ளாட்டிற்கு ஒப்பாவர் என்று உரைத்தார் முன்றுறையரையனார்.

‘தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற் கிடைப்புகுதல்—எங்கும்
வியனுலகில் வெள்ளாடு தன்வளி தீரா(து)
அயல்வளி தீர்த்து விடல்’

என்பது பழமொழிப் பாடலாகும்.

மனுச்சோழன், மைந்தனாகிய வீதிவிடங்கன் ஏறிச் சென்ற தேர்க்காலில் விழுந்து இறந்த கன்றிற்காகத் ;னது குலத்திற்கொரு மைந்தனையே அத் தேர்க்காலில்

கிடத்திக் கொன்றான். கன்றை இழந்த தாய்ப்பசு கதறுவதுபோலத் தானும் தனயனை இழந்து தவிப்பதே, மகன் செய்த குற்றத்திற்குத் தக்க தண்டனையாகும் என்று தன் குற்றம் நீக்கத் தலைப்பட்டான். அத்தகைய மனுவேந்தனது அருமந்த அரசாட்சியைச் சேக்கிழார் பெருமான் தெய்வமணக்கும் செய்யுளால் வியந்து போற்றினார். இங்ஙனம் குற்றம் நீங்கிய கொற்றவர் பலர் சிறப்பினை நற்றமிழ்க் காவியங்கள் நயந்து பாராட்டுகின்றன.

சுற்றம் சூழ வாழ்பவனே செல்வம் பெற்ற பயனைப் பெரிதும் காண முடியும். அன்பில் குறையாத சுற்றம் ஒருவனுக்கு அமையுமாயின் பல்வகைச் செல்வங்களும் அவனுக்குச் செழித்தோங்கும். உண்மையான அன்பு நிறைந்த உறவினருடன் உள்ளம் கலந்து பழகவேண்டும். அங்ஙனம் அளவளாவிப் பழகாதவன் வாழ்வு, கரை இல்லாத குளத்தில் நீர் நிறைந்ததற்கு ஒப்பாகும் என்று உரைத்தார் தெய்வப்புலவர்.

'அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்' என்றார் தாயுமானவர். காக்கை தனக்குக் கிடைத்த இரைப் பொருளைத் தனித்திருந்து உண்ண எண்ணுவதில்லை. தனது இனமாகிய பிற காகங்களையும் கரைந்து அழைத்து உடனிருந்து உண்ணும் உயரிய இயல்புடையது. அத்தகைய காக்கையைப் போன்று சுற்றம் பேணும் பெற்றியர்க்கே ஆக்கம் பலவும் பெருகும் என்றார் பெருநாவலர்.

'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

நலங்கள் பலவற்றிற்கும் காரணமான சுற்றத்தாரை ஒரு சிறு குற்றம் கண்டு வெறுத்தலும் வெகுளலும் பொருத்தமற்ற செயலாகும். ஆதலின் உறவினரை வெகுளாமல் அவர்க்கு உறுபொருள் உதவிக் காப்பவர்க்குப் பற்றுள்ள சுற்றத்தார் பலராவர். கொடையும் இன்சொல்லும் உடைய செல்வரைச் சுற்றத்தார், பலாப் பழத்தில் மொய்க்கும் ஈக்களைப்போல் வந்து பற்றுவர். குற்றமுடையாரெனச் சுற்றத்தாரை விலக்குவார், பற்றுக் கோடில்லாத பைங்கொடியென வாடுவர். ஆதலின்,

'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'

என்றார் வள்ளுவர்.

## கூ. வினையும் துணையும்

இன்பமான வாழ்வை இனிது நடாத்த, ஏதேனும் செயலொன்றை நாடி மேற்கொள்ள வேண்டும். நல்லனவே எண்ணி, நல்லனவே சொல்லி, நல்லனவே செய்தல் நல்லோர் கடமையாகும். இதனை வள்ளுவர் பெருமான், 'சான்றோர்க்குக் கடனென்ப நல்லவையெல்லாம்' என்று சொல்லி வலியுறுத்தினார்.

மக்கள் பெரும்பாலும் மேற்கொள்ளும் செயல்கள் எல்லாம் செல்வத்தை ஈட்டும் நோக்குடையனவே. பொருளீட்டுதல் ஒன்றே குறியாகக் கொள்ளும் செயல்கள் அத்துணைச் சிறப்புடையனவல்ல. பொருளுடன் அறமும் புகழும் பயக்கும் செயல்களைப் போற்றி மேற்கொள்வதே பொருத்தமுடையதாகும். ஆதலின் வள்ளுவர், வினைத் தூய்மையென ஓர் அதிகாரம் வகுத்து விளக்கியருளினார்.

எந்தச் செயலையும் இனிது செய்து முடிக்கத் துணை யாவார் சிலர் அமைய வேண்டும். சிறந்த துணைவருடன் செய்யும் செயல்கள் சீரிய பயனை விளைத்தே தீரும். அவை தூயனவாயின் செயலைப் புரிவார் சிந்தை விரும்பும் யாவும் ஒருங்கு விளையும். இதனாலேயே வள்ளுவர்,

'துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்'

என்று வகுத்தருளினார்.

வினையின் தூய்மையை விளக்க வந்த வள்ளுவர், இம்மையில் புகழும் மறுமையில் புண்ணியமும் பயவாத வினைகளை விலக்குதல் வேண்டுமென்றார். வறுமை காரண

மாகச் சிலர் சிறுமையான செயல்களைச் செய்ய முற்படுவர். செல்வச் செருக்காலும் சிலர் தகாத செயல்களை மேற்கொள்வர். ஆதலின் எந்த நிலையிலும் இழிந்த செயல்களைப் புரிய எண்ணலாகாது என்பதை வற்புறுத்த,

'என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை'

என்றருளினார் வள்ளுவர் பெருமான். மேலும், உலகில் மேன்மையடைய வேண்டும் என்று விரும்புவோர், தம் புகழ் கெடுதற்குக் காரணமான புன்மையான செயல்களைத் தவிர்தல் வேண்டும்.

தெளிவான அறிவுடையார், தாம் எத்துணைத் துன்புற நேர்ந்தாலும் இழிவான செயல்களைப் புரியார். புலி பசித்தாலும் புல்லைத் தின்பதில்லை அன்றோ! சிறு பொழுதில் கழிந்தொழியும் துன்பம் கருதி, எந்நாளும் அகலாத இழிதகவிற்கு ஆளாகார். அவர்கள் வினைப்பயனால் விளையும் துன்பங்களைத் துய்த்தாக வேண்டும் என்பதை நன்குணர்வர். ஆதலின், செய்த பின்னர்த் தாமே எண்ணி இரங்கும் இழிந்த செயல்களைப் புரியாதொழிவர். ஒருகால் சிலர் துன்ப மிகுதியால் அறிவு மயங்கிச் சிறு செயல்களைப் புரிந்துவிட்டாலும் பின்னரேனும் அத்தகையன பண்ணாதிருத்தல் நன்று என்று அறிவுறுத்தினார் பெருநாவலர்.

பருவமுதிர்ந்த பெற்றோரும், உருவின் மிக்க கற்புடைய மனைவியும், மக்களும் ஆகிய உறவினர் உறுபசியால் வருந்துவராயின் தீயன பலவும் செய்தாயினும் அவரைப் புறந்தருக என்று பிறமொழி அறநூல்கள் அறிவுறுத்தும். அவ் அறவுரை தமிழருடைய தலைசிறந்த பண்பாட்டிற்கு இழுக்கை விளைப்பது என்பதை அறிந்த வள்ளுவர்,

'ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'

என்று வழங்கிய அறவுரை மிகவும் ஏற்றமுடையதாகும். உறவினர் பலருள்ளும் பேரன்புக்குரியவள் தாயேயாவள். அன்னவள் பசியால் இன்னலுறுவதைக் காணினும் அவளது பசித்துயர் போக்கவும் பழிச்செயல் புரியலாகாது என்று புகட்டிய புலவர் திறம் போற்றற்குரியதாகும். அல்லாதார் தீவினை செய்து பழியொடு பெற்ற அருஞ் செல்வத்தினும் பழியின்றி நல்லோர் அனுபவிக்கும் நல் குரவே உயர்ந்ததாகும்.

செல்வத்தைப் பெறக் கருதிச் செய்யும் தீயவினைகள் பெரும்பாலும் முற்றுப் பெறுதலோ வெற்றி விளைத்தலோ அரிது. அவை ஒரு வகையால் நிறைவேறினும் பின்னர்ப் பெருந்துன்பத்தையே கொடுக்கும். ஒருவன், பிறர் உள்ளம் வருந்தி இரங்கக் கவர்ந்த செல்வமெல்லாம் இம்மையிலேயே அவன் வருந்தி இரங்குமாறு அகலும். தூய வினையால் துன்னிய பொருள்களை ஒருவன், முன்னர் இழந்தானாயினும் பின்னர் வந்து பெரும்பயன் விளைக்கும். பிறரை வஞ்சித்து ஈட்டிய செல்வத்தைப் பெருங்காவல் செய்தாலும் ஒருங்கே அழிந்து போகும். பச்சை மண் பாண்டத்தில் ஊற்றி வைத்த நீர், பாண்டத்தையும் சிதைத்துத் தானும் பாழாகும். அதுபோலவே தீச்செய லால் தேடிய செல்வம் தேட்டாளனையும் கெடுத்துத் தானும் கெட்டொழியும் என்று கட்டுரைத்தார் வள்ளுவர்.

'சலத்தால் பொருள்செய் தேமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று'

என்பது அவரது சொல்லமுதம் ஆகும்.

தூய வினைகளை ஆராய்ந்து செய்ய முற்படுவார்க்கு உள்ளத் திட்பம் அமைய வேண்டும். மனத் திட்பமே வினை வெற்றியடைவதற்கு உற்ற பெருந்துணையாகும். ஆதலின் 'வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்' என்றே குறித்தார் திருவள்ளுவர். ஒருவற்குப் பிற துணைகள் பெருவன்மையுடையவாயினும் மனத்திண்மை இல்லையாயின் அவற்ருல் பயனில்லையென்பார் வள்ளுவர். பிறர் அறியாத வகையில் செயலைச் செய்து முடிப்பவனே சிறந்த மனத்திட்ப முடையவன். செயல் முடிவதற்கு முன்பே, இடையில் பிறர் அறியுமாறு செயல்புரிவான் நீங்காத துன்பத்திற்கு ஆளாவான். வினை முடிவிற்கு இடையில் ஏற்படும் இன்னல்கட்கு உள்ளம் கலங்காது உறுதியுடன் செயல் புரிவார், தாம் நினைத்த பயன்கள் அனைத்தும் நினைத்தவாறே அடைந்து இன்புறுவர் என்ருர் திருவள்ளுவர்.

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்பது அவரது சொல்லமுதமாகும். உடலுழைப்பால் முதலில் உறுதுயர் வருமாயினும் அதுநோக்கி உள்ளந் தளரக் கூடாது. முடிவின்கண் இன்பந்தரும் வினையைத் துணிவுடன் செய்து முடித்தல் வேண்டும். அத்தகைய வினைத் திட்பமுடையவரையே உலகம் வியந்து போற்றும் என்று உரைத்தருளினுர் வள்ளுவர்.

வினை செய்யத் தொடங்குமுன் இது தப்பாது என்னும் துணிவினைப் பெறும்வரை ஆராயவேண்டும். துணிந்த பின்னும் எண்ணிக்கொண்டிருப்பது இழுக்கைத் தரும். துணிவு பெற்ற வினை, காலத்தாழ்வினுல் அழி வெய்துமென்பார் வள்ளுவர். காலம் நீட்டித்துச் செய்யத்

தகுந்த வினைகளை அவ்விதமே செய்யலாம். காலம் தாழ்க்காது விரைந்து முடிக்கத் தகுந்த வினைகளை முனைந்து முடித்தலும் வேண்டும்.

ஒருவன் வினை செய்யுங்கால் பொருள், கருவி, காலம், வினை, இடம் என்ற ஐந்தினையும் தெளிவுற ஆராய்ந்து செய்தல் வேண்டும். வினையை முடித்தற்கு வேண்டிய முயற்சியும், அதற்கு வரும் இடையூறும், அதனை விளக்கி முடித்தால் விளையும் பெரும் பயனும் தெளிவுறத் தெரிதல் வேண்டும். இங்ஙனம் பல்வகையானும் எண்ணித் துணியும் வினைக்குத் துணையாக நிற்பவரும் சிலர் வேண்டும். அன்னவர் இயல்புகளைப் பெரியாரைத் துணைக் கோடல் என்ற பகுதியில் பேசுகின்றார் பெருநாவலர்.

வினை செய்யத் துணையாவார் காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்னும் மூவிரு குற்றங்களும் முறைமையின் நீக்கியவராக இருத்தல் வேண்டும். உலோபத்தையே கடும்பற்றுள்ளம் என்றும் இவறன்மை என்றும் குறிப்பர். மாண்பிறந்த மானமே குற்றமாகக் கொள்ளப்படும். வரம்பிகந்த உவகையே பெருங்குற்றமெனப் பேசலுறும். இத்தகைய அறுவகைக் குற்றத்தின் நீங்கிய பெரியாரையே துணையாகப் பெறுதல் வேண்டும். அன்னார் அறத்தின் சிறப்பை அறிந்தவராகவும் பருவ முதிர்ச்சியுடையவராகவும் விளங்கவேண்டும். தெய்வத்தாலும் பிற மக்களாலும் ஏற்படும் துன்பங்களை நீக்கும் வகையினைத் தெரிந்து நீக்குதல் வேண்டும். பின்னர் அன்ன துன்பங்கள் வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல திறமையுடையராய் இருத்தல் வேண்டும். அத்தகைய பெரியாரை ஒருவன் துணையாகப் பெற்றால் அதுவே அரிய பேறாக மதிக்கப்படும்; வன்மையுள் எல்லாம் தலையாகவும் அமையும்.

தக்காரைத் தனது இனத்தவராகப் பெற்றவனைப் பகைவர் யாதும் செய்ய முடியாது. துணையாக நின்று தூய வழிகாட்டும் நல்லோரைப் பெறுதவன் பகைவர் இல்லையாயினும் தானே அழிவான். முதற்பொருள் சிறிதும் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியமும் இல்லை. அதுபோலவே வினை செய்யும் ஒருவற்கு வினையும் இடையூற்றைத் தாங்கும் தக்கார் துணை இல்லையாயின், அவ்வினை வெற்றியுறுவதில்லை. ஆதலின் அனைவரும் பெரியார் துணையைப் பேணிக் கொள்ளுக; இன்றேல் ஒருவன் தான் தனியனாயிருக்கப் பலரோடும் பகை கொள்ளுதலைப் போன்று பதின்மடங்குத் தீமை பல்கும் என்று அறிவுறுத்தினர் திருவள்ளுவர்.

'பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்'

என்பது அவரது சொல்லமுதம் ஆகும்.

தலைமை நிலையம்:

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள்:

திருநெல்வேலி-6.

மதுரை-1. கோயமுத்தூர்-1.

கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

விலை ரூ. 4-00

மேலுறை திருவரங்கனார் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.